# புதிய ஜெர்மனியில்

OFFICE OF THE DIRECTOR OF PUBLIC LIBRARIES
4
66
MADRAS-6

நெ. து. சுந்தரவடிவேலு

வானதி பதிப்பகம்
தி. நகர் சென்னை 17

'ஜி. டி. ஆர்.—இந்திய நட்புறவுக் கழகம்' நான் பலவற்றையும் காண உதவிற்று. பொதுவாக அக் கழகத்திற்கும், சிறப்பாக அதன் செயலர் தோழர் கேஷருக்கும் நான் நன்றியுடையேன்.

அங்கே, நான் கண்ட சிறப்புகள் பல; வளர்ச்சிகள் பல; அவற்றிலெல்லாம் சிறந்தது, பொது மக்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரவலான நம்பிக்கை. அந்நம்பிக்கை, பாலர் கண்களிலும் ஒளிவிடுகிறது; விருத்தர் விழிகளிலும் வீசுகிறது.

ஆலைத் தொழிலாளரின் வாழ்க்கைத் தரமும் பண்ணையாட்களின் வாழ்க்கை வசதிகளும் ஒரு நிலையாக நன்னிலையில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்.


புதிய ஜெர்மனியில் எல்லா நிலைக் கல்வியும் இலவசம். எந்த வயதிலும் கல்வியை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன. எல்லார்க்கும் தொழிற் பயிற்சியெனும் ஊட்டங் கலந்த பள்ளிப்படிப்பு கட்டாயமாக உண்டு.

ஆண்களைப் போல் பெண்களும் அறிவு ஆற்றலில் வளர்ந்து சரிநிகர் சமானமாக வாழ்கிறார்கள்.

கல்வியிலும் தொழிலிலும் முன்னேறியுள்ள சமதர்ம நாடாகிய 'ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு', இந்தியாவுடன் நட்புறவு கொண்டுள்ள நாடு. அங்கு நான் கண்டவற்றைப் பற்றி எழுதும்படி, என் இனிய நண்பரும் 'தினமணி கதிர்' ஆசிரியருமான திரு சாவி அவர்கள் அழைத்தார்கள். அவரது அன்பு ஆணைக்குக் கட்டுப்பட்டு, தினமணி கதிரில் தொடர்ந்து எழுதியதால் உருவானது, 'புதிய ஜெர்மனி'யில் என்னும் இந்நூல். ஆசிரியர் 'சாவி'க்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் அதிகமாகாது.

இந்நூலை நல்ல முறையில் வெளியிடத் துணிந்த, வானதி பதிப்பக உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

நெ. து. சுந்தரவடிவேலு



# 1

விர்ரென்று பறந்தது கார். பெரிய காரல்ல; சிறிய காரே; ஆயினும் விரைவிற்குக் குறை வில்லை.

முன் இருக்கையில் அமர்ந்திருந்த என் கண்கள் 'விரைவுகாட்டி'யின் மேல் பாய்ந்தன.

'அப்பாடி!'

எண்பதற்கும் நூறுக்கும் இடையில் ஊசலாடியது, முள். என் உள்ளத்தைக் கௌவியது, அச்சம். ஐம்பது கிலோமீட்டரை நெருங்கும் போதே, 'மெல்ல; பார்த்து' என்று அடிக்கடி மந்திரிக்கும் எனக்கு, எண்பது கிலோ மீட்டருக்கும் அதிகமாக

ஓடும் காரிலிருந்தது, தலைதெறிப்பதுபோல இருந்தது.

பெர்லின் மாநகரை விட்டு, அந்த சிறிய காரில் புறப்படும்போதே, 'கச்சையைக் கட்டிக்கொள்ள வேண்டுமா?' என்று கேட்டேன். என்னைக் காரில் அழைத்துப் போகும் தோழர் கேஷர், 'வேண்டா' மென்றார். மெதுவாக ஓட்டுவாரென்று எதிர் பார்த்தேன். படுவேகத்தில் ஓட்டினார். நாங்கள் செல்லும் திக்கு நோக்கி, மூன்று வரிசைகளாக கார்கள் ஓடின.

சாலையின் அடுத்த பக்கத்தில் அதேபோல், மூன்று வரிசைக் கார்கள் பெர்லினை நோக்கிப் பறந்தன.

இரு பக்கத்துக் கார்களும் தலைதெறிக்கவே பறந்தன. எனக்கு எப்படியோ இருந்ததால்,

'எந்தக் காரும் மெல்ல ஓடக் காணோமே' என்று ஆங்கிலத்தில் கூறினேன்.

'திரு வேலு, இது ஆட்டோபான்' என்று, காரை ஓட்டிக் கொண்டிருந்த தோழர் கேஷர் கூறினார்.

'ஆட்டோபானுக்கும் மற்ற சாலைகளுக்கும் வேற்றுமை என்ன?' என்று கேட்டேன்.

'ஆட்டோபான் என்பது மோட்டார் வாகனங்கள், நெடுந்தூரத்திலுள்ள ஊர்களுக்கு விரைந்து செல்வதற்காகப் போடப்பட்ட விரைவு நெடுஞ்

சாலைகள். இவ்விரைவுச் சாலையில் எண்பது கிலோ மீட்டருக்குக் குறைவாக ஓட்டுவதுதான் குற்றம்.

"அதோ பாரும். நெடுஞ்சாலையின் நடுத்திட்டில், மஞ்சள் பெட்டி நிற்கிறதே. அது என்ன பெட்டி என்று ஊகிக்க முடியுமா?"

தோழர் கேஷரின் கேள்விக்குப் பதில் கூறினேன். மஞ்சள் பெட்டியின் மேல் படம் ஒன்று தெரிந்தது. என்ன படம்? தொலைபேசியின் மேல் பொருத்தப்பட்டுள்ள, 'வாங்கிக்' கருவியின் படம். எனவே, தொலைபேசிப் பெட்டியாக இருக்க வேண்டுமென்று ஊகித்து அதைச் சொன்னேன்.

"ஆம். நூற்றுக்கு நூறு சரி. விரைவுச் சாலை நெடுகிலும், ஐந்து கிலோ மீட்டருக்கு, ஒரு தொலை பேசிப் பெட்டி இருக்கும்.

"இரு பக்கங்களிலும் விரைந்து ஓடும் மோட்டார் பயணிகளுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு சாலையின் நடுவில் வைத்துள்ளார்கள்.

"காரில் விரைந்து செல்லும்போது, ஏதாவது நெருக்கடி ஏற்பட்டு, வெளியுதவி தேவைப்பட்டால், அடுத்துள்ள தொலைபேசியில் பேச வேண்டியதே. சாலைத் தொலைபேசியில் பேசுவதற்கு காசு போட வேண்டியதில்லை.

"விரைவுச் சாலையிலுள்ள தொலைபேசி ஒவ்வொன்றும் அண்மையிலுள்ள காவல்துறை நிலையத்தோடு தொடர்பு படுத்தப்பட்டிருக்கும். மற்ற இடங்களோடு தொடர்பு இராது. ஆபத்தில் உள்ள

வரோ அதைப் பார்த்துத் தகவல் தருபவரோ பக்கத்திலுள்ள சாலைத் தொலைபேசியை எடுத்துப் பேசினால், அது காவல் நிலையத்தோடு தொடர்பு கொள்ளும். செய்தியைக் கேட்டதும் காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள், யார் யாருடைய உதவி தேவையோ, அவர்களுக்கெல்லாம் தகவல் கொடுத்து விட்டு, விரைவுச்சாலைக்கு விரைந்து வந்து உதவுவர்.'' என்று கேஷர் விளக்கினார்.

'ஆபத்து; அப்போது விரைந்து வரும் உதவி' இப்படி பேசப் போவது, ஏதோ குமட்டுவது போல் இருந்தது.

கவனத்தை மாற்ற, கண்ணோட்டத்தை மாற்றினேன். சாலையைப் பார்ப்பதை விட்டு, சாலைக்கு அப்பால் உள்ள, மாடி வீடுகளை, புகை கக்கும் தொழில் கூடங்களை கண்டு கொண்டு வந்தேன்.

சிற்றூரொன்று தென்பட்டது. பழைய காலத்துப் பாணியில் அமைந்திருந்தது. தனித்தனி பங்களாக்கள். பெரும்பாலும் ஒரு மாடிக் கட்டடங்கள். வீடுகளின் முன்புறம் சிறிய தோட்டங்கள். அவற்றில் வண்ண வண்ணப் பூக்கள் சிரித்துக்கொண்டிருந்தன. வீடுகளின் பின்புறங்களில் சற்று அதிக பரப்புள்ள தோட்டங்கள். அவற்றில் சிறு சிறு பாத்திகள். பாத்திகளில் வெவ்வேறு வகையான பயிர் வகைகள், பச்சென்றிருந்தன.

பின்புறத் தோட்டங்களில், உயர்ந்திருந்த கம்பிகளில், படுக்கை விரிப்புகளும் உடைகளும்

வெய்யிலாறிக் கொண்டிருந்தன. எங்கும் பசுமையைக் கண்டு மகிழ்ந்த நான்,

'எத்தனை பசுமை' என்று வாய்விட்டுப் பாராட்டினேன்.

'இவ்வாண்டு வசந்தம், நல்ல வசந்தம். வசந்தத்திற்காக, எத்தனை மாதங்களாகக் காத்துக் கொண்டிருக்கிறோம் தெரியுமா? சென்ற பட்சந் தான், கல்விக்கூடங்களுக்கு, ஒரு வார வசந்த விடுமுறை கிடைத்தது' என்று கேஷர் கூறக் கேட்டு வியப்புற்றேன்.

'வசந்தத்தில் கல்விக்கூடம் போவது எளிது. அப்பருவத்தில் விடுமுறை விடுவது எதற்கு?' என்று கேட்டேன்.

''ஐந்தாறு மாதங்கள், சில ஆண்டுகளில் மேலும் அதிகமாக, பனியிலும், குளிரிலும் தாக்குப் பிடித்துக் கொண்டு, வெயிலை எதிர்பார்த்து, வேலை செய்யும் மக்களுக்கு, வசந்தத்தின் கதகதப்பையும் ஒளியையும் பச்சிலைகளின் கவர்ச்சியையும் மலர்களின் சிரிப்பையும் கண்டால் கொள்ளை மகிழ்ச்சி. எனவே, வசந்தத்தின் தொடக்கத்தில், கல்விக்கூடங்களுக்கு ஒரு வார விடுமுறை விடுகிறோம். மாணவ மாணவியர் அப்போது துள்ளிக் குதித்து ஆடுவது, அவர்கள் வளர்ச்சிக்கு நல்லது'' என்றார்.

வசந்தத்திற்கு ஒரு வார விடுமுறை என்ற புதிய செய்தியைத் தெரிந்து கொண்டே, சாலையோரத்தைக் கவனித்தபடி உட்கார்ந்திருந்தேன்.

கிராமச்சாலையொன்று. வலப்புறத்திலிருந்து வந்து, விரைவுச் சாலையில் சேரும் இடத்திற்கு வந்தோம்.

பொடியன்கள் ஐந்து பேர்களைக் கண்டேன். ஒவ்வொருவரும் தனித்தனி சைக்கிளில் சவாரி செய்து கொண்டு விரைவுச்சாலையை நெருங்கினர். சந்திப்பிற்கு வந்ததும், சட்டென்று நுழைந்துவிடவில்லை. சந்திப்பில், தங்கள் வீதியில் நின்றனர். விளையாட்டுப்பிள்ளைத் தனமாக படாரென்று விரைவுச் சாலையில் புகுந்துவிடாத பொறுப்புணர்ச்சியும் ஒழுங்கும் என் கருத்தைக் கவர்ந்தன.

இருமருங்கிலும் செழித்துப் பயிராகியுள்ள கோதுமை வயல்களையும் உருளைக்கிழக்கு தோட்டங்களையும் பார்த்து ரசித்தபடியே, இரண்டு மூன்று சிற்றூர்களைத் தாண்டினோம். ஒவ்வோர் சிற்றூரிலும் சைக்கிளில் சுற்றும் சிறுவர் சிறுமிகளைக் கண்டோம். முதல் ஊரில் பார்த்ததுபோல, மற்ற ஊர் 'வாண்டு'க்களும் பொறுப்போடு நடந்து கொண்டன. நாங்கள் சென்ற தொண்ணூறு கிலோ மீட்டர் தொலைவிலும், ஓரிடத்திலும், சட்டென்று புகுந்துவிட்ட சைக்கிளுக்காக, காரை திடீர் நிறுத்தம் செய்ய நேரிடவில்லை.

விரைவுச் சாலையில் ஓரத்தில் சைக்கிள் விடுவோருக்கென்று தனிப்பாதை உண்டு. அதை விட்டு, கார் பாதைக்குள் புகுந்து திண்டாடுபவனைக் காணவில்லை.

சாலையைக் கடந்து, மறுபக்கம் செல்லவேண்டி யிருந்தால் சாலையைக் கடப்பதற்கென்று, தடம் போடப்பட்டிருக்கும் இடங்களில் மட்டுமே ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குச் செல்வார்கள். இத்தகைய கட்டுப்பாடு எவரையும் கவரும். என்னை யும் கவர்ந்தது.

ஒழுங்கும் கட்டுப்பாடும் ஜெர்மானிய மக்களின் குருதியில் கலந்து விட்டன என்பதை முன்னர் படித்ததுண்டு. இம்முறை, கிழக்கு ஜெர்மனியில் நேரில் கண்டு உணர்ந்தேன்.

வழி நெடுகிலும் பையன்களும் பெண்களும் சுற்றிக் கொண்டோ விளையாடிக் கொண்டோ இருப்பதைக் கண்ட நான்,

"உங்கள் நாட்டில் குழந்தைகள் ஏராளமோ?" என்று கேட்டு வைத்தேன்.

"தேவையில்லாத, தீங்கான, உயிர்க் கொலை மிகுந்த, சென்ற இரண்டாவது உலகப் போரில், பல நாடுகளிலும் மக்கட் சேதம் அதிகம். ஜெர்மானி யர் உயிரிழப்பும் ஏராளம். எண்பது இலட்சம் ஜெர் மானியர் மாண்டனர். நாடோ நாசமாகிவிட்டது. தொழிற்சாலைகளோ, தரைமட்டமாகி விட்டன. பயிரோ, பாழான பூமியில், புதிதாகத் தொடங்க வேண்டியதாயிற்று.

"எவ்வளவோ உறுதியோடு, கடமையுணர் வோடு, தணியாத ஆர்வத்தோடு, பாடுபட்டு, எங் கள் நாட்டை, உலகத்தின் வளர்ந்த நாடுகளில் ஒன்றாக மாற்றியுள்ளோம்.

"இன்று எங்கள் முக்கிய தேவை மக்கட் செல்வம்.

"உலகத்தில் சில நாடுகளில், குடும்பக் கட்டுப் பாடு முக்கிய இடம் பெற்றுள்ளது. எங்கள் நாட்டிற்கு இப்போது, குடும்பப் பெருக்கம் தேவை. இதை ஊக்குவிப்பது எங்கள் திட்டங்களின் ஒரு கூறு", என்று கேஷர் கூறினார்.

இடை இடையே கேள்வி கேட்பதே பேசுபவருக்கு தூண்டுகோலாயிருக்குமென்று கருதினேன்.

"குடும்பப் பெருக்கத்திற்கு என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"வாலிபர்களை, திருமணஞ் செய்து கொள்ளவும், பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளவும் ஊக்குவிக்கிறோம். புதிதாகத் திருமணம் செய்துகொண்டவர்கள், தனிக் குடித்தனம் நடத்துவதற்கு உதவியாக, அவர்களுக்கு ஐயாயிரம் மார்க்குகள் முன் பணம் கொடுக்கிறோம். அப்பணத்தைக் கொண்டு, குடித்தனத்திற்கு வேண்டிய பொருள்களையும் தளவாடங்களையும் வாங்கிக் கொள்ளலாம். அத் தொகைக்கு வட்டி கிடையாது. முதலைக்கூட திருப்பித் தரவேண்டியதில்லை. எப்போது தெரியுமா?

"முதல் குழந்தை பெற்றதும், ஆயிரத்து ஐநூறு மார்க்குகளைத் தள்ளிவிடுவார்கள். இரண்டாம் குழந்தை பிறந்தால், மேலும், ஆயிரத்து ஐநூறு மார்க்குகள் தள்ளுபடி. மூன்றும் குழந்தையைப் பெற்றுவிட்டால், மொத்தப் பணமும் தள்ளுபடி" என்றார்.

"சரி; வீட்டுப் பொருள்களுக்குப் பட்ட கடனைத் தீர்க்க வேண்டியதில்லை. அதுவரையில் சுமை இறங்கிற்று. ஆனால் குழந்தைகளை வைத்துக் காப்பாற்றச் செலவாகுமே! அதற்கு உதவி உண்டா?" இது என் கேள்வி.

பதிலைப் பாருங்கள் :

"உண்டு; உண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் பராமரிப்புப் பணமாக, குறிப்பிட்ட தொகையை, குறிப்பிட்ட காலத்திற்கு, அரசே உதவும். பெற்றோர் பட்டினி கிடந்து, குழந்தையைக் காப்பாற்றும் அவல நிலை இங்கே இல்லை.

"மேலும், வருமான வரி விதிக்கும் போது, மொத்த வருவாயிலிருந்து, குழந்தைகள் பராமரிப்பிற்காக, உரிய தொகையை ஒதுக்கிவிட்டே, பாக்கியை கணக்கிற்கு கொண்டு வருவார்கள். நிறைய குழந்தைகள் பெற்றவர்களுக்கு, நிறைய பராமரிப்பு ஒதுக்குப் பணம்.

"எனவே, குடும்பப் பெருக்கம் பெற்றோர்க்கு பணச் சுமையாக அமையவில்லை.

"இளைய குடும்பங்கள், இரண்டொன்றோடு நிற்காது. மூன்று நான்கு பெற்றாலும் நன்மையே."

இதைக் கேட்டதும் என் மனக் குரங்கு தாவிற்று.

'இந்நாட்டில் பிறந்திருந்தால்' என்று ஏங்கிற்று.

நொடியிலே வேறு கிளைக்குத் தாவிற்று.

"அட பைத்தியமே! மணிவிழா கண்டவன் என்பது நினைவிருக்கட்டும்.

"அந்தக் காலத்தில், ஜெர்மன் நாட்டில் பிறந்திருந்தால், போர் வெறியனுக்கி, கொலைக்காரனுக்கியிருப்பார்கள். சென்ற உலகப் போரில், சுட்டு சுண்ணும்பாகியிருப்பாய். போர் வெறிக்கு ஆளாக மறுத்திருந்தால், சிறையிலே தள்ளி, சொல்லவொணுக் கொடுமைப்படுத்தியிருப்பான் இட்லர்."

இச் சிந்தனையும் உண்மையே. இது மின்னியதும், 'பிறந்த நாடே பொன்னுடு' என்று நிறைவு கொண்டேன்.



## 2

ஒன்றரை மணி நேர ஓட்டத்திற்குப் பின் பெரிய நகருக்குள் நுழைந்தோம்.

"இந்த ஊருக்குப் பலமுறை வந்திருக்கிறேன். புதுப்புது கட்டடங்களும் தெருக்களும் அடிக்கடி முளைக்கின்றன. அதனால் ஊருக்குள் நுழையும் போது வழி தவறிப் போகிறது.

"வேலு, ஒரு மணித்துளி" என்று கூறிய படியே, காரை, சாலையோரம் நிறுத்தி, வழியே நடந்து செல்வோரை ஏதோ, ஜெர்மனிய மொழி யில் கேட்டார். அவர்கள் சொன்ன பதிலைக் கேட்ட தும் சரியான சாலையிலே நுழைந்திருப்பதாக உணர்ந்தார். எனவே தோழர் கேஷர், அந்நகருக் குள் தொடர்ந்து ஓட்டினார்.

அப்பெரு நகரத்தின் பெயர் என்ன?

பாட்ஸ்டாம் என்பது அந்நகரின் பெயர். அது வரலாற்றுச் சிறப்புடையது. பண்டைக்காலத்தில், பிரஷ்ஷிய மன்னர்களின் தலைநகராக இருந்தது. இப்போது? ஜெர்மனிய ஜனநாயகக் குடியரசில் உள்ள பதினைந்து 'கௌண்டி' (பிராந்திய) களில் ஒன்றாகிய பாட்ஸ்டாம் கௌண்டியின் தலைநகராக மட்டும் இருக்கிறது.

''பதினைந்து தலைநகரங்களில் ஒன்றாக மட்டும் இருக்கும் இவ்வூருக்கு ஏன் அழைத்து வந்தீர்கள்? இங்கே என்ன சிறப்பைக் காணப் போகிறோம்?'' இக் கேள்விகளைக் கேட்டேன்.

பதில் என்ன?

''இரண்டாவது உலகப் போரின் முடிவில், தோற்ற ஜெர்மனியின் எதிர்காலத்தைப்பற்றி, ஸ்டாலின், சர்ச்சில், ட்ரூமன் ஆகிய மூன்று நாட்டுத் தலைவர்களும் கூடிப் பேசிய இடம் இந்த பாட்ஸ்டாம் நகரமே. இங்குள்ள மாளிகை ஒன்றில், மூவரும் கூடி எடுத்த முடிவின் பலனே, இன்று உருவாகியுள்ள கிழக்கு ஜெர்மனியாகும். எனவே புதிய ஜெர்மனியின்—உலக வழக்கில் கிழக்கு ஜெர்மனியின்—அரசியல் சட்டப்படி, ஜெர்மனிய ஜனநாயகக் குடியரசின்—வரலாறு தொடங்குமிடம் இந் நகரமே. எனவே, வெளிநாட்டிலிருந்து வரும் விருந்தினர்களுக்கு இந்நகரையும் இங்குள்ள மாளிகைகளையும் காட்டுவது வழக்கம்.''

அதன்படி என்னையும் அங்கு அழைத்துக் கொண்டு போய் காட்டினார், தோழர் கேஷர்.

தோழர் கேஷர் யார்? அவர் ஜி. டி. ஆர்—தென்னாசியக் கழகத்தின் செயலர். இக்கழகம், பல்லாண்டுகளாக புதிய ஜெர்மனிக்கும் தென்னாசிய நாடுகளுக்கும் இடையே நட்புறவை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளது. அண்மையில் உருவான ஜி.டி.ஆர்-இந்தோ கழகத்தின் செயலராகவும், கேஷர் செயல்படுகிறார். நல்ல ஆங்கிலம் பேசுகிறார். சரியான உச்சரிப்போடு பேசுகிறார். அவர், இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் தில்லியில் நடந்த அனைத்திந்திய இந்தோ—ஜி. டி. ஆர். நட்புறவு மாநாட்டிற்கு வந்து கலந்து கொண்டார். மொத்தத்தில் வாஞ்சையுள்ள நல்ல மனிதர்.

பாட்ஸ்டாம் நகருக்குள் நுழைந்த சில நிமிடங்களில், கேஷர், பெரியதொரு கட்டடத்தைக் காட்டி அதுவே 'டவுன்ஹால்' என்று சொன்னார். உலகப் போரில் அது இடிந்ததாகவும் கூறினார். புதிய குடியரசு ஏற்பட்ட பிறகு அதை மீண்டும் புதுப்பித்து கட்டப்பட்டதாக எடுத்துரைத்தார்.

அக்கட்டடமோ இக்கால பாணியில் இல்லை. பழைய காலக் கட்டடக் கலையின் மரபில் கட்டப்பட்டிருப்பதாகத் தோன்றிற்று.

புதியதாகக் கட்டிய 'டவுன்ஹாலை' இக்கால பாணியில் ஏன் கட்டவில்லை என்ற ஐயம் முளைத்தது. அதை அவரிடம் வெளியிட்டேன்.

'நெடுங்காலமாக இருந்த, பழைய வரலாற்றோடு தொடர்புடைய கட்டடங்களைப் புதுப்பிக்கும் போது, பழைய தோற்றமே கொடுக்கும்படி கட்டுவதே அவர்கள் முடிவு' என்று சொன்னார். இது சரியான முடிவாகவே எனக்குத் தோன்றிற்று. உங்களுக்கு எப்படியோ?

டவுன்ஹாலைத் தாண்டிய சில நிமிடங்களில் பெரிய சோலை ஒன்றுக்குள் நுழைந்தது கார். சோலைக்குள், நல்ல தார் போட்ட சாலை. பறந்தது, கார்.

சோலையின் நடுவில் பெரியதொரு வீட்டின் முன்னே வந்து சேர்ந்தோம். வீட்டின் ஓர் பக்கம் பேருந்து வண்டிகள் பல நின்றுகொண்டிருந்தன. மறுபக்கம் ஏராளமான கார்கள். கார்கள் நின்ற பக்கம், காலியிடமொன்றைக் கண்டுபிடித்து, அங்கே காரை நிறுத்திப் பூட்டினார்.

வீட்டின் வெளியே பெருங்கூட்டம். உள்ளேயும் அப்படி என்பது உள்ளே சென்ற பிறகு தெரிந்தது.

கூட்டத்தைக் கவனித்தேன். பல்வேறு நாட்டவர்களின் சாயல்களைக் கண்டேன். ஜெர்மனியர் மட்டுமல்லாது, பிற நாட்டவர்களும் கூட்டம் கூட்டமாக வந்து போவதாகத் தோன்றிற்று.

வார விடுமுறைகளாகிய, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில், பல நாட்டவர்களும் ஏராளமாக வந்து போவதாகச் சொன்னார். செக்கோஸ்லாவாகியா, போலந்து ஆகிய இரண்டும் கிழக்கு ஜெர்ம

னிக்கு அண்டை நாடுகள்; நட்பு நாடுகளும். அந் நாடுகளிலிருந்து கிழக்கு ஜெர்மனிக்கு வர, 'விசா' நுழைவுச் சீட்டு தேவையில்லையாம். எனவே அவ் விரு நாடுகளிலிருந்து அநேக பேருந்து வண்டிகளி லும் கார்களிலும் பயணிகள் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

நாங்கள் சேர்ந்திருக்கும் வீடு எது தெரியுமா? அது வீடல்ல; மாளிகை. ஜெர்மனிய மன்னன் கெய்சர் இரண்டாம் வில்ஹெம் என்பான் தன் பட் டத்து இளவரசனுக்கு கட்டி வைத்த மாளிகை அதுவாகும். அம்மாளிகையின் முன்னே வந்து சேர்ந்தோம்.

தோழர் கேஷர், வரிசையில் நின்று, பணம் கொடுத்து, நுழைவுச் சீட்டுகளைப் பெற்றார். உள்ளே போவோரை, சிறுச்சிறு குழுக்களாக்கி அழைத்துப் போனார்கள். அழைத்துப் போகும் வழிகாட்டி, அம்மாளிகையின், அறைகள் சில வற்றை ஒவ்வொன்றாகக் காட்டி விளக்கிக் கொண்டு போனார். சில அறைகளை மட்டும் காட்டுவானேன். முத்தலைவர்களாகிய ஸ்டாலின், சர்ச்சில், ட்ரூமன் ஆகியோர் இருந்து கூடி முடிவு செய்த அறைகளன்றோ வரலாற்றுச் சிறப்புடை யவை? அவற்றையே காட்டுகிறார்கள்.

நாங்களும் உள்ளே சென்று பார்த்தோம். ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தாம் ஆண்டு தலைவர்கள் மாநாடு கூடிய போது, அவ் வறைகளில், மேசை, நாற்காலி ஆகியவை, எங்

கெங்கு இருந்ததோ, அப்படியே இப்போதும் வைத்துக் காப்பதாக வழிகாட்டி கூறினர்.

மாநாட்டிற்கு வந்திருந்த ஒவ்வொரு நாட்டுக் குழுவிற்கும் தனித்தனி அறை ஒதுக்கியிருந்தார்கள். அமெரிக்கக் குழு இருந்த அறையின் சுவரில் சில வரைபடங்களைக் கண்டேன். அவை என்ன வென்று கேட்டேன்.

அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி, ஜெர்மனியை பழையபடி இணைந்த, ஒன்று பட்ட நாடாக விட்டு வைக்க விரும்பவில்லை. தோற்ற பிறகும் அப்படி விட்டு வைப்பது, பிற்கால இராணுவப் பெருக்கத்திற்கும் அதனால் உலகப் போருக்கும் காரணமாகக் கூடும் என்று அஞ்சினாராம். அந்நாட்டை, சிறு சிறு நாடுகளாகப் பிளந்து விடுவதே, ஜெர்மனியின் இடுப்பொடிக்கும் வழி என்று கருதினாராம். எப்படி எப்படியெல்லாம் ஜெர்மனியைக் கூறு போடுவதென்பதைப் பற்றி வெவ்வேறு வரை படங்களை ஆயத்தஞ் செய்து, அம்மாநாட்டிற்குக் கொண்டு வந்தாராம்.

ஜெர்மனியைத் துண்டாட சோவியத் நாட்டின் தலைவர் ஸ்டாலின் ஒப்பவில்லை. இராணுவ ஆதிக்கத்தின் பல்லைப் பிடுங்க வேண்டும். நாஜிக் கட்சியைச் சேர்ந்தவர்களை பொறுப்பான எல்லாப் பதவிகளிலிருந்தும் எடுத்து விட வேண்டும். போர்க் கருவிகளைச் செய்து குவித்து, குபேரர்களாவதற்காக, இரு முறை உலகப் போரை மூட்டி விட்ட அமைப்புகளைக் கலைத்து விட வேண்டும்.

எதிர்கால ஜெர்மனி இராணுவ மயமாவதற்கு வாய்ப்பில்லாதபடி வேண்டிய நடவடிக்கைகளை யெல்லாம் எடுக்க வேண்டுமே ஒழிய, ஜெர்மனி யைப் பிளவுபடுத்தக் கூடாது என்பது சோவியத் ஒன்றியத்தின் கட்சி.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந் தாம் ஆண்டு ஆகஸ்டு இரண்டாம் நாள், மூன்று தலைவர்களும் கூடி கையெழுத்திட்ட உடன்படிக் கைக்குப் பெயர், பாட்ஸ்டாம் உடன்படிக்கை என் பதாகும். ஜெர்மனியை, பிளவுபடுத்தாமல், முந் தைய உருவிலேயே வைத்து, படைப் பெருக்கத் திற்கு வழியில்லாமல் செய்து விடுவது என்ற அடிப்படையில் அவ்வுடன்படிக்கை ஏற்பட்டது. இவற்றையெல்லாம் எங்களுக்கு—பார்வையாளர் களுக்கு சுருக்கமாக சொல்லப்பட்டது.

அப்படியாயின் இரு ஜெர்மனிகள் இன்று இருப்பானேன்? இக் கேள்வி பிறந்தது எங் களுக்கும். இது பெரிய கதை. சென்ற இருபத் தேழு ஆண்டுகளில் ஏற்பட்ட ஐரோப்பிய அரசியல் சிக்கல்களின், இராஜதந்திர சதுரங்கத்தின் விளைவு கள் இவை.

இரண்டாம் உலகப் போர் ஓய்ந்த போது, ஜெர்மன் நாடு, நான்கு நாட்டுப் படைகளின் ஆட்சிக்குள் சிக்கியிருந்தது. இப்போதைய ஜெர் மனிய ஜனநாயகக் குடியரசு அன்று, சோவியத் படையின் கையில் இருந்ததாம். மேற்கு ஜெர்மனி,

அமெரிக்க, ஆங்கிலேய, பிரஞ்சுப் படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்ததாம்.

கிழக்குப் பகுதியில், போர்க் கருவி முதலேகள் பிறவாதபடி ஒரு அரசியல் அமைப்பை ஏற் படுத்திக் கொள்ள சோவியத் நாடு உதவிற்று.

முதலாளித்துவ பொருளாதார அடிப்படையில் அமைந்தவை, மேற்குப் பகுதியில் ஆதிக்கம் புரிந்த நாடுகள். எனவே, சோஷியலிசத்திற்கு எதிராக, முடுக்கி விடும் உள் நோக்கத்தோடு, முதலா ளித்துவ நேச நாடுகள், மேற்கு ஜெர்மனி தனி நாடாகப் பிரிய பல வகையிலும் உதவி செய்து விட்டதாக, கிழக்கு ஜெர்மன் மக்கள் கருதுகிறுர் கள்.

இக் கருத்துச் சுருக்கத்தைத் தெரிந்து கொண்டு, மாளிகையைப் பார்த்து விட்டு, வெளியே வந்தோம்.

அம் மாளிகை பற்றி சில தகவல்களேக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அம்மாபெரும் மாளிகையில் நூற்று எழுபத்தாறு அறைகள் உள்ளன. அறைகளில் விலே உயர்ந்த வெல் வெட்டால் மூடப்பட்ட நாற்காலிகள், சோபாக்கள், மேசைகள் உள்ளன. அலங்காரங்களுக்கும் ஓவி யங்களுக்கும் குறைவில்லே.


ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பதிமூன்ரும் ஆண்டில் தொடங்கி பதினரும் ஆண்டில் கட்டி முடித்தார்கள், இம் மாளிகையை. அடுத்த ஆண்டு

கடுமையான உலகப் போரின் போது பட்டத்திள வரசர் அங்கே குடிபுகுந்தார். கடுமையான போரின் போது, இத்தனை ஆடம்பரமா என்று கனல் கக்க ஒருவர் ஆங்கிலத்தில் கூறினது என் காதில் விழ்ந்தது.

'சிர மறுத்தல் வேந்தருக்குப் பொழுதுபோக்கு; நமக்கோ உயிரின்வாதை' என்று பாரதிதாசன் பாடியதை நினைவுபடுத்திக் கொண்டு நகர்ந்தேன்.

எண்பது இலட்சம் ஜெர்மன் மார்க்குகள் செலவு செய்து கட்டிய இம்மாளிகையைக் காலிசெய்து விட்டு, ஏராளமான பொன்னையும் பொருளையும் எடுத்துக்கொண்டு, இந்நூற்றாண்டின் நாற்பத் தைந்தாம் ஆண்டு, இளவரசர், மேற்கு ஜெர்மனிக்கு ஓடிவிட்டார் என்று கேள்விப்பட்டோம்.

'மன்னர்களின் ஆட்டம் மக்கள் திண்டாட்டம்' என்ற எண்ணத்தோடு மாளிகையை விட்டு, மக்கள் மத்தியில் சென்றோம்.



# 3

பாட்ஸ்டாம் நகரிலுள்ள 'இளவரசரின்' மாளிகையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, பகலுணவு அருந்த ஓட்டல் ஒன்றிற்குச் சென்றோம். அந்நகரில் பெரிய ஓட்டல் 'இன்டர் ஓட்டல்' என்பது. சாப்பாட்டிற்கு அங்கு அழைத்துச் சென்றார், தேஜர்.

ஓட்டலின் சாப்பாட்டுக் கூடம், பெரியதும் அழகியதும், ஞாயிற்றுக் கிழமையாகிய அன்று, அந்நகருக்கு சுற்றுலா வந்துள்ளோர் ஏராளமானவர்கள். எனவே, சாப்பாட்டுக் கூடத்திற்குள் நுழைய பலர் வரிசையில் காத்துக் கொண்டிருக்

தனர். கேஷர் என்னை ஒரு பக்கமாக நிற்க வைத்து விட்டு, நிர்வாகியிடம் விரைந்து சென்றார். அவரிடம் அவர்களுடைய ஜெர்மன் மொழியில், ஏதோ பேசினார். கூடத்திற்கு அடுத்துள்ள சிறு அறை ஒன்றில், மேசை நாற்காலிகளும், சாப்பாட்டுத் தட்டுகளும், கரண்டி, முட்கரண்டி ஆகியவையும் அமைக்கப்பட்டிருந்தன. அங்கே அழைத்துப் போய் அமரச் செய்தார். அழைப்பின் பேரில் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள தனி விருந்தாளிகளைக் காக்க வைக்காமல் உணவு பரிமாற அந்த ஏற்பாடாம்.

வெளிநாடுகளில், என்னை அழைப்பவர்களுக்கு எப்போதும், என்னால் தொல்லை அதிகம். நான் மரக்கறி உணவைத் தவிர வேறு எதுவும் சாப்பிட்டுப் பழகாதவன். மேனாட்டு ஓட்டல்களில், தனி மரக்கறி உணவு பெறுவதற்கு, முயன்று, ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்னுடைய உணவுப் போக்கைத் தெரிந்து கொண்ட, கேஷர், பரிமாறுகிறவரை அழைத்து,

'இந்த இந்திய நண்பருக்கு வெறும் மரக்கறி உணவு கொண்டு வர வேண்டும். என்ன மரக்கறி பதார்த்தம் கொடுக்க முடியும் ?' என்று கேட்டார்.

'அப்படியே ஏற்பாடு செய்து விடுகிறேன். வேக வைத்த காய்கறிகளின் மேல், அவித்த முட்டைகளைத் துண்டு போட்டுத் தூவிக் கொண்டு வரலாமா ?' என்று ஆர்வத்தோடு கேட்டார்.

எனக்கோ தேள் கொட்டியது போல் இருந்தது. படபடப்போடு 'எதிலும் முட்டை கலக்கக் கூடாது' என்றேன்.

'நல்ல மீன் இருக்கிறது. அதைச் சேர்க்கலாமா?' என்ருர்.

'போச்சுது! மீனே மாமிசமோ கூடாது' என்றேன்.

'அப்படியானுல் வெந்த காய்கறியோடு, கோழிக்கறி கொண்டு வரட்டுமா?' என்று கேட்டார்.

'அதுவும் தொடமாட்டேன்' என்றேன்.

அரிசிச் சோறும், வெந்த காய்கறிகளும், தயிரும் கொண்டு வரும்படி சொல்லியனுப்பினுர்.

'குடிப்பதற்கு என்ன கொண்டு வர?' என்று கேட்டார் பரிமாறுபவர்.

'வேலு! என்ன குடிக்க விரும்புகிறீர்கள்? பிர், ஒயின்; எது வேண்டும்?' என்று கேஷர் கேட்டார்.

'எந்த மதுவும் நான் அருந்தியதில்லை. இப்போதும் வேண்டாம்' என்றேன்.

'மதுவகைகளில் மாமிசச் சாறுகூட கலப்பதில்லை. போதையே இல்லாத ஒயின் கொண்டு வரச் சொல்லவா?' என்ருர்.

'குடிப்பதற்குத் தண்ணீர் மட்டும் போதும்' என்றேன். சிரித்தார்.

"இங்கே யாரும் தண்ணீர் குடிப்பதில்லை. பழச்சாறு அல்லது 'மினரல் நீர்' கொண்டு வரச் சொல்லவா ?"

"சாப்பாட்டிற்கு முன், ஒரு டம்ளர் பழச்சாறு சாப்பாட்டின் போது, 'மினரல் நீர்' இரண்டையும் வரவழையுங்கள். நான் மது அருந்தவில்லையே என்று, நீங்கள் மது அருந்துவதைக் கைவிட்டு விட வேண்டாம். உங்களுக்கு எந்த வகை பிடிக்குமோ அதை வாங்கிக் குடிக்கலாம். அதனால் எனக்கு ஒன்றும் சங்கடமில்லை. உங்கள் தட்டிலி ருக்கப் போகும் மாமிசமே குமட்டப் போவதில்லை. மதுவா குமட்டும் ? வேண்டியதை வாங்கிக் குடி யுங்கள்" என்றேன்.

'பீர், எனக்கு பிடித்தது. ஆனால் இப்போது குடிக்கமாட்டேன்,' என்றார்.

'பகலில் குடிப்பதில்லையா ?' என்று வினவி னேன்.

'பகலாக இருந்தாலும் குடிப்பேன். சாப்பாடு முடிந்ததும், நானே காரை ஓட்ட வேண்டுமே ; அதனால் குடிக்க மாட்டேன்.'

'போதை ஏறாத அளவு குடித்துக் கொள்ள லாமே', என்று யோசனை கூறினேன்.

பத்து பிள்ளை பெற்றவளுக்கு மலடி மருத்து வம் சொல்லுவது போல் இருக்கிறதா ! சரி சிரிக் காதீர்கள். கேஷரின் பதிலைக் கேளுங்கள்.

"பேருந்து வண்டியோ; சரக்கு வண்டியோ, காரோ ஓட்டுகிற யாரும் வண்டியை எடுப்பதற்கு முன் குடித்திருக்கக் கூடாது. குடித்து விட்டு ஓட்டுவதால் பேராபத்து விளையும். எனவே, எங்கள் சட்டம், குடித்துவிட்டு, கார் ஓட்டுவதைத் தடுக்கிறது......"

கேஷரின் விளக்கம் முடிவதற்கு முன்பே, நான் குறுக்கிட்டேன்.

ஆயிரக்கணக்கான கார்கள் இப்படியும் அப்படியும் விரைந்து ஓடிக்கொண்டே உள்ளன. அத்தனை வண்டிகளிலும், எந்த வண்டியில், குடித்து விட்டு ஓட்டுபவர் இருக்கிறார் என்பது எப்படித் தெரியப் போகிறது.

'நிதானம் தவறாத அளவிற்கு கொஞ்சம் குடித்துக் கொண்டால் என்ன தவறு? உங்கள் நாட்டில் மதுவிலக்கு இல்லை. குடித்து விட்டு கார் ஓட்டக் கூடாதென்ற அளவிற்குத்தானே கட்டுப்பாடு. அதை மீறினது எப்படித் தெரியும்? என்றால், நீங்களும், 'மினரல் நீர்' குடிக்க வேண்டாம்' என்றேன்.

"நாங்கள் சட்டம் செய்தால் அதைக் கண்டிப்பாக நடைமுறைப் படுத்துவோம். பொதுமக்கள் நலனுக்காகப் போடும் சட்டத்தை மீறுகிற எவருக்கும் மன்னிப்பு கிடைக்காது. குடித்துவிட்டு கார் ஓட்டினால் விபத்துகள் நேரிடும் என்பதற்காக கட்டுப்பாடு விதித்திருக்கிறோம். எங்கள் நெடுஞ்சாலை நெடுகிலும் போக்குவரவுத் துறை காவலர்.

கள் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். பறந்து ஓடுகிற எந்த வண்டியையும் நிறுத்துவார்கள். காரோட்டியின் வாயில் மதுமணம் வீசுகிறதா வென்று 'மோந்து' பார்ப்பார்கள். மது நாற்றம் அடித்தால், அதற்கான சோதனைக் கூடத்திற்கு அழைத்துப் போய், சோதனை செய்வார்கள். குடித்திருப்பதாகத் தெரிந்தால் கார் ஓட்டும் 'லைசென்ஸை' ரத்து செய்து விடுவார்கள் என்று கேஷர் விளக்கினார்.

அய்யய்யோ, பெரியவர்களுக்குச் சலுகை இல்லாத நாடு என்ன நாடு?

வியப்போடு, 'நீங்கள் பெரிய புள்ளியாயிற்றே! உங்களைக்கூடவா, நிறுத்தி சோதிப்பார்கள்' என்று அசட்டுக் கேள்வியைக் கேட்டு வைத்தேன். அவர் புன்னகை பூத்தார்.

'எந்த பெரிய புள்ளியும் சட்டத்தின் கட்டை உடைத்து விட முடியாது. எல்லோரும் அதற்கு அடங்கியாக வேண்டும்', என்று கூறிவிட்டு தனக்கும் சாறும், நீரும் உத்திரவிட்டார்.

என் சிந்தனை, எங்கெங்கோ சுழன்றது.

'சட்டம் சாதாரண மக்களுக்கு; பெரிய புள்ளிகளின் பக்கம் கூட அது வராது; பெரியவர்கள் என்றாலே, விருப்பம் போல், நடந்துகொள்ள உரிமை பெற்றவர்கள்' இப்படிப்பட்ட எண்ணம், போக்கு, நடைமுறை பல ஆசிய நாடுகளிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் தலை தூக்கி நிற்பதால், அங்

கெல்லாம் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றை நிலை நிறுத்துவது கடினமாக உள்ளது. பெரியவர்கள் என்பதற்கு சட்டத்திலிருந்து எந்தவித விதிவிலக்கும் கொடுக்க மறுக்கும் ஐரோப்பிய சமுதாயங்கள் முன்னேறுகின்றன.

இந்த என் சிந்தனையைக் கலைத்தார், பரிமாறுபவர்.


அவர் கொடுத்த சோறு, தும்பை மலரைப் போல் வெண்மையாக இருந்தது.

உணவருந்திவிட்டு, பிற்பகல் பாட்ஸ்டாம் நகரிலுள்ள மற்றொரு மாளிகையைப் பார்க்கச் சென்றோம். அம்மாளிகை பிரஷ்ஷிய மன்னரது கோடைகால மாளிகை. மக்களாட்சியிலும்—சமதர்ம ஆட்சியிலும், மன்னராட்சிச் சின்னங்களை, பெருமளவு, பொறுப்போடு, காத்து வரும் போக்கு என்னைக் கவர்ந்தது.

அம்மாளிகை, ஓர் மேட்டின் மேல் அழகாகக் கட்டப்பட்டுள்ளது. ஒருபக்கம் மாடித் தோட்டங்கள், பலமட்ட நீச்சல் குளங்கள் மகிழ்வூட்டுகின்றன. இம்மாளிகை, பிரெஞ்சு நாட்டின் வார்சேல் மாளிகையைப் போல் கட்டப்பெற்றதென்று வழிகாட்டி விளக்கினார்.

மன்னரும் அவரது விருந்தினரும் இருந்த ஒவ்வொரு அறையையும் காட்டினார். ஒவ்வொன்றிலும், கவர்ச்சிமிக்க ஓவியங்கள்; அக்காலம் முதல் ஓடும் சுவர்க் கடிகாரம் ஒன்றும் காட்டப்பட்டது.

பிரெஞ்சு நாட்டின் சிந்தனைச் சிற்பி, வால் டேர், அம்மாளிகையில் வந்து தங்கியிருந்தாராம். அந்த அறையைக் காட்டியபோது மட்டும் ஏனோ பரவசமானேன்.



## 4

[illegible] உள்ள, புராதன மாளிகை [illegible] மகிழ்ந்தோம். அதன் எதிரி [illegible] களையும் பச்சைக் கம்பளம் [illegible] புல்தரையையும் அதன் நடு [illegible] குளத்தையும் கண்ட [illegible] பெர்லின் நகருக்குத் திரும் [illegible]

[illegible] யான காட்சியே. ஆங் [illegible] களைக் கடந்து வர் [illegible] விட்டு மாடிகளின் [illegible] டன்.

'தொலைக் காட்சிக் கருவி, ஏராளம் போல் தோன்றுகிறது. அப்படித்தானே?' என்று விசாரித்தேன்.

"ஆமாம். தொலைக்காட்சிக் கருவியின் மேல் எங்களுக்கு மோகம் அதிகம். நூற்றுக்கு எழுபது குடும்பங்களில் அக்கருவி உண்டு" என்று கேஷர் பதிலுரைத்தார்.

"அப்படியா! வானொலிக்கருவி உடையவர்கள் நிறைய பேரா?" இது எனது அடுத்த கேள்வி.

"ஆமாம். நூற்றுக்கு தொண்ணூற்று இரண்டு குடும்பங்களில் வானொலிப் பெட்டி இருக்கும்.

"அது மட்டுமா! நூற்றுக்கு ஐம்பத்தாறு குடும்பங்களில், 'குளிர் பதனப்' பெட்டி உண்டு. மின்சார சலவை இயந்திரம் வாங்கி வைத்துள்ள குடும்பங்கள் பாதிக்கு மேல். துல்லியமாகச் சொல்லுவதானால், நூற்றுக்கு ஐம்பத்தாறு குடும்பங்கள்" இப்புள்ளி விவரங்களை தோழர் கேஷர் கூறினார். பின்னர், கிழக்கு ஜெர்மனியைப் பற்றி வெளியிட்டுள்ள நூல் ஒன்றில் அச்சாகியுள்ள புள்ளிவிவரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். கேஷர் கூறின தகவல்கள் சரியாக இருந்தன.

மேற்கூறிய புள்ளிவிவரங்களைக் கேட்டதும் அடுத்த கேள்வி பிறந்தது.

"கிழக்கு ஜெர்மனியில் மின்சார வசதி அதிக மோ? நாட்டுப்புறங்களில்கூட மின்சார வசதி உண்டோ?"

"கிழக்கு ஜெர்மனியில் எல்லா ஊர்களுக்கும்—சிற்றூர்களுக்குக் கூட மின்சாரம் உண்டு. மின்சாரம் இல்லாத ஊரே இல்லை."

இதைக் கேட்டதும், இந்தியா முழுவதிலும் இப்போதுள்ள மின்சாரத் தட்டுப்பாடு, என் நினைவிற்கு வந்தது. அந்த நாட்டில் அத்தகைய தட்டுப்பாடே இல்லையென்று தெரிந்து கொண்டு பொறுமைப்பட்டேன். கிழக்கு ஜெர்மனி பெரும்பாலும் அனல் மின்சாரத்தையே நம்பியுள்ளது. எல்லாக் காலத்திலும், போதிய அளவு, அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய பழுப்பு நிலக்கரி அந்நாட்டில் கிடைக்கிறதாம். அதைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதால், பருவ மழை பொய்ப்பதால் ஏற்படும் நீர் மின்சாரத் தட்டுப்பாடு, அந்நாட்டில் ஏற்படுவதில்லை.

நம் நாட்டில் பருவத்தில் மட்டும் மழை. அப்பருவம் தவறிவிட்டால், பிறகு மழை வராது.

கிழக்கு ஜெர்மனியில் மழைப் பருவம் எப்போது என்று விசாரித்தேன். பனிக்காலம் தவிர மற்ற எல்லா திங்களிலும் அப்போதைக்கப்போது மழை பெய்யுமாம். இதை நான் நேரடியாக அனுபவித்தேன். ஜெர்மனியில் இருந்த ஒரு வாரத்தில்-வசந்தகாலத்தில்-மூன்று நாட்கள் திடீரென மழை பெய்தது.

உதகை, கொடைக்கானல் ஆகிய இடங்களில், கோடையில், வெய்யில் காய்ந்து கொண்டிருக்கை யிலேயே, சடசடவென்று மழை கொட்டுவது போல், அங்கேயும் பெய்தது.

கிழக்கு ஜெர்மனியக் குடும்பங்கள் பெருமள விற்கு நவீன மின்சாரக் கருவிகளை வைத்திருப் பதைக் கேள்விப்படுகிற உங்களுக்கு, அவர்கள் மாத வருவாய் எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ள அவா எழும். எனக்கு அந்த விருப்பம் ஏற் பட்டது.

கிழக்கு ஜெர்மனியில் ஆண்களைப் போலவே பெண்களும் தொழில் புரிந்து சம்பாதிக்கிறார்கள். கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து, குறைந்தது மாதம் 1000 மார்க்குகள் சம்பாதிப்பார்கள். கிழக்கு ஜெர்மனி மார்க்கின் மதிப்பு கிட்டத்தட்ட இரண்டு ரூபாய்கள்.

அவர்களுக்கு வருமான வரி உண்டா? உண்டு. அதோடு ஒவ்வொருவரும், மாதந்தோறும் 'சமூகப் பாதுகாப்பு' சந்தா கட்டவேண்டும். அது சாதா ரணமாக நூற்றுக்கு பத்து விழுக்காடு இருக்கும். ஆனால் யாரும் அறுபது மார்க்குக்கு மேல் கட்டத் தேவையில்லை.

நோய்வாய்ப்பட்டால், மருத்துவம் பார்ப்பதற் கும் மருந்து செலவிற்கும் வேண்டிய பணத்தை 'சமூகப் பாதுகாப்பு நிதி'யிலிருந்து பெற்றுக் கொள்வார்கள்.

விலைவாசி நிலவரம் எப்படி என்று கேட்டேன். அடிப்படை துய்ப்புப் பொருள்களின் விலைவாசி ஏற்றமின்றி, ஒரே சீராக கட்டுப்படுத்தப்பட்டிருக் கிறதாம். விலைவாசியைக் கட்டுப்படுத்தி வைப்பது அந்நாட்டு அரசின் முக்கிய கடமைகளில் ஒன்று.

பண்டங்களின் விற்பனை தனியார் மூலமா? அரசின் மூலமா? வேறு வழியிலா?

அரசுக்குச் சொந்தமான கடைகள் நாடு முழு வதும் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை அறு பத்து மூவாயிரம். 'துய்ப்போர் கூட்டுறவு பண்டக சாலை' முப்பத்தைந்தாயிரம் கடைகள் வைத்துள் ளது. கிழக்கு ஜெர்மனியின் சில்லரை வாணிகத் தின் மிகப் பெரும் பங்கு இந்த இரண்டு அமைப்பு களுக்குள் அடங்கிவிடும்.

சிற்சில தனிநபர் கடைகள் உண்டாம். அக் கடைகள், இவ்விரண்டு பெரிய வாணிக அமைப்பு களின் ஏஜண்டுகளாக இயங்கும். வாணிகத்தில் இடைத் தரகர்கள் இல்லை. இருந்தாற்போல் இருந்து விலை மடமடவென்று நஞ்சுபோல் ஏறி பொதுமக் களை அல்லல்படுத்துவதில்லை. திடீரெனச் சரிந்து பயிரிடுவோருக்கும் உற்பத்தி செய்வோருக்கும் கட்டுபடியாகாமல் இழப்பு நேரிடுவதில்லையாம். துய்ப்புப் பொருள்களின் விலைவாசிகளை ஒரே சீராக வைப்பதற்கு உதவியாக, அரசு, மானியம் கொடுக்குமாம்.

சமதர்ம ஆட்சியிலுள்ள நாட்டு மக்கள், மாதா மாதம் சம்பாதிப்பதை ஊதாரித்தனமாகச் செல

விட்டு விடுவார்களோ என்று ஐயம் என்னுள் எழுந்தது. அதை வெளிப்படுத்தினேன். பதில் கிடைத்தது. அதிலிருந்து, சமதர்ம சமுதாய மக்கள், ஊதாரிகள் அல்லர், என்பது தெரிந்தது. கிழக்கு ஜெர்மன் மக்கள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டில் வங்கி சேமிப்பில் வைத்திருந்த பணம் சராசரி ஆளுக்கு மூவாயிரம் மார்க்குகளாகும். அதாவது ஆறுயிரம் ரூபாய்களுக்கு மேலாகும்.

இவ்வளவுதானு? இது போதுமா என்று தோன்றும்.

இலவச மருத்துவ வசதிக்கும், ஓய்வுகால ஊதியத்திற்கும், பாதுகாப்பிற்கும், ஆண்டு தோறும் விடுமுறைச் செலவிற்கும், இலவசக் கல்விக்கும், நம்பகமான ஏற்பாடு செய்துவிட்டு, விலைவாசியும் ஏருமல் பார்த்துக் கொள்ளும்போது, இது அவ்வளவு குறைந்த சேமிப்பல்ல என்பது தெளிவாகும். மூவாயிரம் மார்க் சராசரி சேமிப்பு. சம்பாதிக்கும் வயது வராத சிறுவர் சிறுமியர் எண்ணிக்கையும் ஓய்வுகால ஊதியம் பெறுவோர் எண்ணிக்கையும் சேர்த்து வகுத்தால் வருவது, இந்த சராசரி சேமிப்பு. உழைக்கும் வயதினரை மட்டும் கணக்கில் கொண்டு பார்த்தால் இச் சேமிப்பு மூன்று பங்காக இருக்கும்.

சேர்த்த பணத்தைக் கொண்டு வீடு வாங்க முடியுமா என்று கேட்டேன்.

'தொழிலாளர் வீடு வாங்கிக் கொள்ளலாம். வாங்கிக் கொள்ளும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள்; அதற்காகக் குறைந்த வட்டியில் வங்கிகள் கடன் கொடுக்கும்' என்று கூறக் கேட்டேன்.

தெருவெல்லாம் கார்களும் மோட்டார் சைக்கில்களும் பறந்தன.

'எத்தனைய கார்கள் ஓடுகின்றனவே! எவ்வளவு கார்கள் இருக்கும்? அத்தனையும் உங்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டவையா?' என்று கேட்டேன்.

"கிழக்கு ஜெர்மனியில் பன்னிரண்டு இலட்சம் கார்களுக்கு மேல் உள்ளன. பதினைந்து பதினாறு இலட்சம் மோட்டார் சைக்கில்கள் இருக்கும்.

"எங்கள் நாட்டில் உற்பத்தியாகும் கார்கள் போதா. பிற சமதர்ம நாடுகளிலிருந்தும் கார்களை இறக்குமதி செய்கிறோம்'' என்றார் கேஷர்.

இப்படிப் பேசிக்கொண்டே சென்றதால் நேரம் போனதே தெரியவில்லை. பெர்லின் நகரம் வந்து சேர்ந்தபோது தான், நெடுந்தூரம் பயணம் செய்ததை உணர்ந்தேன். அன்றைய நிகழ்ச்சி அதோடு முடிந்தது.

அடுத்த நாள் திங்கட்கிழமை. அன்று காலை, சிற்றுண்டியை அருந்திவிட்டு, நானும், இந்தியத் தூதுக்குழுவாக வந்திருந்த ஒன்பது தோழர்களுடன் சேர்ந்து, 'கிழக்கு ஜெர்மனி—தென்கிழக்கு

ஆசியா நட்புறவுக்கழக'த்தின் தலைமை நிலையத்திற்குச் சென்றோம். அக்கழகத்தின் தலைவர் தோழர் பால் வெண்டல் எங்களை வரவேற்றார்.

தோழர் வெண்டல், சில மாதங்களுக்கு முன், புதுதில்லிக்கு வந்தார். அங்கே, இந்தோ ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவு மாநாடு நடந்தது. அம் மாநாட்டில் அவர் கலந்து கொண்டார்.

அம் மாநாட்டில் இந்தியர்களுடைய மிகுந்த ஆர்வத்தைக் கண்டதாகவும் அரசியல் முதிர்ச்சியை உணர்ந்து கொண்டதாகவும் அவர் எங்களிடம் கூறினார்.

"கிழக்கு ஜெர்மன் அரசை, உலக நாடுகள் அங்கீகரிப்பதில் இந்தியாவின் பங்கைப் பாராட்டினார். கி. ஜெர்மனியை அங்கீகரிக்கும்படி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் கையெழுத்திட்டதால், நம் பிரதமர் இந்திரா காந்தியின் கைகள் பலப்படுத்தப்பட்டன. 'உடனே அங்கீகரி' என்ற முழக்கம் இந்தியாவில் கிளம்பிற்று. பல நாடுகளுக்கும் பரவிற்று. அதன் பலன் கி. ஜெர்மனியை அங்கீகரித்த நாடுகளின் பட்டியல் நீண்டது. அதில் ஜப்பான் எண்பத்திரண்டாவதாக உள்ளது.

கிழக்கு ஜெர்மனியின் வெளிநாட்டுக் கொள்கை, வெறும் நாட்டுச் சுயநலமாக இராது. உலக அமைதியே அதன் இலட்சியம். உலக அமைதிக்கு அடிப்படை ஐரோப்பிய அமைதி. சோவியத் ஒன்றியமும்

பிற ஐரோப்பிய சமதர்ம நாடுகளும் தோழமை கொண்டிருப்பதால், இந் நூற்றாண்டில் இருபத்து எட்டு ஆண்டுகளாக அமைதி நிலவுகிறது. சமதர்ம நாடுகளின் கட்டுறவு இல்லாதிருக்குமானால், சென்ற பத்தாண்டுகளில் பலமுறை உலகப் போர் மூண்டிருக்கும்.

ஏகாதிபத்தியங்களும் போர்க் கருவி உற்பத்தி செய்யும் பெரும் முதலாளிகளும் போரை மூட்டி விடுவதிலே குறியாக இருக்கிறார்கள். எனவே அமைதியை விரும்பும் நாமெல்லோரும் ஒற்றுமையாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும்'' என்று தோழர் பொன்டல் விளக்கினார்.

இந் நூற்றாண்டு பொதுமக்கள் நூற்றாண்டு. எனவே அமைதிக்குப் பாடுபடுவதில் பொதுமக்களும் ஈடுபட்டு பெரும் பங்கு கொள்ள வேண்டும். வியட்நாம் போரில் பொதுமக்களின் ஈடுபாட்டையும் பங்கையும் பெரிதும் பாராட்டினார்.

ஆசிய நாட்டு பொதுமக்களெல்லோரும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக, உலக அமைதிக்குத் துணையாகக் குரல் எழுப்ப வேண்டும் என்றார்.

கிழக்கு ஜெர்மனியைப் பொறுத்தமட்டில், அது, விடுதலை பெற்று தலையெடுக்கும் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளின் தோழனாக இருக்கும். அடுத்த மேற்கு ஜெர்மனியிலுள்ள முதலாளிகளின் நலனை விட, புதிதாக உரிமை பெற்ற நாடுகளின், பாட்

டாளிகளின், உழவர்களின், நலனை அதிகம் பொருட்படுத்தும் கிழக்கு ஜெர்மனி என்றார். எதிர் காலத்தில் இந்தியாவும் கிழக்கு ஜெர்மனியும் பல துறைகளில் ஒத்துழைக்கலாம் என்று, நம்பிக்கை யோடு வெண்டல் கூறியதை நாங்கள் அனைவரும் ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டோம்.



# 5

“போர்க் கருவிகளைக் குறைப்பதற்கு அரசுகள் உடன்பட வேண்டும். அத்தகைய உடன்படிக்கை ஏற்பட்டால்தான் மானுடம் பிழைக்கும்; நாடுகளுக்கிடையே அமைதி நிலவும். இல்லாவிட்டால் மேலும் மேலும் நாசக் கருவிகளைச் செய்து குவிப்பதிலேயே மக்கள் இனம் பாழாகி விடும்” என்று தோழர் வெண்டல் கூறியதை ஒப்புக் கொண்டது எங்கள் உள்ளங்கள்.

“சமதர்ம நாடுகளுக்கு எதிரான ஏகாதிபத்திய சக்திகள், வெற்றி பெறும் வாய்ப்பு இல்லை.

ஐரோப்பியர்களில் பாதி பேர் சமதர்ம நாடுகளில் வாழ்கிறார்கள். ஐரோப்பிய நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு இடம் ஐரோப்பிய சமதர்ம நாடுகளிடம் உள்ளது. இவ்வளவையும் உணர்ந்து கொண்டும், முதலாளித்துவ நாடுகளின் நப்பாசை நலியவில்லை. எப்படியாவது, சமதர்ம சமுதாய முறை, இடிந்து, சரிந்து விடும் என்று நினைக்கின்றன. தங்கள் முயற்சியால் சமதர்ம முறையைத் தகர்த்து விடலாமென்று கருதிக் கொண்டு, போர் ஆயத்த முயற்சிகளைத் தளர்த்தாமல் இருக்கின்றன. இட்லர் படைபலத்திற்கு செலவு செய்ததைப் போல் ஐந்து பங்கு பணத்தை ஜெர்மன் கூட்டாட்சி (மேற்கு ஜெர்மனி) செலவு செய்கிறது. எனவே நாங்களும் அமைதியை நாடும் பிற நாடுகளும் வெகு விழிப்பாக இருக்க வேண்டும்'' என்ற போது, எங்கள் தலைகள் ஆடி ஆமோதித்தன.

''எனினும் மேற்கத்திய நாட்டவர்கள் ஏராளமாக வந்துபோக விட்டிருக்கிறோம். சென்ற ஆண்டில் எழுபத்தைந்து இலட்சம் மக்கள் மேற்கத்திய நாடுகளிலிருந்து புதிய ஜெர்மனிக்கு வந்து போயிருக்கிறார்கள். அவர்களில் முப்பத்தைந்து இலட்சம் சுற்றுலாக்காரர்கள், மேற்கு ஜெர்மனியிருந்து வந்து போனவர்கள்'', என்று கூறி, புதிய ஜெர்மனி இரும்புத்திரை நாடல்ல, என்பதை சொல்லாமல் விளக்கினார், தோழர் வெண்டல்.

இந்திய தூதுக்குழுவின் தலைவரான திரு ஜெய்தி.''இந்தியா அமைதியை நாடும் நாடு. உலகத்

தின் அமைதியின் முதல் குருவான புத்தர் தோன்றிய நாடு இந்தியா. அண்ணல் காந்தியடிகள் அவதரித்த நாடு இந்தியா.

“புதிய ஜெர்மனி, நாசிசம் முதலிய தீய ஆதிக்க சக்திகளுக்கு எதிராகப் போராடி, வெற்றி பெற்றதற்காக, இந்தியர் அதன்பால் மதிப்பு கொண்டிருக்கிறார்கள். சின்னஞ் சிறு புதிய ஜெர்மனியை பெரிய சாதனைகளையுடைய சமதர்ம ஜெர்மனியாக மாற்றியுள்ளீர்கள். இதற்கு எடுத்துக் கொண்டுள்ள காலமோ கால் நூற்றாண்டே. செயல்படும் நாட்டுப்பற்று, சலியாத முயற்சி, அயராத உழைப்பு, முறியாத உறுதி, திணறாத தியாகம், ஆகியவை உங்களுக்குத் துணை நின்றது.

“சென்ற உலகப் போரின் போது இந்தியாவில் சிறைப்படுத்தப்பட்ட உங்கள் அறிஞர்—அமைதிப் பிரியர்—பிஷர் அவர்களை விடுதலை செய்யும்படி அப்போதைய வைசிராய்க்கு எழுதியவர், மகாத்மா காந்தி ஆவார். திரு. பிஷர், காந்தியடிகளின் ஆசிரமத்தில் பல்லாண்டு தங்கியிருந்ததையும் மகிழ்வோடு நினைவு கூர்கிறோம்.

“உங்கள் பொதுமக்கள் மகிழ்ச்சியோடு காட்சியளிக்கிறார்கள்.

“சமதர்ம சமுதாயத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும் எங்கள் இந்தியாவிற்கும் புதிய ஜெர்மனிக்கும் இடையில் நட்பும், ஒத்துழைப்பும் நல்லுறவும் வளர்வதாக” என்று முடித்த போது, இரு

தரப்பிலும் பலத்த கைதட்டலைக் கண்டு மகிழ்ந்தேன்.

இலங்கையின் சார்பில் வந்திருந்த திரு பெரைரா, அடுத்துப் பேசினார். இலங்கையில் பஞ்சாலை நிறுவ புதிய ஜெர்மனி உதவியதைக் குறிப்பிட்டு நன்றி கூறினார். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு பொருளாதாரத்தில் வளர்கிறீர்களோ அந்த அளவிற்கு பிற நாடுகளுக்கு உதவி புரிகிறீர்கள். ஆகவே உங்கள் வளர்ச்சி, எங்கள் மகிழ்ச்சி. புதிய ஜெர்மனியர்கள் மெய்யான நண்பர்களாக விளங்குவதாகக் கூறி, இலங்கையின் சார்பில் வாழ்த்தினைத் தெரிவித்தார்.

செவிக்குணவில்லாத போது வயிற்றுக்கும் சிறிது ஈயப்படுமல்லவா?

இரண்டு மணி நேர செவியுணவுக்குப் பின், பகல் உணவிற்குச் சென்றோம். திரு. வெண்டல் அளித்த விருந்தினை உண்ட மகிழ்ச்சியோடு மீண்டும், தகவல் விருந்திற்குப் புறப்பட்டோம். எங்கே? திரு. வெண்டலின் அலுவலகத்திற்கா? இல்லை பின் எங்கே?

ஆசிரியர் இல்லத்திற்குச் சென்றோம். அது என்ன? சிறிய குடிலா? இல்லை. பெரிய பல மாடிக் கட்டடம்.

பெர்லின் ஆசிரியச் சங்கத்திற்கு அந்த பல மாடிக் கட்டடம் சொந்தம். அதில் மையக் கல்வி

நூல் நிலையம் இருக்கிறது. அது மட்டுமா? நூல் விற்பனை நிலையமும் உண்டு. மேலும் என்ன? சிற்றுண்டிச் சாலையும உண்டு. கருத்தரங்குகள், மறு பயிற்சிகள் நடத்துவதற்கு வேண்டிய வசதிகள் உள்ளன.

ஆசிரியச் சங்கத்தின் பொது உறவு அலுவலர் எங்கள் குழுக்குழுவை வரவேற்று, புதிய ஜெர்மனியின் கல்வி முறையையும் அமைப்பையும் விளக்கினார். அதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

"புதிய ஜெர்மனியில் கல்வி, பணம் போட்டு வாங்கவேண்டிய பொருளல்ல. எல்லோரும் பெறும் உரிமை" என்று, பெருமிதத்தோடு கிழக்கு ஜெர்மனியர் கூறியபோது, கல்லூரி இடங்களை விற்கு உரிமை கொண்டாடும் என் தாய்த் திருநாட்டையும் அதன் தலைவர்களையும் எண்ணி, நாணித் தலை கவிழ்ந்தேன்.

"புதிய ஜெர்மனியில், கல்வி, சிலருக்குக் கிடைக்கும் பரிசுப் பொருள் அல்ல. எல்லோருக்கும் கிடைக்கும் பொதுச் செல்வம். கையில் பணம் இல்லையானால் படிப்பு தடைப்படாது. கல்வி பெறுவதற்காக யாருடைய தயவிற்கும் காத்துக் கிடக்க வேண்டியதில்லை" என்று அலுவலர் கூறியதும், மகிழ்ந்தேன்.

"இங்கே எதுவரை கல்வி கட்டாயம்?" என்று கேட்டேன்.

"புதிய ஜெர்மனியில், பள்ளிக்கூடப் படிப்பு பத்தாண்டு காலம். அந்த பத்தாண்டுப் படிப்பும் கட்டாயப் படிப்பு" என்ருர்.

அடுத்த கேள்வி.

"பத்தாண்டு படிப்பும் இலவசமா?" "ஆம்; இலவசம், பள்ளிக்கூடப் படிப்பு மட்டுமல்ல; அதற்கு மேற்பட்ட படிப்பும் இலவசமே. எந்த நிலைக் கல்விக்கும் சம்பளம் கட்டத் தேவையில்லை" என்று எடுத்துரைத்தார்.

"கல்விக்கூடங்களை யார் நடத்துகிருர்கள்?" என்ற வினு எழுந்தது.

"எல்லா கல்விக்கூடங்களும் அரசுடைமை. தனியார் கல்விக்கூடங்கள் இல்லை. சமயச் சார்பிலும் கல்விக்கூடங்கள் இல்லை. எனவே செல்வர்களுக்கு அல்லது சில சமயப் பிரிவினருக்கு சிறப்பான கல்வி; ஏழைகளுக்கு கஞ்சித் தண்ணி கல்வி என்ற நிலை இல்லை."

இப்பதிலைக் கேட்டதும், பழைய நிலை எப்படி என்று அறிய விரும்பினேம். அறிந்ததைக் கூறுகிறேன்.

உலகப் போருக்கு முந்திய காலத்தில், ஜெர்மனியில், 'எல்லோருக்கும் கல்வி; தரமான கல்வி' என்ற முறை இல்லை. செல்வம் படைத்தவர்கள், வசதிகள் படைத்த தனியார் கல்விக்கூடங்களில், உயர்வான கல்வி பெற்ருர்கள், பொதுமக்களோ.

பொதுப்பள்ளிகளில், தரமில்லாத கல்வியைப் பெற்று வந்தார்கள். பெரும்பாலான கிராமப் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகள். ஒரே ஆசிரியர், பல வகுப்புகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்தார்; எனவே நாட்டுப்புற சிறுவர் சிறுமியர் கல்வியில் முதிர்ச்சி அடையவில்லை.

பழைய ஜெர்மனியின் கல்விக் கொள்கை என்ன? எல்லோருக்கும் கல்வி தேவையில்லை என்பதாகும்.

ஏருக்கு முன்னேயும் காளையைப் பூட்ட வேண்டும். பின்னேயும் இருகால் காளையை (மனிதனை)ப் பூட்டவேண்டும். சமுதாயத்தில் சிலரே, நல்ல கல்வி பெற்றால் போதும். மற்றவர்கள் மாடாக உழைக்கவும் போராடவும் பிறந்தவர்கள்.

இப்படிப்பட்ட மானுட வளர்ச்சியை மிதிக்கும் கல்விக் கொள்கையில் மற்றொரு நஞ்சும் கலந்திருந்தது. அது என்ன? ஜெர்மனிய மக்களே உயர் சாதி. அவர்களே ஆளப் பிறந்தவர்கள். மற்றவர்கள் ஜெர்மனியின் ஆட்சியில் அடங்கிக் கிடக்க வேண்டியவர்கள்.

இப்படிப்பட்ட இன அகந்தையை ஊட்டி ஊட்டியே, இட்லர், ஜெர்மனியர்களைப் போர் வெறியர்களாக்கினார். அவர்களைக் கொண்டு போரிட்டு, பல நாடுகளைப் பிடித்து, வதைத்தார். அக்கால ஜெர்மனி, நவருன தலைமையைப் பின்பற்றி, மானுடத்திற்குத் தீங்கான போர்ப் பாதையில் விரைந்து

சென்றதால், உலகத்திற்கும் துன்பம். ஜெர்மனிக்கும் நாசம்.

புதிய ஜெர்மனி தோன்றியதும் உடனடியாகச் செய்த வேலை, கல்விச் சீரமைப்பே. எல்லாக் கல்விக் கூடங்களையும் அரசுடமையாக்கி, எல்லாக் கல்விக் கூடங்களுக்கும் ஒரே வகையான பாட திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.

வசதிகள் படைத்த நகரக் கல்விக்கூடங்கள் நடத்தக் கூடிய அதே பாடத் திட்டத்தை சிற்றூர் பள்ளிகளும் நடத்துவதற்கு, அவைகளின் வசதிகளைப் பெருக்க வேண்டுமல்லவா? அப்படியே செய்தார்கள். இன்று, ஓராசிரியர் பள்ளியே இல்லை, என்று தெரிந்து கொண்டோம்.

கல்வி என்பது திகைக்க வைக்கும் சர்க்கஸ் வித்தையல்ல. வாழ்க்கைக்கு வேண்டிய, பொது அறிவையும் நுட்ப அறிவையும் சமுதாயத்தில், தொண்டு செய்யும் நற்குடிமகனாக வாழ்வதற்கு வேண்டிய மனப்போக்கையும் வேலைப் பயிற்சியையும் கொடுப்பதே கல்வி. எனவே, புதிய ஜெர்மனியில், முதல் வகுப்பு தொடங்கி பத்தாம் வகுப்பு முடிய வேலைப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். ஆறு வகுப்புகள் முடிய, பள்ளிக்கூடத்தில், வேலைப்பயிற்சியினை எல்லா மாணவ மாணவிகளும் பெறுவார்கள். ஏழாவது முதல் பத்தாவது முடிய நான்கு ஆண்டு காலம், பெறும் பயிற்சியோ, யதார்த்த தொழிற் சூழ்நிலையில் இருக்கும்.

வேளாண்மை கற்றுக் கொள்ளும் பிரிவினர் பள்ளிக்கூடத் தோட்டத்திலே பயிர் செய்யும் விளையாட்டு' காட்டமாட்டார்கள். பெரும் பண்ணைகளுக்குச் சென்று, அங்கே, மற்ற பண்ணையாட்களோடு சேர்ந்து, பயிர்த் தொழிலைக் கற்றுக் கொள்ளுவார்கள்.

பொறியியற் தொழில் கற்றுக் கொள்ளுவோர், பெரிய தொழிற் கூடங்களிலே பாட்டாளிகளோடு தோள் கோர்த்து நின்று, பொறியியற் தொழிலைக் கற்றுக் கொள்ளுவார்கள். எனவே, பத்தாவதை முடிந்த மாணவ மாணவிகளுக்கும் படிப்பும் உண்டு; தொழிற் பயிற்சியும் உண்டு.

பொதுக் கல்வியோடு வேலைப் பயிற்சியும் கலந்த கல்வி முறையே எங்கள் கல்வித் திட்டத்தின் சிறப்பு. இதுவே, எங்கள் தொழில் வளர்ச்சிக்குத் துணை, என்று அந்த ஜெர்மனியர் விளக்கிய போது, தேசப்பிதா காந்தியடிகளை எண்ணினேன். அவரது செயல் வழிக் கல்வித் திட்டத்தை எண்ணினேன். அக் கொள்கைக்கு நவீன உருவம் கொடுக்காமல், அதைச் சமாதியில் வைத்து விட்ட தீங்கை உணர்ந்தேன். அதை இன்றும் உணராத என் தாய்த் திருநாட்டின் அவலத்தை நினைத்து, கண் கலங்கினேன். நான் கலங்கிப் பயன் என்ன?



# 6

"பாலர் பள்ளிக்கூடம் முதல் பல்கலைக்கழகம் வரையில் ஒருங்கிணைந்த கல்வி முறை. நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் ஒரே வகையான கல்வி வாய்ப்பு. இந்நிலையை நாங்கள் அடைந்து விட்டோம்" என்று, பொது உறவு அலுவலர் பெருமிதத்தோடு கூறினார். அதைக் கேட்ட இந்திய தூதுக் குழுவினர், சில கேள்விகளைக் கேட்டோம்.

எங்கள் முதல் கேள்வி, "எல்லோர்க்கும் கல்வி; ஒன்றான கல்வி என்னும் நிலையை எவ்வளவு காலத்தில் எட்டிப் பிடித்தீர்கள்" என்பதாகும்.

220696
U3.553 N'13

"இன்றைய நிலையை அடைவதற்கு நாங்கள் பதினைந்து ஆண்டுகள் பாடுபட வேண்டியதாயிற்று" என்று பதிலுரைத்தார்.

இந்தியா விடுதலை பெற்று இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்த பிறகும் எல்லோர்க்கும் தொடக்கக் கல்வி—ஐந்தாண்டு கல்வி—என்னும் நிலைக்கு அருகில் கூட வரவில்லையே என்பது எங்கள் நெஞ்சில் உறுத்திற்று. எங்களுக்குள் கீழ்க் கண்ணால் பேசிக் கொண்டோம். அடுத்த இமைப் பொழுது, சமாளித்துக் கொண்டு, மற்றொரு கேள்வியை வீசினோம்.

"அவ்வளவு காலம்—பதினைந்து ஆண்டு காலம் பாடுபட வேண்டியதாயிற்றே! இடையூறுகள் பலவோ?" என்பது எங்கள் கேள்வி.

"ஆம்; பெற்றோர், பொதுமக்கள் மனப்போக்கு முதல் இடையூறாக இருந்தது. பாட்டாளிகளின் குழந்தைகளுக்கு படிப்பு வராது. உயர்ந்த கல்வி பெறுவதற்கு உரியவர்கள் மேட்டுக் குடிகளே. தலைமுறை தலைமுறையாக இத்தகைய உணர்ச்சியில் வளர்ந்து வந்த பொதுமக்கள், 'எல்லோருக்கும் கல்வி' என்பதில் நம்பிக்கை கொள்ள நாளாயிற்று. வளர்ச்சிக்குத் தடையான அம் மனப்போக்கை மாற்றுவதில் முனைந்தோம். பெருமளவு வெற்றி; ஆயினும் இம் முயற்சி மேலும் தொடர வேண்டியதாக உள்ளது.

பெற்றோரிடம் கல்வி பற்றிய உயர் உள்ளலைத் தூண்ட, நாடு தழுவிய முயற்சியில் ஈடுபட்ட போது, ஆசிரியர்களின் மனப்போக்கு கல்வியின் விரிவுக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருப்பதைக் கண்டோம்.

புதிய ஜெர்மனி உருவானபோது, கல்விக் கூடங்களில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்களில் நூற்றுக்கு எழுபது பேர் நாசிக் கொள்கைக்காரர் கள். குழு அகந்தை உடைய அவ்வாசிரியர்களைக் கொண்டு, புதிய சமதர்ம சமுதாயத்திற்கான முற் போக்குக் கல்வியைப் பரப்ப முடியாது என்பதை உணர்ந்தோம்.

நாசிக் கட்சியைச் சேர்ந்த நாற்பதாயிரம் ஆசி ரியர்களை வேறு பணிகளுக்கு மாற்றிவிட்டு, புதிய ஆசிரியர்களை அவ்விடங்களில் அமர்த்த நேர்ந் தது. நாற்பதாயிரம் புதிய ஆசிரியர்களுக்கு விரைந்து பயிற்சி கொடுத்தோம். அதோடு ஆயி ரக்கணக்கான ஆசிரியர்களின் கல்வித் தகுதியை வளர்க்கும் பொறுப்பையும் மேற்கொண்டோம்.

“இவ்வளவு பெரும்பாடுகளுக் கிடையில், பத் தாவது வகுப்பு வரையில் கட்டாயக் கல்வியாக்கு வானேன்?”

தரித்திர புத்தியின் கேள்வி இது. வளத்தின் பதிலைக் கேளுங்கள்.

“எவ்வளவுக் கெவ்வளவு பொதுக் கல்வி அதிகமாகப் பரவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு

அச் சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு நல்லது. நல்ல, பரவலான பொதுக் கல்வியே நாட்டின் முன்னேற்றத்திற்கும் — பொருளாதார முன்னேற்றத்திற்கும்—அடிப்படை. இன்றைய கல்வி, நாளைய சூழ்நிலைக்கு ஆயத்தம். நிறைய பொதுக் கல்வி உடையவனே நாளைய மாறுதல்களைச் சமாளிக்க முடியும். நிறையப் படித்திருந்தால், நிறைய சிந்தனை உரிமையுடையவனாக இருப்பான்.''

நன்றாக சிக்குவாரென்று, இன்னொரு கேள்வியைப் போட்டோம்.

''நிறையப் பொதுக்கல்வி தேவை என்பதை ஏற்றுக் கொள்ளுகிறோம். தொழிற் பயிற்சியையும் பள்ளிக்கூடத்தில் கலப்பதால் பொதுக்கல்வியின் மட்டம் குறையாதா?''

''கல்வி எதற்காக? வாழ்க்கைக்காக. எந்த வாழ்க்கைக்காக? மலரும் சமதர்ம சமுதாய வாழ்க்கைக்காகவே, கல்வி. வாழ்க்கையின் அலுவல், தொழில் கூறுகளைப் பற்றிய, அனுபவமில்லாத, சமதர்ம சிந்தனை பயன்படாது. சமதர்மக் குடிமகனாகப் போகும் இளைஞர்கள், தொழிற்கூடங்களில் பண்ணைகளில் வேலை செய்து, பழகுவதன் மூலம், ஆலையிலும் பண்ணையிலும் அன்றாட சூழ்நிலையில் சமதர்மத்தின் மெய்யுருவைக் காண முடியும். ஏதாவதொரு தொழிலை மேற்கொண்டு, வெற்றிகரமாக முடிக்கும் முயற்சியில் பெறும் பட்டறிவு மிக தேவையானது. பயிரை வளர்ப்பது எப்படி? பொருளை உற்பத்தி செய்வது எப்படி? இவற்றை

யெல்லாம் யாரோ சொல்லக் கேட்டு, தெரிந்து கொள்வது மனதில் பதியாது. தாமே ஈடுபட்ட அறிவே நிலையானது. உற்பத்தியில் இருக்கும் தடைகளை நீக்கவும் கூடித் தொழில் புரிவதில் வரும் சிக்கல்களை அறுத்து முன்னேறவும் கற்றுக் கொள்ளும் இளைஞர்கள் சமதர்ம சமுதாய பொறுப் புகளை வெற்றிகரமாக ஏற்பதற்குப் பக்குவப்பட் டிருப்பார்கள்.

ஏட்டுக் கல்வியைக் கடவுளாக்க முயன்று தோற்பதை உணர்ந்த, நாங்கள் பேச்சை வேறு பக்கம் திருப்பினோம்.

"புதிய ஜெர்மனியில் ஆசிரியர்களுக்கு என்ன மதிப்பு?"

"புதிய ஜெர்மனியில் ஆசிரியர்களுக்கு நல்ல மதிப்பு உண்டு. பிற தொழில்களில் உள்ளவர் களைப் போலவே, ஆசிரியர்களும் தங்கள் பொதுக் கல்வியின் நிலையையும், தொழில்தரத்தையும் தொடர்ந்து உயர்த்திக் கொள்ள எல்லா வாய்ப்பு களும் உண்டு. சமுதாயத்தில் நல்ல மதிப்பும் உண்டு, ஆதரவும் உண்டு.

"ஆண்டுதோறும் 'ஆசிரியர் நாள்' என்று, சிறந்த, பணிபுரிந்த, ஆசிரியர்களை அரசு பெருமைப்படுத்துகிறது.

'பெருமைக்குரிய மக்களின் ஆசிரியர்' என்னும் விருதினையும் பிற 'சிறப்பு'களையும் வழங்கும்.

பதவி உயர்வுகளும் செய்து முடித்த நற்பணிகளின் அடிப்படையில் அமையும்.

குறைந்தது ஐயாண்டு காலம் நல்லாசிரியராக விளங்கியவருக்கு கூடுதல் ஓய்வு கால ஊதியம் கிடைக்கும்.

“பெற்றோர்களுக்கும் ஆசிரியர் சமுதாயத்திற்கும் இடையில் உள்ள உறவு எத்தகையது?” என்று வினவினோம்.

“இரு பிரிவினருக்கும் இடையில் உள்ள உறவு நெருக்கமான நல்லுறவு. ஒவ்வோர் பள்ளிக்கூடத்திற்கும் ‘பெற்றோர் ஆலோசனைக் குழு’வொன்று உண்டு. அப்பள்ளிக்கூட மாணவ மாணவிகளின் பெற்றோர் அனைவருமாகக் கூடி, ‘ஆலோசனைக் குழு’வைத் தேர்ந்தெடுப்பார்கள். அக்குழு இரண்டாண்டிற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படும். குழு தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும். அத் தலைவர் அப்பள்ளியின் ஆட்சிக் குழுவின் உறுப்பினராவார். இதன் மூலம், பெற்றோருடைய கருத்துகளையும் விருப்பங்களையும் அறிந்துகொண்டு, அவற்றிற்கேற்ப ஆட்சிமுறையைச் செலுத்த முடிகிறது. தேவையான போது, பொதுமக்கள் விரும்பும் வகையில், மாணவர்களுக்கு நன்மையான முறையில் கல்வி முறையைச் சீராக்கிக்கொள்ள முடிகிறது.

“பள்ளிக்கூடம் முழுமைக்கும் பெற்றோர் ‘ஆலோசனைக் குழு’ அமைக்கப்பெற்றிருப்பதுபோல், வகுப்பு தோறும் ‘வகுப்புப் பெற்றோர் குழு’ உண்டு. இக்

குழுவிற்கும் பெற்ருேரே, உறுப்பினர்களைத் தேர்ந் தெடுப்பவர். வகுப்பு நிலையிலும் பள்ளிதோறும், பெற்ருேர்களைக் கலந்து, நடக்க ஏற்பாடு செய்துள்ளதால், கல்வியை வளர்ப்பதில் பெற்ருேர்களும் முழு ஒத்துழைப்பைக் கொடுக்கிருர்கள்.

"புதிய ஜெர்மனியில் பெற்ருேர் ஆலோசனைக் குழு பெயரளவில் நிற்பவையல்ல. மெய்யாகச் செயல்படுவன. கூடிக் கலந்து, முடிவெடுத்து, அம்முடிவுகளை நிறைவேற்றத் துணை நிற்கிருர்கள்.

"ஆசிரியர்களும் பெற்ருேர்களும் இணைந்து கல்வி வளர்ப்பதைப் போன்றே, புதிய ஜெர்மனியின் இளைஞர் நிறுவனங்களும் கல்வியாளர்களுக்கு ஆதரவாக நிற்கின்றன" என்று விவரித்தார்.

"எல்லோரும் கை கொடுப்பதால் கல்வி வளர்கிறது. நூமாக வளர்கிறது" என்பதை உணர்ந்த நான் மற்ெருரு சிறிய ஆராய்ச்சியில் முனைந்தேன்.

கல்வி முயற்சியில் எல்லோருடைய ஒத்துழைப்பும் உதவியும் கிடைப்பதால் தேர்ச்சி அதிகமாக இருக்கிறதா?

ஆம். இருக்கிறது. அநேகமாக எல்லோருமே ஒவ்வோர் ஆண்டும் ஒரு வகுப்பு தேறிவிடுகிருர்கள். யாரும் பரிந்துரைத்து மாணவர்களை மேல் வகுப்பிற்குத் தள்ளிவிடுவதில்லை; ஆசிரியர்களை மிரட்டி மேல் வகுப்புக்கு அனுப்புவதில்லை. ஆண்டு

முழுவதும் நடக்கும் சோதனைகளின் அடிப்படையில் வகுப்பு உயர்வு நடக்கிறது. காலத்திற்கிடைக்கும் பெற்ருேர் கூட்டுறவால், எந்தெந்த மாணவருக்கு எந்தெந்த பாடத்தில் அதிக கவனஞ் செலுத்த வேண்டுமோ அதற்கு ஏற்பாடு செய்ய முடிகிறது. ஆகவே எல்லோரும் தேறும் நிலை உருவாகியுள்ளது.

பள்ளியிறுதி வகுப்பாகிய பத்தாவதில்கூட நூற்றுக்கு எண்பது எண்பத்தைந்து விழுக்காடு தேறுகிருர்கள். மதிப் பெண்களை அள்ளிப் போட்டல்ல; படிக்க வைத்துத் தேற வைக்கிருர்கள்.

இது போதாது, தொண்ணூற்று ஐந்து தொண்ணூற்று ஆறு பேர் தேறுமளவிற்கு கல்வித்திறன் உயர வேண்டும் என்று பாடுபடுகிருர்கள். அதற்கு என்ன வேண்டும்?

மெல்லக் கற்கும் மாணவனும் கற்றுத் தேற உதவி செய்ய வேண்டும். அண்மையில் பள்ளிக்கூடங்களின் இயக்குனர்கள் கூடி மெல்லக் கற்போருக்குத் தனிக் கவனஞ் செலுத்தி, கூடுதலாக சொல்லிக் கொடுத்து முன்னேற்றும் முறைகளை வகுத்தனராம். அதன் விளைவாக, இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் தொண்ணூற்று ஐந்து பேராவது, முதன் முறையே, பத்தாவது தேறும் நிலை உருவாகுமாம்.

அவ்வளவு பேர் தேறினல் தாக்குப் பிடிக்க முடியுமா? அத்தனை பேருக்கு உயர் கல்வி

கொடுக்க முடியுமா? இல்லாவிட்டால் வேலையாவது கொடுக்க முடியுமா?

பத்தாவது வகுப்பு தேறுவோரில் ஐந்தில் ஒருவரே கல்லூரிக் கல்விக்குச் செல்கிறார். மற்ற நூற்றுக்கு எண்பது மாணவ மாணவிகள், கல்லூரிகளைப் படையெடுப்பதில்லை. மாறாக, மேல் தொழிற்பயிற்சிக் கூடங்களில் சேர்ந்து, இக்கால நுட்பத் தொழில்களைச் செம்மையாகக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் நிற்கும் புதிய ஜெர்மனி, எல்லோரும் கல்விக்கு உரிமையுடையவர்கள், என்ற கொள்கையை நம்பும் சமதர்ம நாடு. நூற்றுக்கு இருபது பேருக்கே கல்லூரியில் இடம் கொடுக்கிறது.

'சமதர்ம பலூனை' மட்டும் பறக்க விட்டு விளையாடும் நாமோ, பொருளாதாரத்தில் மூச்சுத் திணறும் நாமோ, உயர் கல்வியை நாட்டின் தேவைக்கு அதிகமாகப் பெருக்குவதையும் அரசியல் பகடைகளாக்கி, தேவையில்லாது, பாதி பேருக்குமேல் கல்லூரிக் கிழுத்து, காக்கவும் முடியாமல், கைவிடவும் முடியாமல் திண்டாடுகிறோம்.

"பெற்றோர் ஆலோசனைக் குழுக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவோ? விவரம் கிடைத்தது.

மொத்தமாக ஐந்து இலட்சம் பெற்றோர் ஆலோசனைக் குழுக்களில் தொண்டாற்றுகிறார்கள்.


ஒரு கோடி எழுபது இலட்சம் மக்களைக் கொண்ட சிறிய நாட்டில், - சிலரல்ல - ஐந்து இலட்சம் பெற்றோர், கல்விக்கூடங்களின் பணிகளில் அக்கறை காட்டுகிறார்கள். கூட்டங்களுக்கு வருகிறார்கள். கல்வித் திட்டங்களைப்பற்றி கலந்து யோசிக்கிறார்கள். பள்ளிக்கூட நடைமுறைகளைப் பலன் நிறைந்தனவாக்க ஒத்துழைக்கிறார்கள். அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருபது இலட்சம் பெற்றோர்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்துகிறார்கள். இதுவன்றோ பரவலான பெற்றோர் ஒத்துழைப்பு. நாளைக்கு, ஐந்து மணி நேரமே குழந்தைக்குப் பொறுப்பேற்கும் கல்விக்கூடம் மட்டுமே, தனித்து முயன்று, தரமான கல்வியைக் கொடுக்க இயலாது. குழந்தைகளை பதினைந்து இருபது மணி நேரம் தங்களிடம் வைத்துக்கொள்ளும் குடும்பங்கள் கல்விக் கூடங்களுக்குத் துணையாக செயல்பட வேண்டுமென்பதை புதிய ஜெர்மனி மெய்ப்பிக்கிறது.

என் தாய்த் திருநாடோ? உறங்குகிறது. சிலபோது விழித்தெழுந்தால், கண்ட பக்கம் அலைகிறது. எது வேர்? எது தழை? என்பதறியாது அல்லல்படுகிறது.

கல்விக்கூடம் தோறும் பெற்றோர் கழகங்கள் ஏற்படுத்த ஆங்கிலேயன் ஆண்ட போதும் முயன்றோம். அம் முயற்சி விழலுக்கு நீராயினது. அண்மைக் காலத்தில் ஏழெட்டு ஆண்டுகளாகவும்

முயல்கிறார்கள். பலன் என்ன? மலையைக் கல்லி எலியைப் பிடித்த கதையே!

“கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி, நாட்டத்திற் கொள்ளாரடி” என்று தேசிய கவி, சுப்ரமணிய பாரதியாரே, கதறின கதறல் நம்மைத் திருத்தவில்லையே!



# 7

"பத்தாண்டு பள்ளிப் படிப்பிற்குப் பிறகு நூற்றுக்கு எண்பது பேர் தொடர் தொழிற் பயிற்சிக்குச் செல்வதாகக் கூறினீர்களே; அப் பயிற்சி எத்தனை ஆண்டு காலம்?"

"தொடர் தொழிற் பயிற்சி குறைந்தது இரண்டாண்டுக் காலம். சில பயிற்சிகளுக்கு மூன்றாண்டு காலமும் தேவைப்படும்" என்றார் புதிய ஜெர்மனியர்.

அடுத்த கேள்வி,

"பல்கலைக்கழகப் படிப்பிற்குச் செல்வோர், பத்தாண்டு படிப்பு முடிந்ததும் நேரே பல்கலைக் கழகத்தில் சேரலாமா?"

"ஈராண்டு 'அபிடுர்' படிப்பு படித்த பிறகே, பல்கலைக் கழகத்தில் சேர முடியும்."

"முதல் பட்டப் படிப்பிற்கு எவ்வளவு காலம்?"

"நான்கு ஆண்டு காலம்."

"அப்படியானால் மொத்தம் பதினாறு ஆண்டுகள் படித்து முடித்த பிறகே பட்டம் பெற முடியும்."

"ஆம்."

"பல்கலைக் கழகப் படிப்பும் இலவசம் என்பதைக் குறித்துக் கொண்டேன். அங்கிலையில் மாணவர்களுக்கு வேறு உதவிகள் உண்டா?"

"உண்டு. நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு உபகாரச் சம்பளம் உண்டு. அது அவர்கள் பராமரிப்புக்குத் துணை செய்கிறது."

"பல்கலைக் கழக மாணவர்கள் ஒழுங்காக நடந்து கொள்கிறார்களா?"

"ஒழுங்கும் கட்டுப்பாடும் பிரச்சினை இல்லை. ஆண்டுக்கு ஆண்டு கல்வியின் தரத்தை எப்படி உயர்த்துவது என்பதைப் பற்றியே கல்வியாளர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்."

"சிறுவர் சிறுமியருக்கு, இளைஞர்களுக்கு, உள்ள கல்வி வாய்ப்பினைப்பற்றி தெரிந்துகொண்

டோம். முதியோருக்கு தொடர் கல்விக்கு வாய்ப்பு கள் உண்டா?''

''நிறைய உண்டு. தொழிற்சாலைகளும் பண்ணைகளும் அவற்றில் வேலை செய்வோரை பல கல்வி பெற, ஊக்குவிக்கின்றன. பகுதி நேரக் கல்விக் கூடங்களில் சேர்ந்தோ, அல்லது அஞ்சல் வழி பாடங்களைப் பெற்றோ, கல்வியின் மட்டத்தை உயர்த்திக்கொள்ள தூண்டுகிறது. பொதுக் கல்வி யில் மேலும் படித்து உயரவும், தொழில் நுட்பங் களை தொடர்ந்து கற்று, தொழில் துறையில் வளரவும், முதியோர் கல்வி முறைகளும் அமைப்பு களும் உள்ளன.''

''படித்து முடித்தவர்களுக்கெல்லாம் வேலை உண்டா? காத்துக் கிடக்க வேண்டுமா?''

''கல்வி பெறும் முதியோருக்கு ஏற்கனவே வேலை இருக்கும். கல்வி பெறும் இளைஞர்கள் அனை வருக்கும், வேலை கொடுக்கும் பொறுப்பை, அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. படிப்பு முடிய ஓராண்டு இருக்கையிலேயே, இன்னாருக்கு இன்ன இடத்தில் இன்ன வேலை என்று தெரிவித்துவிடுவார்கள். யாரும் வேலையில்லாது திண்டாடுவதில்லை.''

ஆசிரியர்களுக்கிடையில் சம்பள விகிதத்தில் நிரம்ப ஏற்றத் தாழ்வு உண்டோ என்று அறிய விரும்புகிறீர்களா? நாங்கள் இத் தகவலைக் கேட் டோம்.

"கிண்டர் கார்டன், தொடக்கப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் ஆறு நூறு மார்க்குகள் முதல் எண்ணூறு மார்க்குகள் வரை இருக்கும். பல்கலைக் கழக பேராசிரியர்களுக்கு இரண்டாயிரம் முதல் மூவாயிரம் மார்க்குகள் வரை மாதச் சம்பளமாகும். நான்கு பங்கே; அதற்குமேல் இல்லை."

"ஆம். சமதர்ம முறை என்றாலே சம்பள விகிதங்களின் ஏற்றத் தாழ்வுகளை மட்டந்தட்டுவது தானே" என்று கூறிச் சமாளித்துக் கொண்டோம்.

பள்ளிக்கூடங்களில் என்னென்ன பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள்? எம்மொழிகளில் சொல்லிக் கொடுக்கிறார்கள்?

முதல் வகுப்பில் தாய் மொழியாகிய ஜெர்மன் மொழி, கணக்கு, படம் வரைதல், இசை, விளையாட்டு, கைவேலை ஆகியவை இடம்பெறுகின்றன. ஐந்தாம் வகுப்பில் இரஷ்ஷிய மொழி கற்பிக்கத் தொடங்குகிறார்கள். இது கட்டாயம். ஏழாம் வகுப்பிலிருந்து, ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், போலிஷ் ஆகிய ஏதாவதொரு மொழி கற்பிக்கப் படுகிறது. இதில் ஒன்றை, விருப்பம்போல் கற்றுக் கொள்ளலாம்.

பூகோளமும் வரலாறும் ஐந்தாவது வகுப்பிலே தான் தொடங்குகிறார்கள். உயிரியலும் ஐந்தாம் வகுப்பில் தொடக்கம்.

பௌதீகம் கற்பிக்கிறார்களா? ஆறாம் வகுப்பிலிருந்து கற்பிக்கிறார்கள்.

வேதியல் தனிப்பாடமா? ஆம். ஏழாம் வகுப்பிலிருந்து தொடங்குகிறது. 'குடிமை' தொடங்குவதும் ஏழாவதில். உண்மையான தொழிற் பயிற்சி தொடங்குவதும் அங்கிலேயில்.

பத்தாவது வகுப்பில் 'வானியல்' தொடங்குகிறார்கள் என்று கேள்விப்பட்டு வியந்தோம். அங்கில நமக்கு எப்போது வரும் என்று பெருமூச்சு விடாதீர்கள். ஆசிரியர்களை ஆசிரியர்களாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். மாணவர்களை, மாணவர்களாகவே இயங்க விடுங்கள். பிள்ளையைச் சேர்த்ததோடு பெற்றோர் கடமை முடிந்ததாகக் கருதாதீர்கள். கல்விக் கூடங்களோடு முறையான நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு, கல்வி வளர்ப்பிற்கும் சீரமைப்பிற்கும் நெம்பு மரங்களாக விளங்குங்கள்.

வயிறு, இரு வேளை உணவை ஒரு போது ஏற்றுக்கொள்ளுமா? கொள்ளாது. மூளையும் ஒரு போது அளவோடே ஏற்றுக்கொள்ளும்.

கல்வி பற்றிய ஏராளமான தகவல்களை ஏற்றுக் கொண்டு திண்டாடினோம். பொது உறவு அலுவலருக்கு நன்றி சொல்லும் சாக்கில், இந்தியாவின் கல்வி வளர்ச்சியைப்பற்றி சிறிது பேசினேன்.

எல்லோர்க்கும் பதினான்கு வயது முடிய இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்க, நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசியல் சட்ட நெறி கூறுவதை சுட்டிக் காட்டினேன். அங்கிலே இன்னும் வெகு தூரத்தில் இருந்தாலும், விடுதலை பெற்ற இந்தியாவில் கல்விப் பெருக்கிற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளைப்போல, செய்த செலவின் அளவிற்கு, வேறு எந்த நலத்துறையிலும் முயற்சியும் செலவும் இல்லை, என்பதை எடுத்துக் காட்டினேன்.

தமிழ் நாட்டில் கல்லூரி மாணவர்களில் கூட நூற்றுக்கு அறுபது பேர்கள், எழுத்தறியாத ஏழைக் குடும்பங்களிலிருந்து வருகிறார்கள் என்பதைக் கூறி, அமைதியாக நடந்துவரும் சமுதாயப் புரட்சியை விளக்கினேன். கல்லூரியில் முதலாண்டு கல்வி இலவசமென்பதைச் சொன்னபோது எல்லோரும் வியந்தார்கள்.

புதிய ஜெர்மனியின் கல்வி முறையைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்ட பின், இந்தியத் தூதுக் குழுவினரும் இலங்கைத் தோழரும் ஜெர்மானியத் தோழர்களும் மூவருமாகச் சேர்ந்து 'காட்பஸ்' என்ற ஊருக்கு, பேருந்து வண்டியில் பயணஞ் செய்தோம்.

பல ஆண்டுகளாக மறந்து போயிருந்த பேருந்துப் பயணம் வசதியாகவே இருந்தது. வண்டி அவ்வளவு சௌகரியமாக இருந்தது.

விரிந்த நெடுஞ்சாலையில் எண்பது தொண்ணூறு கிலோ மீட்டர் விரைவில் ஓடியபடியே இரு மருங்கிலும் வேடிக்கை பார்த்துக்கொண்டு சென்றோம்.

அந் நெடுஞ்சாலை இட்லரால் போடப்பட்டதாம். போக்குவரத்து வசதியைப் பெருக்குவதற்காகப் போடப்படும் நெடுஞ்சாலை என்று மட்டுமே மக்கள் கருதினர்களாம். அண்டை நாடுகளின் மேல் விரைவாகப் பாய்ந்து படையெடுக்கச் செய்த உபாயம் என்பது பின்னரே விளங்கிற்றும்.

“கண்ணெட்டிய தூரம் வயல்கள்; இல்லாவிட்டால் அடர்ந்த காடுகள் இருப்பதாகத் தோன்றுகிறது. காட்டு வளம் அதிகமோ?” என்று கேட்டேன்.

“ஜெர்மன் ஜனநாயக குடியரசின் நிலப் பரப்பில் நூற்றுக்கு முப்பது விழுக்காடு காடுகள். காடுகளை வளர்ப்பதிலும் காப்பதிலும் தனிக் கவனம் செலுத்துகிறோம். அவை, மக்கள் மனச் சாந்தி நிலையங்களாக உள்ளன. வெப்பந் தணிக்கும் கருவிகளாக உள்ளன. நாட்டின் எழிலை வளர்க்கத் துணை புரிகின்றன. காற்று மண்டலத்தைத் தூய்மைப்படுத்த காடுகள் துணை. நகரங்களில் கூட சாலை நெடுகிலும் அழகிய மரங்களை வைத்து வளர்ப்பதைக் கவனித்தீர்களா, வேலு? காற்றுத் தூய்மைக்கும் எழிலுக்கும் அவை துணை”, என்றார் உடன் வந்த ஜெர்மனியத் தோழர்.

"காகித உற்பத்திக்கு, இக்காட்டு மரங்களின் கூழ் பயன்படுகிறதா?''

"பயன்படுகிறது. உள் நாட்டு மரக்கூழ் போதுமானதாக இல்லை. எனவே, ஸ்காண்டினேவியன் நாடுகளிலிருந்து மரக்கூழ் பெருமளவு இறக்குமதி செய்கிறோம்" என்றார் புதிய ஜெர்மானியர்.

வழியில் இரண்டொரு இடங்களில் டிராக்டர்களைக் கண்டோம்.

இயந்திர வேளாண்மை வெகுவாகப் பரவியுள்ளதாவென்று விசாரித்தேன்.

நாட்டுப் புறங்களில்கூட இயந்திரங்களின் துணையைக்கொண்டே பயிர்த்தொழில் செய்வதாக அறிந்துகொண்டோம்.

இயந்திரங்களை இயக்குவதற்குப் பண்ணை ஆட்கள் இருப்பது போலவே, தேவைப்பட்டபோது அவற்றைப் பழுது பார்க்கத் தெரிந்தவர்கள் நாட்டுப் புறங்களில் இருக்கிறார்களாம்.

'காட்பஸ்' நகரத்திற்குப் போகும் வழியில் இரண்டொரு இடங்களைச் சுட்டிக்காட்டி, அவ்விடங்களில் 'பழுப்பு நிலக்கரி'யை வெட்டி எடுப்பதாகத் தெரிவித்தார்கள். உலகத்தின், பழுப்பு நிலக்கரி' தோண்டலில் நூற்றுக்கு மூன்று விழுக்காடு, புதிய ஜெர்மனியில் கிடைப்பதாகக் கூறியபோது, நான் வாய்மூடிக் கிடக்கவில்லை. எங்கள் தமிழ் நாட்டில் நெய்வேலி என்ற இடத்தில் பழுப்பு நிலக்

கரியைத் தோண்டி எடுக்கிறோம் என்று பெருமையடித்துக் கொண்டேன்.

“ஆம். ஆம்! சோவியத் நாடு நெய்வேலி சுரங்க அமைப்பிற்கு உதவியது நினைவிலிருக்கிறது” என்று சொன்னார்.

நம்மில் பலருக்குத் தெரியாத இதை, அன்னியர் சொன்னது எனக்கு நாணமாக இருந்தது. எனவே பேச்சைத் திசை திருப்ப முயன்றேன்.

‘காட்பல் நகரைப்பற்றிக் கூறும்படி கேட்டேன்.


‘காட்பல் கௌண்டியின் தலைநகரம். காட்பல் நகரம் ஒரு பழம்பெருமை வாய்ந்தது. இது கோட்டையூர். முற்காலத்திய குறுநில மன்னர் கட்டிய கோட்டையை இன்றும் ஊர் நடுவில் காணலாம். பண்டைய வரலாற்றை நினைவுபடுத்தும் பழைய கட்டடங்களை அப்படியே பாதுகாத்து வருகிறோம்.

கோட்டையூர் சந்தையூருமாகும். முற்காலத்தில் இங்கு வாரச் சந்தை கூடும்.

பழைய நகரை இடிக்காமல், அதைச் சுற்றிப் புதிய நகரம் விரிந்துள்ளது. இக்காலத் தொழிற்கூடங்களும், நிலையான அங்காடிகளும் பல மாடி வீடுகளும் தோன்றியுள்ளன. இவ்வூரில் உள்ள செய்குளங்களை நீங்கள் பார்க்க வேண்டும். அவற்றில் சிறுவர் சிறுமியர் மூழ்கி, நீந்தி விளையா

இப்படி நகர்ப் படலம் பாடிக் கொண்டிருக் கையில், நாங்கள் ஏறி வந்த பேருந்து வண்டி 'காட்பஸ்' நகருக்குள் வந்துவிட்டது.

பேருந்து வண்டியோட்டி, வழிப்போக்கரிடம் ஜெர்மன் மொழியில் பேசி, நாங்கள் தங்க வேண் டிய ஓட்டல் இருக்குமிடத்தைத் தெரிந்துகொண் டார். இரண்டொரு மணித்துளிகளில் ஓட்டல் வாயிலில் நின்றோம்.



## 8

காட்பஸ் நகரத்தின் பெரிய ஒட்டலை அடைந்த நாங்கள், சிறிது நேரம் ஒய்வு எடுத்துக்கொண்டோம். பின்னர், எல்லோருமாக இரவு உணவை உண்டோம். எங்கள் ஜெர்மனிய நண்பர்கள் உடன் உண்டார்கள். மேனாட்டுப் பழக்கத்தை ஒட்டி, இருதரப்பிலும், நாட்டுக்கும் மக்களுக்கும் வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன.

உணவருந்திய பின், படுத்து உறங்குவதற்கு முன், வேடிக்கை பார்க்கலாமென்று எண்ணி, ஒட்டலுக்கு வெளியே வந்தேன்.

"இது என்ன? இயற்கை வெளிச்சம் இவ்வளவு பளிச்சென்று இருக்கிறதே! வேலு! உன் கடிகாரத்

தைப் பார். அதிலும் பத்துமணியா'' என்று கேட்டார் ஜெய்தி.

என் கடிகாரம் நின்று நின்று ஓடுவதல்ல. அதுவும் பத்து மணி காட்டுவதைப் பார்த்துவிட்டு மணியை உறுதிப்படுத்தினேன்.

கோடைக் காலத்தில், மேற்டுகளில் கதிரவன் வெளிச்சம் மறைய இரவு ஒன்பதரை அல்லது பத்து மணி ஆகிவிடும் என்று படித்திருக்கிறேன். அதை நினைவுபடுத்திக் கொண்டோம். நேரில் காணும் வாய்ப்புப் பெற்றதைப்பற்றி மகிழ்ந்தேன்.

''ஜூன் திங்கள் இருபத்திரெண்டாம் நாளன்று உலகத்தின் வடபகுதிகளில் நாள் பூராவும் இயற்கை வெளிச்சமே இருக்கும்; இருட்டே வராது. அந்த இரவை, 'வெள்ளையிரவு' என்று சொல்லி, வட ஐரோப்பியர்கள் போற்றுவார்கள். லெனின் கிராட் போன்ற நகரங்களில் வெள்ளையிரவு முழுவதும், மக்கள் தெருக்களில் கூட்டம் கூட்டமாகக் கூடி ஆடிப்பாடி மகிழ்ச்சியில் திளைப்பார்கள். நீங்கள் அடுத்த திங்கள் சோவியத் நாட்டிற்குச் செல்லும்போது, அதைக் காணத் தவறாதீர்கள்'' என்று ஒரு நண்பர் எனக்கு ஆலோசனை கூறினார்.

ஞாயிறு மறையாமல் இருக்கலாம். உண்ட களைப்பு வராமல் இருக்குமா? நெடுந்தூரம் பேருந்து வண்டியில் வந்த களைப்பும் சேர்ந்துகொண்டது. எனவே, என் அறைக்குச் சென்று உறங்கிவிட்டேன். அவ்வளவே தெரியும்.

திடீரெனக் கண்விழித்தேன். பொழுதுவிடிந்து விட்டது போன்ற தோற்றம். சாளரத் திரையை நீக்கிவிட்டு வெளியே பார்த்தேன். பட்டப்பகல் போன்ற வெளிச்சம் தென்பட்டது. மக்கள் நட மாட்டமோ இல்லை. வண்டிகள் போக்கு வரவும் இல்லை. போக்குவரத்து விளக்குகளைக் கவனித் தேன். எரிந்து கொண்டிருந்தன. அவை நிறம் மாறின.

இரவா? பகலா?

பகலிலும் அவை எரியும்; நிறம் மாறும். தெரு விளக்குகளைப் பார்த்தேன். எரிந்துகொண் டிருந் தன. இன்னும் பொழுது விடியவில்லை என்று ஊகித்தேன். கழட்டி வைத்திருந்த கைக்கடி காரத்தை எடுத்துப் பார்த்தேன். நான்கு மணி காட்டிற்று.

செய்வதறியாது திரையை இழுத்து மூடிவிட்டு மீண்டும் படுக்கையில் படுத்தேன். பழக்கம் கொடி யது. காலை வெளிச்சம் வந்த பிறகு, தூங்க முடி யாமை, என் குறை. ஆகவே இரண்டு மணி நேரம் புரண்டு அல்லல் பட்டேன்.

அந்நாள் காலை பத்து மணிக்கு, ஒட்டல் கருத் தரங்கு கூடத்தில் எல்லோரும் கூடினோம்.

காட்பஸ் பிராந்தியத்தின் சார்பில் இந்திய தூதுக்குழுவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. பிராந்திய ஆட்சிக்குழுவின் துணைத்தலைவரும் அப் பகுதியின் திட்டக்குழு தலைவரும் மற்றோர் பிரதி

நிதியும் அங்கு வந்து, எங்களைக் கண்டு, வரவேற்றுப் பேசினார்கள்.

இத்தகைய கூடலின்போது, அவர்களைப் பற்றியும் அவர்களுடைய பொதுமக்களைப் பற்றியும் கூறி வரவேற்பளிப்பது வழக்கம்.

அவ்வழக்கப்படி, ஆட்சிக்குழு துணைத் தலைவர் வரவேற்றார்.

ஜெர்மனிய ஜனநாயகக் குடியாட்சியிலுள்ள பதினைந்து பிராந்தியங்களில் ஒன்றாகிய 'காட்பஸ்' சார்பில் எங்களை வரவேற்பதாகக் கூறினார்.

அதன் பொருள் என்ன? அப்பிராந்தியத்தில் அடங்கிய ஐம்பத்தொன்பது பேரூர்கள் (நகரங்கள்) அறுநூற்று ஐம்பத்தைந்து சிற்றூர்கள் சார்பில் எங்களை வரவேற்பதாகப் பொருள். இந்த எழுநூற்றுப் பதினான்கு குடியிருப்புகளிலும் உள்ள எட்டு இலட்சத்து அறுபத்தி நான்கு ஆயிரம் பொதுமக்கள் சார்பில் வரவேற்ற அவர், 'மின்சார உற்பத்தியில் அந்நாட்டில் முதலிடம் வகிக்கும்' பிராந்தியத்தின் சார்பில் இந்திய நண்பர்களை வரவேற்பதாகக் கூறினார். நாங்கள் பரவசமானோம்.

புதிய ஜெர்மனியில் உற்பத்தியாகும் மொத்த மின்சாரத்தில் நூற்றுக்கு நாற்பது விழுக்காடு அப்பிராந்தியத்தில் உற்பத்தியாகிறது. அனல் மின்சார உற்பத்திக்கு வேண்டிய பழுப்பு நிலக்கரி நிறையக் கிடைக்கிறது. அதைக் கொண்டு அனல்

மின்நிலையங்களை அமைத்துள்ளார்கள். அந்நாட்டின் மிகப் பெரிய அனல் மின்நிலையத்தை அப்பிராந்தியத்தில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தேழில் கட்டத் தொடங்கினார்கள். உற்பத்தி நிலையை அடைவதற்கு ஏழு ஆண்டுகள் சென்றன. இதைக் கேட்டபோது சிலவற்றைச் செய்து முடிக்க, காலம் பிடிக்கும் என்று உணர்ந்தேன். அதில் 1300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாயிற்று. அது போதாதென்று, சில கிலோ மீட்டர் தூரத்தில் மற்றொரு மின்நிலையத்தை அறுபத்தேழில் கட்டி முடித்தார்கள். இரண்டும் சேர்ந்து இப்போது இருபத்தையாயிரம் மெகா வாட் கொடுக்கின்றன. இரண்டு மின்நிலையங்களிலும் பணிபுரிவோர் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? பதினாறு ஆயிரம் பேர்கள்.

ஆதியில் பிரஷ்ஷிய மன்னருக்குச் சொந்தமாயிருந்த காட்பஸ், ஏழ்மை மிகுந்திருந்தது. தொழில் வளம் குறைந்திருந்தது.

புதிய ஜெர்மனி உருவான பிறகு, காட்பஸ் பல துறைகளிலும் முன்னேறியுள்ளதாம். மின் உற்பத்தியில் முதலிடம் பெற்றிருப்பதைப்போல் பழுப்பு நிலக்கரி தோண்டி யெடுப்பதிலும் முதல் இடமாம். கட்டட அமைப்பில் ஐந்தாவது இடமாம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்திரண்டில் இருந்ததைப் போன்று மூன்று மடங்கு இப்போதைய தொழில் உற்பத்தியாம். செயற்கை நார் துணி நெய்வதில் விரைந்து முன்னேறுகிறதாம்.

இத்தனைக்கும் காரணம், அவர்களுடைய அரசியல் பொருளாதார சமுதாய முறையில் ஏற்பட்ட தலை கீழ் மாறுதல்கள் ஆகும் என்று கூறினார்.

புதிய சமுதாயத்தில், ஆணும் பெண்ணும், பொது முன்னேற்ற முயற்சிகளில் சமமாக ஈடுபட்டுள்ளார்கள். அப்பிராந்தியத்தில், உழைக்கும் வயதிற்குட்பட்ட பெண்களில், நூற்றுக்கு எண்பத்தி நான்கு பேர் தொழில் புரிகிறார்கள். இது எதைக் காட்டுகிறது? உழைக்காமல் உண்போர் இல்லாத நாடு அது என்பதைக் காட்டுகிறது. எல்லோரும் பொருளாதார முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

தொழில் வளர்ச்சியும் வேளாண்மை முன்னேற்றமும் பொருளாதார வளத்தைக் கொடுத்தன. அதைக் கொண்டு தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோருடைய தொழில் சூழ்நிலையையும் வாழ்க்கை நிலையையும் முன்னேற்றுகிறார்களாம்.

காட்பஸ் பிராந்தியத்தின் இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில், ஒதுக்கிய செலவு நிதியில் பாதிக்குமேல், கல்வி, உடல் நலம், மனமகிழ் வசதிகள் ஆகியவற்றிற்குச் செலவு செய்யப்படும் என்று காட்பஸ் ஆட்சித் துணைத் தலைவர் கூறினார்.

முப்பத்தி மூன்று மருத்துவமனைகளும், மூன்று மருத்துவ விடுதிகளும் (பாலிகிளினிக்ஸ்) முப்பத்தி மூன்று ஆம்புலன்ஸ்களும் எங்களால் நிர்வகிக்கப்

படுகின்றனை என்று அவர் சொன்னபோது எனக்குப் பொருமையாக இருந்தது.

கல்வித்துறையில் அவர்கள் சாதனையை அறிய விரும்பினேம். இதோ அந்தப் படப்பிடிப்பு.

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள 'சிசு நிலே'யங்கள் உள்ளன. அப்பருவத்தைச் சேர்ந்த ஆயிரம் பேர்களில் மூன்னூற்று அறுபது பேர்கள் சிசு நிலயத்தில் சேர்ந்திருக்கிறூர்கள்.

மூன்று முதல் ஆறு வயது முடிய உள்ள குழந்தைகளுக்காக 'கிண்டர் கார்டன்'கள் உள்ளன. இவ்வயதினர் ஆயிரம் பேர்களில் எண்ணூற்று அறுபது பேர்கள் இந்த பாலர் பள்ளிகளில் சேர்ந்துள்ளார்கள்.

ஆறு வயது முடிந்தவர்களையே சாதாரண கல்விக் கூடங்களில் சேர்த்துக்கொள்வார்கள். எல்லோரும் பத்தாவது வகுப்பு முடியக் கல்வி கற்கிறூர்கள். அதற்கு மேலும் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்பு, தொடர் தொழில் பயிற்சி பெறுவோர் ஆயிரத்தில் அறுநூற்று எழுபது பேர்கள் என்று அவர் அடக்கமாகக் கூறினுலும், நாங்கள் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லே.

தொழிற்கூடங்கள், தொழிலாளர்கள், ஆட்சிக் குழுக்கள் அனைவரும் மக்களின் நன்மைக்காகவே இருக்கவேண்டும். மக்கள் பொது நலத்தைப் பற்றியே கண்ணுங்கருத்துமாக உள்ளனர்.

ஒரு முறை, மின் உற்பத்தித் தொழிலாளர்கள், தங்களுக்கு, நீச்சல் குள வசதி வேண்டுமென்று கோரினார்கள். உடனடி செய்ய வேண்டிய பணிகள் வேறு சில, என்று மின்நிலைய நிர்வாகம் நினைத்தது. இரு பிரிவினரிடையும் மோதுதல் ஏற்படவில்லை. பொது நன்மைக்கு எது அதிகம் உகந்தது என்று பொதுமக்களும் யோசித்தார்கள். கடைசியில் பொதுமக்களும் தொழிலாளர்களும் சேர்ந்து கூட்டு முயற்சியில் நீச்சல் குளத்தைக் கட்டுவதென்று முடிவு செய்தார்கள். அதைப் பின்னர் நிர்வகிக்கும் பொறுப்பை மின்நிலைய நிர்வாகம் ஏற்று நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கையை இராச்சிய திட்டக்குழு ஒப்புக்கொண்டது. அப்படியே நீச்சல் குளம் கட்டி முடிக்கப்பட்டது.

அந் நீச்சல் குளம் தொழிலாளர்களுக்கு மட்டும் பயன்படவில்லை. ஊர்ப் பொதுமக்களுக்கும் பயன் படுகிறது.

வேளாண்மைப் பண்ணைகள் அமைக்கும் பொது வசதிகளும் அவற்றோடு தொடர்புடைய பொதுமக்களுக்குப் பயன்படுவது போலவே தொழிற்கூடங்கள் அமைக்கும் பொது வசதிகள் அப் பகுதிவாழ் பொதுமக்கள் அனைவருக்கும் பயன்படுகின்றன.

ஊராட்சியும் பொதுமக்களும் தொழில் நிறுவனங்களும் தொழிலாளர்களும் எதிர்க் கூடாரங்களில் தங்கிவிடாமல், பொதுநலப் பணிகளில்

இணைந்து செயல்படுவது அந் நாட்டிலுள்ள சிறப்பு.


இராச்சியத் திட்டக்குழு, பல துறை வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிக் கொடுக்கும். அத்தகைய திட்டத்தை உருவாக்குவதற்கு முன், பிராந்திய, மாவட்ட, ஊர் திட்டக்குழுக்களைக் கலந்து ஆலோசிக்கும். அந்தந்தத் துறையில் நிபுணர்களையும் கலந்துகொள்ளும். நாட்டுக்குத் திட்டமும் திட்டக் குறிகளும் உறுதி செய்யும்போது, ஒவ்வோர் பிராந்தியத்திற்கும், மாவட்டத்திற்கும் அடைய வேண்டிய திட்ட எல்லைகளைக் குறித்துக் கொடுப்பார்கள். பிராந்தியம், மாவட்டம், தன் தன் திட்ட எல்லைகளை அடையப் போட்டி போடும்.

ஒவ்வோர் தொழிற்கூடமும் வேளாண்மைப் பண்ணையும் தன் குறியளவைத் தாண்டிவிட முனையும். அம் முயற்சி கூட்டு முயற்சியாக இருக்கும்.

நிர்வாகிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், நாட்டின் அரசியல் கூட்டணியின் பிரதிநிதிகள், ஊராட்சிப் பிரதிநிதிகள் ஆகிய நான்கு பிரதிநிதிகளும் கூடிப் பேசி, திட்டமிட்டு, போட்டி போட்டு வெற்றி பெறுகிறார்கள்.

ஓரிடத்தில் தொழிற்கூடமொன்று அமைக்கத் திட்டமிடும்போது, தொழிற்சாலையின் அமைப்பிற்கும் இயக்கத்திற்கும் வேண்டிய நிதியை மட்டும் கணக்கிட மாட்டார்கள். தொழிற்கூடம் அமைப்பது மக்கள் நலவளர்ச்சிக்காகவே. எனவே, அங்கு வேலை செய்யப் போகிறவர்களுக்கு வேண்

டிய வீட்டு வசதி முதலீட்டையும் திட்டக் கணக்கில் சேர்க்க வேண்டும். கல்வி வசதி விரிவு தேவைப்பட்டால், அதற்கான செலவும் திட்டக் கணக்கில் சேரும். மருத்துவ வசதிகளும் மண மகிழ் வசதிகளும் திட்டச் செலவினமாகும். பெரிய தொழிற்கூடமாயின், அத் தொழிலோடு தொடர் புடைய நுட்பத் தொழிற் கல்விக்கூடத்தை நிறுவும் செலவையும் சேர்த்தே திட்டமிடுவார்கள்.



9

திட்டம் தீட்டுவது பற்றிய பேச்சை வேறு பக்கம் திருப்ப முயன்றோம்.

“ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஊராளும் நாடாளும் முறை பற்றி விளக்குங்கள்” என்று இந்திய தூதுக் குழுவின் சார்பில் கேட்கப்பட்டது.

“எங்கள் அரசியல் அமைப்பு முறை, நாடு தழுவிய பொதுமக்கள் வாக்கெடுப்பின் பேரில் உருவாக்கப்பட்டது. வாக்காளர்களில் நூற்றுக்கு தொண்ணூற்று நாலரை பேர், சமதர்ம அரசியல் அமைப்பிற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். அம் முடிவிற்கேற்ப ஐந்தாண்டுகளுக்கு முன்பு,

இன்றைய ஆட்சி முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது'' என்று விளக்கினார்.

''அரசியல் நிர்ணயத்தைப் பொது மக்கள் வாக்கெடுப்பின் மூலம் முடிவு செய்தீர்களே, வாக்கெடுப்பிற்கு முன்பு இதைப்பற்றி விளக்கப்பட்டதா?''

''ஆம். விளக்கப்பட்டது. முதலில் உத்தேசிக்கப்பட்ட அரசியல் சட்டத்தின் நகல் அறிவிக்கப்பட்டது. அதை, ஆய்ந்து, ஆலோசனை கூறிய மக்கள் கூட்டங்கள் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ஆகும்.

இதைச் சொல்லி முடிப்பதற்குள் எண்ணெயில் விழ்ந்த பணியாரம்போல் பொரிந்தேன்.

''இத்தனை கூட்டங்கள் கூட்டினார்களே! திருத்தம் ஏதும் கூறினார்களா?'' என்று கேட்டேன்.

'நிறையக் கூறினார்கள். பன்னிரண்டாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்று நாலு புதிய ஆலோசனைகள் கூறப்பட்டன. அவற்றைப் பெற்று உரியவர்கள் சிந்தனை செய்தார்கள். விளைவு? நகல் சட்டத்தில் நூற்று எழுபதுக்கு மேற்பட்ட திருத்தங்களைச் செய்தார்கள்', என்று பதிலுரைத்தார்.

மக்களால் மக்களுக்காகச் செய்துகொண்ட அரசியல் அமைப்பின் நிலைகளைத் தெரிந்துகொள்வோமா?

ஒவ்வோர் ஊருக்கும் ஓர் ஊராட்சி மன்றம் உண்டு. அப்படியே ஒவ்வோர் நகரத்திற்கும் நகராட்சி மன்றம் உண்டு. அதேபோல் ஒவ்வொரு

மாவட்டத்திற்கும் மாவட்ட மன்றம் இருக்கிறது. ஒவ்வோர் 'கௌண்டி'க்கும் 'கௌண்டி மன்றம்' இயங்குகிறது. நாடு முழுவதற்குமான சட்ட மன்றத்திற்குப் பெயர் 'மக்கள் மன்றம்.'

"எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்?"

"நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்தப் பொதுத் தேர்தல் காலத்திலேயே 'கௌண்டி' மன்றத் தேர்தலும் நடைபெறும்.

"ஊர் மன்றங்கள், நகர மன்றங்கள், மாவட்ட மன்றங்களுக்கான தேர்தல்களை, பொதுத் தேர்தல்களுக்கு முந்திய ஆண்டில் நடத்துவார்கள்."

"இத் தேர்தல்களில் வாக்காளர்கள் யார்?" என்று கேட்டேன்.

"பதினெட்டு வயதடைந்த ஆண் பெண் அனைவரும் வாக்காளர்கள்."

"மக்கள் மன்றத்தின் உறுப்பினர்கள் எத்தனை பேர்?"

"ஐநூறு பேர்கள்."

"அவர்கள் சமுதாயத்தின் எந்தெந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்?"

"நாடாளும் மன்றமாகிய மக்கள் மன்றத்தில் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் உள்ளார்கள்..

மக்கள் மன்ற உறுப்பினர்களில் நூற்றுக்கு ஐம்பத் தேழு பேர் தொழிலாளிகள். அலுவலக ஊழியர் க்ள் நூற்றுக்குப் பதினுன்கு பேர்கள்.''

"வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோர் மக்கள் மன்றத்திற்கு தேர்ந்து எடுக்கப்பட் டிருக்கிருர் களா?''

மேற்கூறிய எங்கள் கேள்விக்குப் பதில் என்ன தெரியுமா?

"ஆம்; தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். நூற் றுக்கு ஒன்பது பேர் பயிர்த் தொழிலில் ஈடுபட் டுள்ளவர்கள். கைவினைஞர்களும் வணிகர்களும் சேர்ந்து நூற்றுக்கு ஏழு பேர். அறிவுப் பணியில் ஈடுபட்டுள்ளோர் கிட்டத்தட்ட ஏழு சதத்தினர்.''

"பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் என் றீர்களே! நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட பிறகுமா, பயிர்த் தொழில் செய்துகொண் டிருப்பார்கள்?'' என்று கேட்டேன்.

"உறுப்பினர் யாரும் 'மக்கள் மன்றத்தை' நான்கு ஆண்டுகளுக்கு திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள்'' என்று சிரித்துக்கொண்டே ஜெர் மனியப் பிரதிநிதி பதிலுரைத்தார்.

"ஊராட்சி மன்ற உறுப்பினராயிருப்பதோ, கௌண்டி மன்ற உறுப்பினராயிருப்பதோ, நாடாளுமன்ற உறுப்பினராயிருப்பதோ, தொழில் ஆகாது; அது தொண்டு. அப்பதவியைக் கொண்டு வாழ முடியாது. எங்கள் நாட்டில் ஒவ்வொருவருக்

கும் தொழில் உண்டு. அதைக் கொண்டே வாழ வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், தனது மன்றக் கூட்டங்களிலும் மன்றக்குழு கூட்டங்களிலும் கலந்துகொள்வதற்குத் தேவை யான காலத்திற்கு மட்டும், வேலைக்குப் போகாமல் தங்கி இருக்க அனுமதிப்பார்கள். மற்ற நாட்களில் தங்கள் தங்கள் வேலையில்—அலுவலில் ஈடுபட்டு வாழ வேண்டியவர்களே.''

''தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராயிருப் பது ஆதாயமில்லாத வேலையா?'' என்று இந்தியர் ஒருவர் கேட்டார்.

''ஆம்! தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பி னர்களுக்கு சம்பளம் கிடையாது. சிறு தொகை, 'படி'யாகக் கொடுக்கப்படும். மன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

''நான் இந்த கௌண்டி மன்றத்தின் உறுப் பினர். ஆட்சிக்குழு உறுப்பினரும். அதற்காக, எனக்கு மாதம் அறுபது மார்க்குகளே கொடுக்கி ருர்கள்'' என்று ஆட்சிக் குழு துணைத் தலைவர் கூறினுர். நல்ல வேலை நாம் அங்கே இல்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குப் பயிற்சி உண்டு என்று கேள்விப்பட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

''தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தங்கள் வாக் காளர்களோடு எப்படித் தொடர்பு வைத்துக் கொள்ளுகிருர்கள்?'' இது எங்கள் கேள்வி,

"திங்கள் தோறும், வாக்காளர் பேட்டிக்காக, ஓர் நாள், குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைக்க வேண்டும், அந்த நேரத்தில் வாக்காளர்கள் வந்து தங்கள் கருத்துகளைச் சொல்லுவார்கள்" இது பதில்.

இதில் மறைந்து கிடக்கும் நுண்ணிய உண்மை என்ன?

தனி நபர் நலத்திற்காக, வாக்காளர், உறுப்பினர்களுக்குத் தொல்லை கொடுக்க மாட்டார்கள் என்பதே. பொதுநலத்திற்கான கருத்துகளுக்கு மட்டுமே பேட்டி, என்று இருப்பதால், அங்கே திங்களுக்கு ஒரு நாள் பேட்டிக்கு ஒதுக்கினால் போதும்.

இங்கே நிலைமை என்ன?

மன்னனிடம் மூக்குப் பொடி கேட்கப் போவது போல், நம்மவர்கள் சிறு சிறு தனி நபர் நலத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பரிந்துரையை நாடுவதால், எந்நேரமும் தொல்லையும் பொது நலச் சிந்தனைக்கு இடமில்லாத பதவியுமே எங்கும் காண்கிறோம். வீணான ஏச்சும் பேச்சும் வளர்ந்து, தேவையான பொதுநலப் பயிரை மூடி விடுவதைக் கண்டு அங்கலாய்க்கிறோம்.

புதிய ஜெர்மனியில் சிறுபான்மை இனமொன்று இருப்பதாகக் கேள்விப்பட்டு வியப்படைந்தோம்.

காட்பஸ் கௌண்டியிலும் அதற்கு அடுத்த டிரஸ்டென் கௌண்டியிலும் சேர்ந்து ஒரு இலட்சம்

'செர்ப்' இனத்தவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நன்மைக்காக, இப்பகுதியில் 'செர்ப்' மொழி,விருப்ப மொழியாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அச் சிறுபான்மையினருடைய மொழியையே பாட மொழியாகக் கொண்ட தொடர் உயர்நிலைப் பள்ளி யொன்றும் நடக்கிறது.

சிறுபான்மையினருக்கு பொதுமக்கள் ஆதரவு உண்டா?

மொத்தம் நூற்று எண்பது உறுப்பினர்களைக் கொண்ட காட்பஸ் கௌண்டி மன்றத்தில் பதி னெட்டு சிறுபான்மையினர் உறுப்பினர்களாக உள்ளார்கள். அவர்களுக்கென்று தனி ஒதுக்கீடு இல்லாவிட்டாலும், பொதுமக்களுடைய நம்பிக் கையைப் பெற்றிருப்பதால், இத்தனை பேர் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுகிறார்களாம்.

நாடாளும் அமைப்புகளைத் தெரிந்து கொண்ட நாங்கள், அன்று பிற்பகல், காட்பஸ் நகரத்தில் கட்டப்பட்டுள்ள புதுமாடிக் கட்டடங்களைக் காணச் சென்றோம்.

புற நகர் முழுவதிலும் எண்ணற்ற புது மாடிக் கட்டடங்கள் எழும்பியுள்ளன. ஒவ்வோர் மாடியி லும் பல வீடுகள். சில வீடுகளில் ஒரே படுக்கை யறை இருக்கும். சிலவற்றில் இரண்டு படுக்கை யறைகள் உள்ளன. வேறு சில மூன்று படுக்கை யறைகள் கொண்டதாக இருக்கலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே, ஒரு படுக்கையறை வீட்டையோ பல படுக்கை

யறை வீட்டையோ ஒதுக்குவார்கள். பெரிய சம்ப ளம் என்பதற்காக யாருக்கும் பெரிய வீடு ஒதுக்கு வதில்லை. இந்த வீடுகளில், ஓடு நீர், மின்சாரம், சமையலுக்காக 'ஆவி' ஆகிய வசதிகள் உண்டு.

இரண்டு படுக்கையறையை உடைய வீடு ஒன்றை, ஆறுவது மாடியில், பார்த்தோம். வீட்ட ரசி அலுவலகத்தில் இருந்தார். கணவன் வீட்டி லிருந்தார். அவரே வீட்டைச் சுற்றிக் காட்டினார். அவர் காவல் துறையைச் சேர்ந்தவர். கணவனும் மனைவியுமாக ஆயிரத்து நானூறு மார்க் சம்பாதிக் கிறார்கள். அவர்கள் கொடுக்கும் வீட்டு வாட கையோ மாதம் தொண்ணூறு மார்க்குகளே.

அவ்வீட்டில் தொலைக்காட்சிக் கருவியைக் கண்டோம். வானொலிப் பெட்டி, குளிர்பெட்டி ஆகியவை இருந்தன. கட்டில்கள், சோபா, நாற் காலிகளும் தென்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ஆறாயிரம் மார்க்குகள் என்றார், வீட்டுக் காரர்.

மாடி வீடுகளுக்கு நடுவில் புல்வெளி, குழந் தைப் பூங்கா முதலியவை உள்ளன. மாடிக் குடி யிருப்புகளோடு இணைந்து கடை கண்ணிகளும் உணவுச்சாலைகளும் அமைந்துள்ளன.

குழந்தைப் பூங்காவில் சறுக்குவிளையாட்டும் மணல்வீடு கட்டும் விளையாட்டும் நடந்து கொண் டிருந்தபோது நாங்கள் அங்கு சென்றோம். கவலை யற்று, கொழு கொழுவென்று, ஆடிக் கொண் டிருந்த அச்சிறுவர் சிறுமிகளைக் கண்டு வியந்

தோம். நம் நாட்டில், அத்தகைய குழந்தைகள் நம் கண்ணில் பட்டால், பெற்றோர் நாள்தோறும் மிள காய் வற்றல் சுற்றிப் போட நேரிடும்!

வீட்டைப் பார்த்துவிட்டு நீச்சல் குளத்திற்குச் சென்றோம். அதுவும் காட்பஸ் நகரத்தை ஒட்டியே இருந்தது. நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் நீந்தி விளையாடியும், மணல் மேல் கிடந்து, வெய் யில் காய்ந்தும் மகிழ்ந்து கொண்டிருந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சி. அக்காட்சியில், சில நிமி டங்கள் சிந்தனை மறந்திருந்தேன்.


"இந்த நீச்சல் குளம் எப்படி உருவாயிற்று என்று கேளுங்கள்" என்ற குரல் கேட்டது.

"எங்கள் நாட்டில் சிற்றூரிலும் சரி பேரூரிலும் சரி, கண்டபக்கம் மண்ணோ மணலோ தோண்டி எடுக்க முடியாது. அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்திலேயே தோண்டலாம். இந்நகரத்தில் புதி தாகக் கட்டப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான மாடி வீடுகளுக்குத் தேவையான, கலவை மணலை இங்கே தோண்டினார்கள். அது பெரும் பள்ளமா யிற்று; பரவலான பள்ளமுமாயிற்று. அதன் கரைகளையும் சாரலையும் ஒழுங்குபடுத்தி நல்ல இயற்கை நீச்சல் குளம் போல் செய்து விட்டோம்:

"வீட்டுவசதி திட்டத்தோடு குளம் அமைக்கும் திட்டமும் இணைந்து விட்டது. இந்த இணைத்துத் திட்டமிடும் போக்கை பல துறையிலும் காண லாம்" என்றார்.

"மணலை எடுத்த போது,ஓரளவு நீர் ஊறிற்று. மேலும், வேறு பக்கத்திலிருந்தும் நீரை இறைத்தார்கள். அதிக பொருட் செலவு இல்லாமல் நேர்த்தியான நீச்சல் குளம் கிடைத்து விட்டது" என்று விவரித்தார்.

நான் பெருமைப்பட்டேன்.



# 10

முதல் நாளை, காட்பஸ்ஸிலேயே கழித்த, இந்திய தூதுக்குழு, அடுத்த நாள், லெபனேவ் என்ற ஊருக்குச் சென்றது.

வழியில், இரு பெரும் நெடுஞ்சாலைகள் கூடுமிடத்தில் பெரிய 'பெட்ரோல் பாங்க்' ஒன்றைக் கண்டோம். அங்கே பெட்ரோல் பிடிக்க நின்றோம். ஆறு பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அறுவரும் பெண்கள். தங்கள் நாட்டில், ஆண்களோடு பெண்களும், சரி நிகராகப் பல பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள் என்று உடன் வந்த ஜெர்மனியத் தோழர் விளக்கினர். நிறைவான செய்தி.

லெப்ஞேவில் எங்கள் முதல் வேலே, அங்குள்ள் அனல் மின்நிலேயத்தைப் பார்வையிடல். அந்நிலேயத்தின் பொது இயக்குனரும் தொழிற் சங்கத் தலேவரும், தேசிய முன்னணிக் கட்சியின் தலேவரும் எங்களே வரவேற்று, உபசரித்து, மின் நிலேயத்தின் பல பகுதிகளேயும் காட்டினுர்கள்.

நாங்கள் காட்பஸ்ஸை விட்டுப் புறப்படும் வேளே எங்களில் ஒருவருக்கு நல்ல பல்வலி ஏற்பட்டது. எனவே, மின்நிலேய மருத்துவ நிலேயத்திற்கு, தொலேபேசியில், இதைத் தெரிவித்து விட்டு, புறப்பட்டுப் போஞேம். எங்களுக்கு நிலேயத்தைக் காட்டுவதற்கு முன், அவரை, மின்நிலேயத்தின் பகுதியாக இயங்கும் மருத்துவ மனேக்கு அழைத்துச் சென்ருர்கள். அங்குள்ள பல் மருத்துவர் வேண்டிய சிகிச்சை செய்து மருந்தும் கொடுத்து அனுப்பினுர். பெரிய தொழிற்சாலேகள் ஒவ்வொன்ருேடும் நல்ல மருத்துவ நிலேயமும் இணேந்து இயங்குவதை அங்கு நேரில் கண்டோம்.

"நாட்டு நலனே, மக்கள் நலனே, இம் மின் நிலேய நிர்வாகிகளுடைய நோக்கமும் இங்கு பாடுபடும் தொழிலாளிகளின் இலட்சியமும்.

"இந்நிலேயம் எட்டிப் பிடிக்க வேண்டிய உற்பத்தி உச்சி, அதை அடையும் முறைகள், அவற்றிற்கு வேண்டிய உதவிகள், குறுக்கிடும் தடைகள், அவற்றை அகற்றுதல் ஆகியவை பற்றி,

முத்தரப்பினரும் அடிக்கடி முறையாகக் கூடிப் பேசி முடிவு செய்கிறோம்.''

''யார் அந்த முத்தரப்பினர்?''

''நிர்வாகிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், தேசிய முன்னணியின் பிரதிநிதிகள், ஆகியோரே முத்தரப்பினர்.''

பொது நிர்வாகி தொடர்ந்து, பேசுகிறார்.

''பொது நிர்வாகிக்குத் துணையாக இன்னும் சில நிர்வாகிகள் உள்ளனர். பொருளாதார நிர்வாகி, உற்பத்தி நிர்வாகி, பழுது பார்க்கும் நிர்வாகி, கல்வி நிர்வாகி, வசதிகள் நிர்வாகி ஆகிய ஐவர் எனக்குத் துணை.

''நாங்கள் அனைவரும் முழு நேர ஊழியர்கள். நாங்கள் ஆறுபேரும் அன்றாடம் காலையில் கூடிப் பேசுகின்றோம். நாள்தோறும் இருபது நிமிடங்கள் இதற்காக ஒதுக்கியுள்ளோம். வேலைச் சிக்கல்களை நீக்க அது உதவுகிறது.

''மாதமொரு முறை அரசிற்கு, மின்நிலைய வேலை பற்றி, அறிக்கை அனுப்புகிறோம்.

''மின் நிலையங்களின் பொது நிர்வாகிகள் மாதமொரு தடவை கூடிப்பேசி, தொழில் திறனை வளர்த்துக் கொள்ளுகிறோம்'' என்று பொது நிர்வாகி, விளக்கினார்.

நாங்கள் சில கேள்விகளைக் கேட்டோம். அக் கேள்வி பதில்களில் தகவல் இருக்கும். எனவே படியுங்கள்.

“இங்கு எத்தனை ஆயிரம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள்?”

“ஐயாயிரம் தொழிலாளர்கள் வேலை செய் கிறார்கள்.”

“இங்குள்ள தொழிலாளிகளுக்கு குறைந்த சம் பளம் எவ்வளவு?”

“குறைந்த ஊதியம் மாதம் நானூற்று எண் பது மார்க்குகள்.”

“அதிக ஊதியம் எவ்வளவு?”

“இரண்டாயிரம் மார்க்குகள்.”

“அவ்வளவு உயர்ந்த சம்பளம் யாருக்கு?”

“மின் நிலையத்தின் பொது நிர்வாகிக்கு.”

அங்குள்ளதை விட, அதிக சமதர்ம வாடை வீசுகிறது, நம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் என்பதை அப்போதே உணர்ந்தேன்; மகிழ்ந் தேன். சென்னை பல்கலைக்கழகத்தில், துணைவேந் தர் பெறும் ஊதியத்திலும் அதிகமாக, பேராசிரி யர்கள் சிலர், பெறும் நிலையை உருவாக்கி விட் டேனே என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்.

“பொது நிர்வாகியாகிய நீங்கள் இளைஞராகத் தோன்றுகிறீர்கள். எவ்வளவு காலமாக இப்பதவி யில் இருக்கிறீர்கள்?”

“நான் நடு வயதினனே! பதின்மூன்று ஆண்டு களாக, பொது நிர்வாகியாக உள்ளேன்” என்று புன்முறுவலோடும் அடக்கத்தோடும் கூறினார்.

மின் உற்பத்திப் பகுதியைக் காட்டிய பிறகு, அதே வளைவிற்குள் நடக்கும் தொடர் தொழிற் பயிற்சிக் கூடத்தை எங்களுக்குக் காட்டினார்கள். போகும் போது, இம் மின்நிலைய வேலைக்கு, நிமிடத்திற்கு, முப்பதுடன் பழுப்பு நிலக்கரி செலவாவதாகக் கூறினார்கள். நிலக்கரி சுரங்கம் அருகில், ஐந்தே கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

மின்நிலைய நகரில் குடியிருப்போர் இருபத்திரெண்டாயிரம் பேர்களாம். அவர்களுக்காக பத்து 'கிண்டர் கார்டன்' பள்ளிகளும், ஐந்து பள்ளிகளும், ஒரு தொடர் உயர்பள்ளியும், ஆலையால் நடத்தப்படுகிறது. அவர்கள் நடத்தும் தொடர் தொழிற்பள்ளி வேறு. இதைப் பார்க்கவே எங்களை அழைத்துச் சென்றார்கள்.

பத்தாவது தேறியவர்கள், இந்த தொடர் தொழிற்பள்ளியிற் சேர்ந்து, மூன்றாண்டு காலம், மின் தொழில் பயிற்சி பெறுகிறார்கள். நாங்கள் பார்த்த மாணவ மாணவிகள், கவலையற்று, கலகலப்பாக இருந்தார்கள். வகுப்பறையில் பாடங்களைப் படிப்பதோடு, மின்நிலையத்தில் நேரடி பயிற்சி பெறுகிறார்கள். இப்பள்ளியில் ஆணும் பெண்ணுமாக ஐநூறு பேர் பயில்கிறார்கள்.

பயிற்சிக் காலத்தில், உபகாரச் சம்பளம் உண்டு. மாதம் எண்பது மார்க்கில் தொடங்கும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை உயரும். நூற்று இருபது மார்க்குகள் வரை போகும்.

அவர்களுக்கு உறையுளும் உணவும் விடுதி யில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக மாதம் முப்பத்து மூன்று மார்க்குகளே கட்ட வேண்டும்.

இப்பள்ளியில், மனமகிழ் செயல்மன்றங்கள் இருபத்திரெண்டு இயங்குகின்றன. எனவே மாணவ வாழ்க்கை சலிப்பாயிராது.

மின்நிலைய நகர், லெபனேவ் நகரின் புறநகர்; புது நகரும் ஆகும்.

பழைய லெபனேவ் சிறிது தூரத்தில் இருக் கிறது. அதைச் சுற்றி 'ஸ்பிரி' நதி ஓடுகிறது. அந்நதி, இப்பகுதியில் நூறு கிளைகளாகப் பிரிந்து வளைந்து நகர்கிறது. பனிக்காலத்தில், ஆற்றுநீர் உறைந்து கிடக்கும். வேனிற் காலத்தில் நீர் ஓடும். அப்போது கிளையாறுகளில் எண்ணற்ற சிறு சிறு உல்லாசப் படகுகளில், சுற்றி வந்து, மகிழ்வது, இந்தப் பக்கத்து மக்களின் வழக்கம். நாள்தோறும் நூற்றுக்கணக்கான வெளியூர்க்காரர் களும் இங்கு வந்து படகுச் சுற்றுலாவில் திளைப் பார்கள். எங்களுக்கும் அத்தகைய நற்பேறு கிட்டிற்று.

நாங்கள் அனைவரும் மோட்டார் படகொன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, சுற்றுலா வந் தோம். இயற்கைக் காட்சி, மிக இனிமையான காட்சியாக விளங்கிற்று. சின்னஞ்சிறு பையன் கள் சிறு சிறு படகுகளை தாங்களே, பெரியவர்கள் இல்லாமல், துணிச்சலாக ஓட்டிச் செல்வதைக்

கண்டு பரவசமானோம். நம் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு இத்தகைய வாய்ப்பு வருமோ என்று ஏங்கினோம்.

காலையும் மாலையுமாகப் படகோட்டும் காட்சிகளைக் கண்ட போது,

'சிந்து நதியின் மிசை நிலவினிலே.............. தோணிகள் ஓட்டி விளையாடி' வருவதாகப் பாடிய பாரதியாரின் கனவுக் கவிதை மின்னிற்று.

படகுப் பயண மகிழ்ச்சியும் அந்த நாளும் வந்திடாதோ எங்கள் மக்களுக்கும் என்ற ஏக்கமும் கூட, லெபனோவை விட்டுப் புறப்பட்டு, காட்பஸ் சென்றடைந்தோம். அன்று மாலையோ, இரவோ குறிப்பிடத்தக்கதொன்றும் நிகழவில்லை.

அடுத்த நாள் காலை பேருந்து வண்டியேறி, கார்ல்மார்க்ஸ் பிரான்கோவ் என்னும் சிற்றூருக்குச் சென்றோம். அங்குள்ள கூட்டுப் பண்ணையைப் பார்க்கத் திட்டமிட்டிருந்தோம்.

கூட்டுப் பண்ணையின் தலைவரும் தொழிலாளர் தலைவரும் உள்ளூர் கட்சித் தலைவரும் எங்களை வரவேற்றார்கள். கிழக்கு ஜெர்மனியின் நில சாகுபடி முறைகளை முதலில் விளக்கினார்கள். கிழக்கு ஜெர்மனியில் கூட்டுப்பண்ணைகளின் நிர்வாகத்தில் பெரும்பாலான நிலம் உள்ளது. அரசுப் பண்ணைகளும் உண்டு. தனியார் பண்ணை இல்லை.

புதிய ஜெர்மனி ஏற்பட்டதும், நிலச் சீர்திருத்தம் வந்ததாம். பெரும் நிலக்கிழார்களுடைய நிலங்களும் நாஜி கட்சியினருடைய நிலங்களும், ஈடுத்தொகை கொடாமல், பறிமுதல் செய்யப்பட்டன.


'உழுபவனுக்கே நிலம்' என்னும் கொள்கையைப் பின்பற்றி, உழவர் குடும்பங்களுக்கு அந்நிலங்களைப் பகிர்ந்து கொடுத்தார்கள். குடும்பத்திற்கு ஆறு அல்லது ஏழு ஹெக்டர் நிலத்தை வழங்கினார்கள். ஒரு ஹெக்டர் என்பது 2.47 ஏக்கர் பரப்பாகும்.

சிறு சிறு வேளாண்மை, ஆதாயம் மிகுந்ததாக இல்லை. மேலும், இக்கால இயந்திர விஞ்ஞான பயிர்த் தொழிலுக்கு இடையூறாக இருந்தது. எனவே, சிறு நிலக்கிழார்களெல்லாம் கூட்டுறவு முறையில், தங்கள் தங்கள் நிலங்களை ஒன்றாக இணைத்துப் பயிர் செய்யும்படி ஊக்குவிக்கப்பட்டார்கள். அதன்படி சிற்றூர் தோறும், தொடக்கத்தில் சில சில உழவர்கள் இணைந்து சிறு சிறு கூட்டுப் பண்ணைகளை அமைத்துக் கொண்டார்களாம். வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் இப்பண்ணைகள் நிர்வகிக்கப்படுகின்றன. இத்தகைய கூட்டுறவுச் சங்கத்தில் சேருவோர், சொந்த காய்கறித் தோட்டத்திற்காக, குடும்ப நபர் ஒருவருக்கு கால் ஹெக்டர் விகித நிலத்தை வைத்துக் கொள்ள, அனுமதிக்கப்படுகிறார். அதில் உற்பத்தியாகும் காய்கறிகளையும் பழங்களையும், அவர், தன் வீட்டுச் செலவிற்கு வைத்துக் கொள்

ளலாம்; அல்லது விற்பனை செய்யலாம். அதற்குக் கட்டுப்பாடு இல்லை.

கூட்டுப் பண்ணைகளில் உற்பத்தியாகும் எந்த உணவுப் பொருளையும் நேரடியாக தனி நபருக்கு விற்கக் கூடாது. அரசு விற்பனை நிலையத்திற்கே விற்க வேண்டும். அரசு நிர்ணயித்துள்ள விலைக்கே விற்க வேண்டும்.

சிறுசிறு கூட்டுப்பண்ணைகள், சில ஆண்டுகள், இயங்கிய பிறகு, பெரும் பெரும் கூட்டுப் பண்ணைகளாவது இலாபகரமானது என்று உழவர்களுக்கே விளங்கிற்று. எனவே சிறு கூட்டுறவு சங்கங்களை இணைத்து, கூட்டுறவுப் பண்ணைகளையும் பெரிதாக்கிக் கொண்டார்கள். இன்று எல்லா உழவர்களுமே, தனியார் பண்ணையை விட்டுக் கொடுத்து விட்டு, கூட்டுப்பண்ணை உறுப்பினர்களாகி விட்டார்கள். இந்நிலையை ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டில் அடைந்து விட்டார்கள்.



## 11

கிழக்கு ஜெர்மனியில் ஏற்பட்ட நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பொதுவாகக் கேள்விப்பட்டது போதுமென்று தோன்றிற்று. நாங்கள் பார்வையிட வந்துள்ள கார்ல்மார்க்ஸ் கூட்டுப்பண்ணையைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினோம்.

"கார்ல்மார்க்ஸ் பண்ணை எப்போது ஏற்படுத்தப்பட்டது?" என்பது எங்கள் கேள்வி.

"27-1-53-இல் இப்பண்ணை ஏற்பட்டது."

"தொடக்கத்தில் எத்தனை குடியானவர்கள் இப்பண்ணையில் சேர்ந்தனர்?"

"பதினாறு குடியானவர்கள் சேர்ந்தார்கள்."

"ஆதியில் இப்பண்ணையின் பரப்பு எவ்வளவு?"

"தொடக்கத்தில் எழுபது ஹெக்டர் பரப்பு."

"இன்று இப்பண்ணை எவ்வளவு பெரியது?"

"இன்று இப்பண்ணையில் ஆயிரம் ஹெக்டர்கள், அதாவது இரண்டாயிரத்து நானூற்று எழுபது ஏக்கர்கள் அடங்கியுள்ளன."

"இக்கூட்டுப் பண்ணையின் இன்றைய உறுப்பினர்கள் எத்தனை பேர்?"

"இருநூற்றுப் பன்னிரண்டு பேர்கள் உறுப்பினர்கள்."

"என்னென்ன பயிர்கள் இப்பண்ணையில் உண்டு?"

"பல வகைப் பயிர்களை இடுவதற்குப் பதில் சில வகைப் பயிர்களோடு நிறுத்திக் கொள்ளுகிறோம்."

"கோதுமை, உருளைக்கிழங்கு, மாட்டுத் தீவனம் ஆகியவற்றையே பெரும்பாலும் பயிரிடுகிறோம்."

"இப்பண்ணையில் கால்நடைகளை வளர்க்கிறீர்களா?"

"ஆம் வளர்க்கிறோம். நானூற்று நாற்பது பசுக்கள் இப்பண்ணையில் வளர்கின்றன."

“அப்பசுக்கள் நிறையக் கறக்குமா?”

“ஆண்டொன்றிற்கு பசுவொன்று நாலாயிரத்து இருநூற்று அறுபது கிலோகிராம் பால் கொடுக்கிறது.”

“காட்பஸ் கௌண்டியிலுள்ள எல்லாக் கூட்டுப் பண்ணைகளும் சேர்ந்து ஆண்டு தோறும் நாலாயிரம் டன் பாலும், தொண்ணூற்று ஐந்து டன் இறைச்சியும் பதினறரைக் கோடி முட்டைகளும் கொடுக்கின்றன.

“அதிக வெண்ணெய் உண்பதில் நாங்களே உலக வீரர்கள்”, என்று சிரித்துக் கொண்டே கூறினர், பண்ணையின் தலைவர்.

“உங்கள் ஆண்களையும் பெண்களையும் பார்த்தாலே, அது தெரிகிறது”, என்று சொல்ல, வாயெடுத்தேன். சமாளித்து அடக்கிக் கொண்டேன்.

“பண்ணைகளைப் பெரும் கூட்டுப் பண்ணைகளாக்கி, இயந்திரங்களைக் கொண்டு விஞ்ஞான அடிப்படையில் பயிரிடுவதால், நிறைய விளைகிறது; உற்பத்தி அதிகமாகிறது. அதைப் பணமாகக் கணக்கிட்டுப் பார்த்தால், உங்கள் பண்ணையின் ஒவ்வொரு உறுப்பினருக்கு, எவ்வளவு கிடைக்கும்?” என்று கேட்டேன்.

“இப்பண்ணையில், சொந்த நிலங்களைக் கொண்டு வந்து இணைத்தவர்களும் உழைப்பை மட்டுமே இணைத்தவர்களும் இருக்கிருர்கள்.

"விளைபொருள்களை விற்று வரும் தொகைகளை வரவு வைக்கிறோம். செலவினங்களைச் சேர்த்து மொத்த வருவாயில் கழிக்கிறோம். மிச்சம் வருவதே ஆதாயம். ஆதாயத்தில் ஒரு பங்கை அரசுக்குக் கட்டி விடுகிறோம். ஒரு பங்கை, வருங்கால முதலீடுகளுக்காக ஒதுக்கி வைப்போம். பாக்கிப் பணத்தைக் கூட்டுப்பண்ணை உறுப்பினர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுப்போம்.

"முதலில் எல்லா உறுப்பினர்களுக்கும் அவரவர் உழைப்பிற்காக மாதச் சம்பளம் போட்டு அதைக் கொடுத்து விடுவோம். அதுபோக, நிலத்தோடு வந்த உறுப்பினர்களுக்கு, அவரவர் நிலப் பரப்புக்கு ஏற்ப, பங்கு பிரித்துக் கொடுக்கிறோம். பிரிவுத் தொகை பண்ணைக்குப் பண்ணை வேறுபடலாம். ஹெக்டருக்கு ஆண்டுக்கு ஐந்து மார்க்கே பங்குப் பணம் கொடுக்கும் பண்ணைகள் சில உண்டு. இந்த கார்ல்மார்க்ஸ் பண்ணையில் ஹெக்டருக்கு ஐம்பது மார்க்குகள் தருகிறோம்.

"மாதச் சம்பளத்தையும் பங்குப் பிரிவையும் கொடுத்த பிறகு மிச்சமிருப்பதை 'போனஸாக'க் கொடுப்போம். இத்தொகையும் பண்ணைக்குப் பண்ணை வேறுபடக்கூடும். நிறைய உற்பத்தியிருந்தால் நிறைய போனஸ் கிடைக்கும்."

"ஓராண்டில் விளைச்சல் எப்படியோ குறைந்து விட்டது, ஆதாயம் இல்லை. கைப்பிடிப்பு ஏற்பட்டது என்றால் என்ன செய்வீர்கள்?"

"போனஸ் இராது. பிரிவுப் பணம் குறையும் சம்பளமும் குறையலாம்."

"போனஸை பணமாகக் கொடுப்பீர்களா? பொருளாகக் கொடுப்பீர்களா?"

"இரு வகையிலும் போனஸைக் கொடுப் போம்."

"பயிர் வகைகளை 'இன்ஷ்யூர்' செய்கிறீர் களா?"

"எல்லாப் பண்ணை விளைச்சலையும் 'இன்ஷ் யூர்' செய்ய வேண்டுமென்பது எங்கள் சட்டம். சட்டப்படியே நடக்கிறோம்" என்றார்.

"இந்தக் கூட்டுப் பண்ணையைச் சேர்ந்தவர் களின் சராசரி வருமானம் எவ்வளவு?"

"ஒவ்வொருவருடைய சராசரி வருவாய் ஆண் டிற்கு ஒன்பதாயிரம் மார்க்குகள்" என்றார்.

அதாவது பதினெட்டாயிரம் ரூபாய்கள். மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய்கள்.

இதைக் கேட்ட எங்களுக்குக் குடியானவர் ஒரு வருடைய வீட்டைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் எழுந்தது. அதை வெளியிட்டோம். எங் கள் விருப்பப்படி அருகிலிருந்த குடியானவர் ஒரு வருடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

அந்த வீடு, மாடி வீடு. சுற்றிலும் காய்கறித் தோட்டம்; நான்கைந்து ஆப்பிள் மரங்கள்.

குடியிருப்போர் மூவர். கணவன்; மனைவி; மனைவியின் தாயார். கணவன், வயலிலே வேலை செய்துகொண்டிருந்தார். மனைவி, அலுவல் பற்றி, வயலிலிருந்து, பண்ணை அலுவலகத்திற்கு அப்போதே வந்தார். அவர் எங்களோடு வந்து வீட்டைக் காட்டினார்.

வீட்டுக்குப் போகும் வழியில், "என் தாய்க்கு வயது எழுபத்தெட்டு. என் தந்தை சில மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அறுபது ஆண்டு காலம் தன்னோடு வாழ்ந்த கணவர், மறைந்த, அதிர்ச்சியில், என் தாய் ஏங்கிக் கொண்டிருக்கிறார். அவரிடம் குடும்பம் பற்றி எதுவும் கேட்டு விடாதீர்கள். அழுது விடுவார்" என்று எங்களை எச்சரித்தார்.

வீட்டுக்குள் நுழையும் போது அம் மூதாட்டி, துக்கத்தை அடக்கிக் கொண்டு, வலிந்த புன்முறுவலோடு எங்களை வரவேற்றார். காட்பஸ் நகரில், புதிய குடியிருப்புகளில், காவல் துறையினர் வீட்டில் கண்ட தொலைக்காட்சி, குளிர்பெட்டி, வானொலி முதலிய கருவிகள் இவ்வீட்டிலும் இருந்தன. சோபா செட்டுகளும் மேசை நாற்காலிகளும் காட்சியளித்தன.

குடியானவர்களுக்கும் மற்றவர்களுக்குள்ள எல்லா வசதிகளும் உண்டு என்பதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தோம். குடியானவர்கள் பலர் மோட்டார்கார் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஓட்டலில் நடுப்பகல் உணவருந்தி விட்டு பண்ணையைச் சுற்றிப் பார்க்க நினைத்திருந்தோம். திடீரென மழை கொட்டிற்று. எனவே பண்ணைக்குள் செல்லவில்லை.

ஓட்டலில் உட்கார்ந்து கொண்டு மெல்ல சுவைத்து உண்ணும் போது பண்ணையாட்களைப் பற்றி நினைத்துக் கொண்டோம்.

" பண்ணையில் வேலை செய்வோர், வீட்டிலிருந்தே பகல் உணவைக் கொண்டு வருவார்களா ? " என்று கேட்டேன்.

" சொந்த உணவு கொண்டு வருவதற்குத் தடை இல்லை. ஆனால், பெரும்பாலும் அப்படிச் செய்வதில்லை. கூட்டுப் பண்ணையே, உணவுச் சாலை நடத்துகிறது. அதிலிருந்து உணவைக் கொண்டு போய், வயலிலேயே பரிமாறுவார்கள்."

" அந்தப் பகல் உணவுக்குக் கட்டணம் கட்ட வேண்டுமா ? "

"ஆம். கட்டணம் பெற்றுக் கொள்ளுகிறோம்."

" வெளியே சாப்பிட்டால் பகல் உணவுக்கு இரண்டரை மார்க்குகள் செலவாகும்.

" கூட்டுப் பண்ணை கொடுக்கும் உணவிற்கு முக்கால் மார்க்கே விலை," என்று விளக்கினார்கள்.

ஊருக்குள் சென்றோம். அது சிற்றூர். அச் சிற்றூரில் 'கிண்டர் கார்டன்' பள்ளியொன்று நடக்கிறது. கூட்டுப் பண்ணையே அதை நடத்து


கிறது. அப்பள்ளியைப் பார்வையிட்டோம். இருபது குழந்தைகள் - ஆறு வயதுக்குக் கீழ்ப் பட்டவைகள் - இருந்தன. தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியரும் பெண்மணிகள்.

குழந்தைகள் உண்ணவும், உறங்கவும் நல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள். இயற்கைக் கழிவுகளுக்கும் தூய தனி இடம். குழந்தைப் பருவம் முதல் நல்ல பழக்கத்தில் வளர்க்கப் படுவதால் மேனாடுகளில் யாரும் பொதுத் தெருக்களின் துப்புரவைக் கெடுப்பதில்லை.

குழந்தைகள் இந்திய தூதுக் குழுவில் உள்ள எங்கள் அனைவருக்கும் மலர்ச் செண்டு அளித்து, பாட்டுப்பாடி, வரவேற்றார்கள். நாங்கள் அவர்கள் கன்னங்களைத் தட்டிக் கொடுத்து எங்கள் நன்றியினைத் தெரியப்படுத்திக் கொண்டோம்.

இப் பண்ணையோடு இணைந்த கால் நடைப் பண்ணையைப் பார்க்க விரும்பினோம். வெளியார் மூலம் கால்நடை நோய்க் கிருமிகள் வந்துவிடக் கூடும் என்று அஞ்சி, சம்பந்தமில்லாதவர்களை உள்ளே விடுவதை நிறுத்தி வைத்துள்ளார்களாம்.

இரவு தங்குதலுக்காக நாங்கள் காட்பஸ் நகருக்குத் திரும்பினோம்.



# 12

காட்பஸ் நகருக்குப்பின், இந்திய தூதுக் குழு, லெப்சிக் நகருக்குச் சென்றது. ஏறத்தாழ இரண்டரை மணி நேரப் பயணத்திற்குப் பின் பழைய நகரமாகிய லெப்சிக்கை அடைந்தோம்.

நாங்கள் பயணஞ் செய்த அன்று, வழி நெடுகிலும், தூரல் போட்டுக் கொண்டிருந்தது. எங்கும் திடீர் நிறுத்தலுக்குத் தேவை ஏற்பட வில்லை. எனவே மனநிறைவோடு லெப்சிக்கை அடைந்தோம்.

அங்குள்ள மிகப் பெரிய ஓட்டலில் நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். எங்கள் பெட்டிகளைக் கொண்டு போய் அவரவர் அறையில்

துடைத்து விட்டு, முகம் கழுவிக் கொண்டு, பகல் உணவிற்குச் சென்றோம்.

எங்கள் பேருந்து வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தவரும் ஒரே மேசையில் எங்களோடு உணவு அருந்தினார்; இங்கே மட்டுமல்ல. காட்பஸ் நகரிலும் ஒவ்வோர் வேளையும் எங்களோடு சேர்ந்தே உணவருந்தினார். உண்ணும் போது, கதைகள் சொல்லுவார்; சிரிப்பூட்டும் செய்திகள் தருவார்; எங்களோடு கூடிக் குலாவி மகிழ்வார். கூச்சப் படமாட்டார். ஒதுங்கியிருக்க மாட்டார். அவரது நடை உடை பாவனையிலிருந்தும் பேச்சிலிருந்தும், அவர் வெறும் பாட்டாளி மட்டுமல்ல, உலகியல் அறிந்த படிப்பாளி என்பதையும் உணர்ந்தோம்.

"வேலு! நம்முடைய சாரதி ரஷ்ஷியாவைப் பற்றிப் பேசுவதற்கு அதிக உரிமையுடையவர்" என்று தோழர் கேஷர் அவரைப் புதிய கோணத்தில் அறிமுகப்படுத்தினார்.

"அப்படியா? இரஷ்ஷிய வரலாறு படித்தீர்களா?" என்று கேட்டேன்.

"இல்லை. சென்ற உலகப் போரின் போது, நான் இரஷ்ஷியப் படையால் கைது செய்யப்பட்டு, அந்த நாட்டில் பல மாதங்கள் சிறைப்பட்டிருந்தேன். அப்போது இரஷ்ஷிய மொழியைக் கற்றுக் கொண்டேன். இரஷ்ஷியர்களைப் பற்றி நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்" என்று பெருமிடுக்கோடு கூறினார்.

மேனுட்டு ஓட்டல்களில், உணவை அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடிவிட முடியாது. உணவுப் பண்டங்களை ஒவ்வொன்ருகக் கொண்டு வருவார்கள். இல்லாவிட்டால் ஆறிப் போகும். சாதாரணமாக சாப்பாட்டுக்கு ஒரு மணிக்கு மேல் செலவாகும்.

லேப்சிக்கில் சாப்பாட்டை முடித்ததும், அடுத்த நிகழ்ச்சிக்கு விரைய வேண்டியதாயிற்று. இடையில் எங்களில் சிலர் தங்கள் அறைக்கு விரைந்தோடினர். பேருந்து ஓட்டியும் தன் அறைக்கு விரைந்து சென்று வந்தார். அப்போது தான், அவரும் எங்கள் மாடியிலேயே, எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதே மாதிரி அறையில் தங்கியிருக்கிருர் என்பதைக் கவனித்தேன். அது சற்று வியப்பாயிருந்தது. அவ்வியப்பை இந்தியத் தோழர் ஒருவரோடு காதும் காதும் வைத்தாற் போல் சொன்னேன். அவர் ஏற்கனவே காட்பஸ் ஓட்டலில் தங்கியிருந்த போது இதைக் கவனித்த தாகவும் சமதர்ம சமுதாயத்தின் சிறப்பில் ஒன்று அதுவென்றும் விளக்கினுர்.

லேப்சிக்கில் தங்கியிருந்த போது மற்ருெரு தகவலையும் தெரிந்து கொண்டேன்.

லேப்சிக் என்னும் நகரம் உலகச் சந்தை நடக்குமிடம். ஒவ்வோர் ஆண்டும் மார்ச்சு மாதத்திலும் செப்டம்பர் மாதத்திலும் சந்தை கூடும். உலகத்தின் பல நாடுகள் தங்கள் பொருள்களைக் கொண்டு

வந்து சந்தையில் காட்சிக்கு வைப்பார்கள். உலக வணிகர்கள் அவ்வமயங்களில் அங்கு கூடி, பொருள்களை நேரில் சோதித்துப் பார்த்து, கொள் முதல் செய்வார்கள். அப்படிப்பட்ட வணிக நகரத்தில் வாடகை அதிகமாக இருக்குமென்று எதிர்பார்ப்போம். மாறாக, வாடகையைக் கண்ட படி உயர்த்தி கொள்ளையடிப்பதில்லை என்பதை தோழர் கேஷிரிடமிருந்து தெரிந்து கொண்டேன். ஓட்டல்கள், தனியார் சொத்தாக இருந்தால், காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்று வாடகையை நினைத்தபடி உயர்த்தி விடுவார்கள். புதிய ஜெர்மனியில் உள்ள ஓட்டல்கள் பொது மக்களுடைய சொத்து. அவற்றை நடத்த, தன்னுரிமையுடைய அமைப்பொன்று இருக்கிறது. அதன் குறிக்கோள், மக்களிடமிருந்து எவ்வளவு அதிகமாகச் சம்பாதிக்கலாமென்பதல்ல; மக்களுக்கு எவ்வளவு வசதி செய்து கொடுக்கலாமென்பதே. எனவே சந்தைக்காலத்தில் வாடகை சிறிதே உயரும். எல்லாக் காலத்திலும் எல்லா ஓட்டல் களிலும் வெளி நாட்டவரிடம் வாங்கும் வாட கையில் நான்கில் ஒரு பாக வாடகையையே உள் நாட்டுக் குடிகளிடம் வாங்குவார்கள். இதற்குப் பொருள், நம்மிடம் கொள்ளை வாடகை வாங்கு வார்களென்பதல்ல. தங்கள் நாட்டுக் குடி மக்களிடம் வாடகைச் சலுகை காட்டுகிறார்கள் என்று பொருள். இதே முறைதான் சோவியத் நாட்டிலும். வெளிநாட்டவர் 'பேரில்' வாங்கும் வாடகையும் ஐரோப்பிய வசதிகளுக்கு அதிகமல்ல.

எங்கள் பிற்பகல் நிகழ்ச்சி லைப்சிக் பல்கலைக் கழகத்தைப் பார்வையிடல். 'கார்ல்மார்க்ஸ் பல்கலைக் கழகம்' என்பது அதன் பெயர். ஐரோப்பாவிலுள்ள பழைய பல்கலைக் கழகங்களில் அதுவும் ஒன்று.

அது எப்போது நிறுவப்பட்டது தெரியுமா? ஆயிரத்து நானூற்று ஒன்பதாம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இதைக் கேட்டதும் எனக்கு ஒரு தெளிவு தோன்றிற்று. அது என்ன?

சென்னைப் பல்கலைக் கழகத்தின் வயது நூற்றுப் பதினாறு ஆண்டு. லைப்சிக் பல்கலைக் கழகத்தின் வயதோ ஐநூற்று அறுபத்திநான்கு. எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் ஒன்றாயிருந்தாலும் சென்னைப் பல்கலைக்கழகம் பணியாற்றிய காலத்தைப் போல் ஐந்து பங்கு காலம் பணியாற்றிய அப்பல்கலைக்கழகம், ஐந்து பங்கு அதிக விஞ்ஞானிகளையும் வல்லுனர்களையும் அனுப்பியிருக்குமே! உயர் கல்வியைப் பொறுத்தமட்டில், அவர்களோடு ஒப்பிடும் போது, சிறுபிள்ளையாக உள்ள, நாம் எப்படி இப்போதே, அவர்கள் நிலைக்கு உயர்ந்துவிட முடியும்? மேலும் அவர்களுக்குள்ள வசதிகளும் வாய்ப்புகளும் நமக்கு இல்லையே!

கார்ல்மார்க்ஸ் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவர் எங்களை வரவேற்றார். தோழர் கேஷர், எங்களை ஒருவர்பின் ஒருவராக அவருக்கு அறிமுகப்

படுத்திஞர். முதலில் குழுத் தலைவர் அறிமுகம் செய்யப்பட்டார். அடுத்து என்னை அறிமுகப் படுத்திஞர்.

“ டாக்டர் சுந்தர வடிவேலுவை அறிமுகம் செய்யத் தேவையில்லை. சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தரை, நான் சென்னையிலேயே கண்டு, பேசியுள்ளேன். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தொன்பதில் எங்கள் பல்கலைக்கழகத்திற்கு வரும்படி அழைத்தேன்.

இப்போதாவது வரமுடிந்ததைப் பற்றி மகிழ்ச்சி” என்று கூறி கைகுலுக்கிஞர்.

அறிமுகம் முடிந்ததும் அவரைச் சுற்றி அனைவரும் உட்கார்ந்து கொண்டோம். மேசை மேல் பானங்கள், கேக்குகள், பிஸ்கட்டுகள் குவிந்தன.

துணைத் தலைவர் அப்பல்கலைக் கழகத்தைப் பற்றி விவரித்தார்.

“ தொன்மை வாய்ந்த இப்பல்கலைக்கழகம் புதுமையான நற்பணியை அண்மைக் காலத்தில் செய்து வருகிறது.

நெடுங்காலமாக மேட்டுக் குடிகளின், செல்வந்தர்களின் கல்விக் கழகமாக இருந்து வந்த லைப்சிக் பல்கலைக்கழகம், சென்ற கால் நூற்ருண்டாக, மக்கள் பல்கலைக்கழகமாக மாறி வருகிறது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தில் இப்பல்கலைக்கழக மாணவர்களில் நூற்றுக்கு

மூன்று பேரே, உழவர், தொழிலாளர் குடும்பங்களைச்'சேர்ந்தவர்கள்.

அந்த ஏகபோகத்தை புதிய ஜெர்மனி, திட்டமிட்டு மாற்றி விட்டது.''

"உழவர்களே! தொழிலாளர்களே! வாருங்கள் பல்கலைக்கழகத்திற்கு. உங்களுக்கும் உரியது உயர் படிப்பு. உங்களுக்கும் நன்மையானது உயர் படிப்பு'' என்று புதிய ஜெர்மனியின் தேசிய முன்னணிக் கட்சி வேண்டுகோள் விடுத்தது. தேசிய முன்னணியே ஆளுங் கட்சி.

"வேண்டுகோள் வீண் போகவில்லை. உழவர்களும் தொழிலாளர்களும் உயர்கல்வி பெற முன் வந்தனர். அவர்களுக்கு மறு பயிற்சி அளிக்கவும் பொது அறிவு தரவும் உதவும் வகையில் பாடமுறைகள் உருவாயின. அவர்களுடைய வாழ்க்கையோடு தொடர்புடைய பாடமுறைகள் தோன்றின. 'உழவர் தொழிலாளர் கல்விப் பிரிவு', பல்கலைக் கழகத்தின் குறிப்பிடத்தக்க பிரிவாக உருவெடுத்தது...''

"உழவரும் தொழிலாளரும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த ஆர்வத்தோடு இடையறாது கற்று தேர்ச்சி பெற்றார்களா?'' என்று இடைமறித்தேன்.

"ஆம். 1949இல் நானூற்று நாற்பது பாட்டாளிகள், பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை வெற்றிகரமாக முடித்தார்கள்.

அப்பாட்டாளிகள், புதிய கல்வியின், முன்னோடிகள். அவர்களில் பலர் தொடர்ந்து படித்து, பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்ற பிறகு, இன்று பல கல்வி நிலையங்களில் பேராசிரியர்களாக விளங்குகிறார்கள்.

"இன்றைய கல்லூரிக் கல்வி அமைச்சரே, இந்த பாட்டாளிக் கல்விப் பிரிவில் படித்துத் தேறியவராவார். நாட்டின் பல்துறைத் தலைமைப் பொறுப்பில் உள்ள பலர், பாட்டாளிப் படிப்பு வாயிலாக அறிஞர்கள் ஆனவர்கள்."

"இன்றைய பல்கலைக்கழக மாணவர்களில் பாட்டாளிகள் வீட்டுப் பிள்ளைகள் எந்த விகிதத்தில் இருப்பார்கள்?" என்று இந்தியத் தோழர் ஒருவர் கேட்டார்.


"ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தேழாம் ஆண்டின் கணக்குப்படி கார்ல்மார்க்ஸ் பல்கலைக் கழக மாணவ மாணவிகளில் நூற்றுக்கு ஐம்பத்தாறு பேர் குடியானவர் குடும்பங்களையும் தொழிலாளர் குடும்பங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்", என்று பதிலுரைத்தார்.

"எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கும் வகையில் மாறியிருப்பதே நான் சொன்ன புதுமை.

எங்கள் கல்வி முறை, மக்களுடைய வாழ்க்கையைச் சமாளிக்கும் வகையில், அமைந்துள்ளது. கல்வி முன்னேற்றமும் சமுதாய முன்னேற்றமும் இணைந்த முறையில் திட்டமிட்டிருக்கிறோம்

எங்கள் பட்டதாரிகள், சமுதாயத்தில் நடக்கும் அலுவல்களை ஏற்று நடத்தவும் அச் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றவும் அதில் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்கவும் கற்றுக் கொடுக்கிறோம். நூலறிவோடு, செயல் திட்டப் பயிற்சியும் பெறுகிறார்கள்.

"உயர் கல்வி பெறும் மாணாக்கர், எங்கே வேலை செய்யப் போகிறார் என்பதை ஓராண்டு முன்னதாகவே சொல்லிவிடுவார்கள். அவர் மாணவராக இருக்கும்போதே, பிற்காலத்தில் தான் பணிபுரியப் போகும் தொழிற்சாலைக்கோ, பண்ணைக்கோ, அலுவலகத்திற்கோ, கல்வி நிலையத்திற்கோ சென்று ஐந்தாறு வார காலம் அங்கே இருந்து வேலைச் சூழலுக்கு தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளுவார்" என்று துணைவேந்தர் சொன்னதை, நம்ப மறுக்கிறது என் இந்தியப் போக்கு.



## 13

"தொன்மை வாய்ந்த இந்த லைப்சிக் பல்கலைக் கழகத்தில் மாக்ஸ் முல்லர் என்னும் சமஸ்கிருதப் பேராசிரியர் படித்தார் என்பதில் பெருமைப்படுகிறோம்" என்று கார்ல் மார்க்ஸ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கூறியபோது,

"இன்று, இப்பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிகளைப் படிக்க வாய்ப்புண்டா?" என்று இந்தியத் தூதுக் குழுவில் ஒருவர் கேட்டார்.

"ஆம்; உண்டு; இந்திய மொழியியல் (இந்தாலஜி) துறை ஒன்று உண்டு. அதன் பேராசிரியர் இதோ" என்று கூறி அருகில் இருந்த ஒரு அம்மையாரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினர்.

அந்த அம்மையார், இந்தி மொழியில் எங்களுக்கு வணக்கம் செலுத்தினார். செலுத்தி விட்டு,

"இப்பல்கலைக் கழகத்தின் இந்திய மொழித் துறை நீண்ட மரபு உடையது. முற்காலத்தில் இந்நாட்டின் குடியானவர்களும் பாட்டாளிகளும் படிக்கவில்லை. சமஸ்கிருதம் பக்கம் நெருங்கியதே கிடையாது. இன்று எத்தனையோ பாட்டாளிகள் இப்பல்கலைக் கழகத்தில் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். நானே ஒரு பாட்டாளியின் மகளே" என்று பெருமிதத்தோடு கூறினார்.

"நீங்கள் சொல்லிக் கொடுக்கும் இந்தி, எந்த மட்டத்திற்கு இருக்கும்?" இது தூதுக்குழுவில் ஒருவருடைய கேள்வி.

"நான் 'இந்தி வியாகர்ண' மட்டத்திற்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கிறேன்", என்றார் பேராசிரியை.

"மொழிப் பாடஞ் சொல்லிக் கொடுப்பது மட்டுமா 'இந்தாலஜி' துறையின் பணி?" இது எங்களுடைய அடுத்த கேள்வி.

"மொழிப்பாடம் சொல்லிக் கொடுப்பதோடு, இந்தியாவின் பொருளாதாரம், இந்திய வரலாறு, இந்திய பூகோளம் ஆகியவற்றையும் படிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

"இந்திய விடுதலையின் வெள்ளி விழாவை யொட்டி, நாங்கள் ஓர் நூல் வெளியிட்டோம். அது இதோ" என்று கூறிக்கொண்டே அருமையான

கட்டமைந்த நூல் ஒன்றை ஒவ்வொருவரிடமும் கொடுத்தார்.

நம் விடுதலையைக் கொண்டாட, அவர்கள் செயலில், அரிய நூலொன்றை உலகிற்கு அளித்த அறிஞர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? பாராட்டினோம்.

பேராசிரியர் தொடர்ந்து கூறினார்:

"பதினைந்தாயிரம் சொற்களைக் கொண்ட இந்தி-ஜெர்மன் அகராதியொன்றை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

"ஐம்பதாயிரம் சொற்களையுடைய சமஸ்கிருத அகராதியொன்று அச்சில் உள்ளது. அது அடுத்த ஆண்டு வெளியாகும். இப்பணிகளுக்கு இந்தியப் பல்கலைக் கழகங்கள் சிலவற்றோடு தொடர்பு கொண்டு உதவியினைப் பெற்று வருகிறோம்."

"எங்கள் நாட்டு மொழிகள் இரண்டினுக்கு ஏற்பாடு செய்துள்ளதைப்பற்றி மகிழ்ச்சி. பிற இந்திய மொழிகளையும் கற்றுக் கொடுக்க எதிர் காலத்தில் ஏற்பாடு செய்யலாமா?" இது எங்கள் கேள்வி.

"யோசிக்க வேண்டியதே. பெர்லின் பல்கலைக் கழகத்தில் மொழித் துறையை விரிவுபடுத்துவதென்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

"இந்த, கார்ல் மார்க்ஸ் பல்கலைக் கழகத்தில் படிப்பதற்காகப் பிற நாட்டவர் பலர் இங்கு வந்துள்ளனர்", என்று துணைவேந்தர் கூறினார்.

"எத்தனை நாடுகளிலிருந்து மாணவர்கள் வந்துள்ளார்கள்?" என்று கேட்டேன்

''நூற்று நாற்பது நாடுகளிலிருந்து வந்துள்ளனா'' என்பது பதில்.

''வெளிநாட்டு மாணவர்கள் எத்தனை பேர்?'' இது கேள்வி.

''எட்டாயிரத்து நூற்று நாற்பத்தைந்து வெளி நாட்டு மாணவர்கள் இங்கு படிக்கிறார்கள்.''

''இங்கே எம்மொழியில் கற்பிக்கிறீர்கள்?''

''ஜெர்மன் மொழியில்''

''ஜெர்மன் மொழியைப் பாட மொழியாகக் கொள்ளும் அளவிற்குப் போதிய ஜெர்மன் மொழித் தேர்ச்சி அவர்களுக்கு உண்டா?''

''பலருக்கு இல்லை. அவர்களுக்கு ஜெர்மன் மொழியில் பயிற்சி கொடுப்பதற்கென்று, தனியான கல்விக் கழகம் ஒன்று நடக்கிறது. அங்கே ஓராண்டு காலம் ஜெர்மன் மொழியைக் கேட்கவும் பேசவும் படிக்கவும் கற்றுக்கொண்ட பிறகு, பல்கலைக் கழகப் பாடங்களைக் கற்க ஈடுபடுவார்கள்'' என்று துணைவேந்தர் விளக்கினார்.

''உங்கள் பல்கலைக் கழகம் ஜெர்மனியில் இயங்குகிறது. ஆனால் ஜெர்மனியர்களுக்காக மட்டும் இயங்கவில்லை. அனைத்துலக இளைஞர்களுக்கும் பல்கலைக் கழகமாக இருக்கிறது. இது போற்றத்தக்கது. ஒரே ஒரு ஐயம். உங்கள் நாட்டு இளைஞர்கள் அனைவருக்கும் அவர்கள் கேட்கிற பாடப் பகுதியில் இடம் கொடுப்பீர்களா?''

''மாணவர்கள் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு, அதையொட்டி பல்கலைக் கழகப் பாடப் பிரிவுகள் சேர்க்க முயற்சிக்கிறோம். ஆனால் மாணவர்கள் விருப்பமே முடிந்த முடிவல்ல.

"நாட்டிற்கு ஒவ்வொரு துறையிலும் எத்தனை பேர் தேவையென்பதை கணக்கிடுவார்கள். அதை யொட்டி, தேசியத் திட்டம் வகுக்கப்படும். அத் திட்டம் குறிப்பிடும் அளவே, அந்தந்த துறையில் மாணவர்களைச் சேர்ப்போம். தனியாருடைய விருப்பம் சமுதாயத் தேவையோடு பொருந்தும் அளவிற்கே இடம் ஒதுக்கப்படும்" என்று விளக்கினார்.

'நாட்டின் தேவைக்கேற்ற அளவே பலதுறைகளிலும் மாணவர்களைச் சேர்ப்பது என்ற கொள்கையைப் பின்பற்றுவதால்தான், பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை உத்திரவாதம் செய்து கொடுக்க முடிகிறது', என்னும் நுட்பத்தை உணர்ந்து கொண்டோம்.

"மனுப்போடுவோரில் சிலரையே, குறிப்பிட்டதொரு வகுப்பில் சேர்ப்பதானால் எந்த அடிப்படையில் சேர்ப்பீர்கள்?" இது இந்தியக் குழுவின் கேள்வி.

"மாணவர், அதற்கு முந்திய பரீட்சையில் பெற்றுள்ள மதிப்பெண், அவரது 'ஆளுமை' (பெர்ஸனாலிடி) இரண்டையும் கொண்டு தேர்ந்தெடுப்போம்." இது பதில்.

"அப்படியா? 'ஆளுமை' என்றால்?"

"இளைஞர்களைப் பயிற்றுவித்து, பல கல்வி தருவது, அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டுமென்பதற்காக.

"எல்லோருக்கும் கல்வி வரும் என்றாலும் சமுதாயத்திற்குப் பயன்படும் தன்மை எல்லோருக்கும்

ஒரே அளவாக இருப்பதில்லை. 'ஆளுமை' என்றால் சமுதாயத்தில் வெற்றியோடு பணிபுரியும் தன்மை உண்டா என்பதை மதிப்பிடுவதே'' என்ற பதில் எங்களை சிந்தையில் ஆழ்த்தியது.

''மாணவர் குழப்பம் உண்டா'' என்ற கேள்வியைக் கேட்டு, நம்மில் ஒருவர் சிந்தையைக் கலைத்தார்.

''மாணவர் குழப்பம் என்பதே எங்கள் நாட்டில் இல்லை. ஜெர்மன் சுதந்திர இளைஞர் அணி, நாடு தழுவிய இயக்கம். அவ்வியக்கம் நாட்டின் முன்னேற்றத்திலும் நலத்திலும் அக்கறை செலுத்தி, பல ஆக்க பூர்வமான ஆலோசனைகளை அப்போதைக்கப்போது கூறும். மாணவர்கள் கூறிய எத்தனையோ ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டுள்ளோம்'' என்றார் துணைவேந்தர்.

''உங்கள் நாட்டில் பற்பல அரசியல் கட்சிகள் உண்டா? அவை ஒன்றோடொன்று போட்டியிட்டு மாணவர்களை தூண்டி விடுவதுண்டா?''

''எங்கள் நாட்டில் ஐந்து கட்சிகள் இணைந்த கூட்டணி ஒன்றே உண்டு. இளைஞர்கள் அணி தனி அணி.''

அரசியல் கட்சிகள், இந்திய இளைஞர்களை, தங்கள் விவகாரங்களுக்கு பகடைகளாகப் பயன் படுத்தாமல் ஒதுங்கி நின்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்? இயற்கையறிவிலே சிறந்துள்ள நம் இளைஞர்களும் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்து, நம்மிலும் விரைவாக, எல்லோரும் வாழும், நன்றாக

யையும், நிலையைக் கொண்டுவந்து விடுவார்களே: இப்படி எண்ணியது என் ஏழை நெஞ்சம். இதற்கிடையில் இந்தியர் கேட்ட கேள்வி இதோ:

"உங்கள் பல்கலைக் கழகத்தில் பகுதி நேரப் படிப்புக்கு வழியுண்டா?"

"ஆம். உண்டு. பகுதி நேரப் படிப்பு மட்டுமல்ல; தூரப் படிப்பிற்கும் இடம் உண்டு."

"தூரப் படிப்பென்றால் என்ன?"

"பல்கலைக் கழகத்திற்கு நெடுந்தொலைவில் இருப்போரும் படிக்கும்படி அஞ்சல் மூலம் கற்பிக்கிறோம். அதற்குப் பெயர் தூரப் படிப்பு.


"மூன்று முறைகளுக்கும் பாடத் திட்டம் ஒன்றே. பட்டமும் சான்றிதழும் ஒன்றே.

"தூரப் படிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள், 'விஞ்ஞான சோதனைகள்' 'பரீட்சைகள்' ஆகியவற்றை மேற்கொள்ள, ஆண்டுக்கு ஐம்பத்திரண்டு நாட்கள் விடுமுறை பெறலாம்."

இவ்வளவு தகவல்களைத் தெரிந்துகொண்டு, துணைவேந்தரிடமும் மற்றவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டபோது,

"மீண்டும் திரும்பி வாருங்கள். அப்போது, புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள முப்பது மாடிக் கட்டடத்தில் சந்திப்போம்" என்று கூறி விடை கொடுத்தார்கள்.

புதிய கட்டடம் கட்டியாயிற்று. பிற பொருள்களையெல்லாம் பொருத்த வேண்டியதே பாக்கி, என்று தெரிந்துகொண்டு விடைபெற்றோம்.



## 14

லீப்சிக் பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பிய இந்திய தூதுக்குழு, அன்றிரவு நாடகமொன்றைக் காணச் சென்றது.

அந்நாடக அரங்கு இரண்டாம் உலகப் போருக்குப் பின் அழகாகக் கட்டப்பட்டுள்ளது. எல்லாப் பகுதிகளும் துப்புரவாக இருந்தன. நாடகம் பார்க்க வந்தோர், வந்தபோதும் சரி, இடை வேளையிலும் சரி, கலைந்து போனபோதும் சரி, நெரிசல் இல்லாமல், ஒருவர் பின் ஒருவராக, ஆனால் விரைவாக, நடந்து சென்றதை, பாராட்டாமல் இருக்க முடியாது.

நாடகத்தில் காட்சிக்குக் காட்சியுள்ள இடைவெளி சில நொடிகளே. அவ்வளவு விரைவாகக் காட்சிகள் மாறினது, டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகக் காட்சி மாற்றங்களை எனக்கு நினைவு படுத்திற்று.

அடுத்த நாள் இந்திய தூதுக்குழு 'ட்ரெஸ்டன்' என்ற நகருக்குச் செல்வதாகத் திட்டம். நான் அவர்களோடு செல்ல அவகாசம் இல்லை. எனவே 'கார்' மூலம் பெர்லினுக்குத் திரும்பினேன். நெடுஞ் சாலையின் சீரும் காரின் விரைவும் பயணத்தை அலுப்பில்லாததாக்கிற்று.

பெர்லின் தொன்மை வாய்ந்த நகரம். அது இப்போது இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பகுதி மேற்கு பெர்லின். அது 'நேச நாடுகளின்' மேற்பார்வையில் உள்ளது. மற்றொரு பகுதிக்குப் பெயர் கிழக்கு பெர்லின். அது ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தலைநகரம். இரு பெர்லினுக்கும் இடையே முழு நீளத்திற்கு மதிற் சுவர் கட்டியிருக்கிறார்கள்.

கிழக்கு பெர்லினில் குடியிருப்போர் தொகை எவ்வளவு? பத்து இலட்சத்து எண்பத்து எட்டாயிரம் மக்கள் குடியிருக்கிறார்கள். அந்நகரின் நடுவே ஸ்பிரீ ஆறு ஓடுகிறது. அது நீர் நிறைந்த ஆறு. எனவே. படகுப் பயணத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது.

'கிழக்கு பெர்லினில் குறிப்பிடத்தக்கதென்ன?' இப்படிக் கேட்டேன், ஜெர்மன் தோழரை.

"குறிப்பிடத்தக்கது பலப்பல. யார் யாருக்கு எத்துறையில் அக்கறை என்பதைப் பொறுத்திருக்கிறது.

"பல பொருட்காட்சி சாலைகள் உள்ளன. அழகிய நீண்ட வீதிகளும் குறிப்பிடத்தக்கன. ஊரின் பல பகுதிகளிலும் உள்ள பசுமை இந்நகரின் சிறப்பு. நகரப் பரப்பில், ஐந்தில் ஒரு பாகம், வனம். தொலைக்காட்சி கோபுரம், சுற்றுலாக் கவர்ச்சி.

"அதோ பாருங்கள் பழைய கட்டடங்கள். அவற்றிற்கு அருகில் வானுயர உயர்ந்துள்ள புதிய மாடிக் கட்டடங்களும் காட்சியளிக்கின்றன. எனவே பழமையும் புதுமையும் இணைந்த நகரம், கிழக்கு பெர்லின்."

"ஆம். ஆம். பழைய வல்லரசுப்போக்கு ஏற்படுத்தின சுடுமண்ணிலே புதிய சமதர்மக் குடியரசு உருவாகியுள்ளதையும் குறிப்பிடலாம்" என்று எடுத்துக் கொடுத்தேன்.

"இரண்டாவது உலகப் போருக்கு முன்பு இருந்த வரலாற்றுச் சிறப்புடைய கட்டடங்கள் பல, போரில், குண்டு வீழ்ந்து வீழ்ந்தன. அவற்றைப் புதுப்பித்து விட்டோம்.

"அதோ ஹம்போல்ட் பல்கலைக் கழகம். கட்டடத்தைப் பாருங்கள். பழைய கட்டடம்போல் தோன்றுகிறதா? பழைய கட்டடம் அல்ல. சென்ற உலகப் போரின்போது இப்பல்கலைக் கழகம் சேதமடைந்தது. புதிய ஜெர்மனி உருவான பிறகு கட்டடத்தைப் புதுப்பித்தோம். புதுப்பிக்கும்

போது பழைய சாயலே இருக்கும்படி அமைத்துள்ளார்கள்'' என்றார் ஜெர்மன் தோழர். இதையே, அன்று மாலை, எனக்கு பேட்டியளித்த துணை வேந்தர் குறிப்பிட்டுச் சொன்னார்.

''ஹம்போல்ட் பல்கலைக் கழகம் மிகப் பழையதோ'' என்று அவரைக் கேட்டேன்.

''லைப்சிக் பல்கலைக் கழகம் இதைவிடப் பழையது. ஹம்போல்ட் பல்கலைக் கழகம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது. வயதில் மூத்ததாக இல்லாவிட்டாலும், உலகப் புகழ்பெற்ற பல பேரறிஞர்கள் இங்கு பணிபுரிந்துள்ளனர். ஐன்ஸ்டீன் இங்கு பேராசிரியராக இருந்தவர்'', என்று அவர் பெருமைப்பட்டதில் வியப்பு உண்டு.

''ஹிட்லர் ஆட்சியில், இப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, பல பேராசிரியர்கள், நாஜி எதிர்ப்புக் கொள்கைக்காக, வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். நூலகத்திலிருந்த நாஜி எதிர்ப்பு நூல்கள் ஆயிரக்கணக்கில் கொளுத்தப்பட்டன. இக்குறுகிய போக்கு பழைய வரலாறு. இப்போது, மனிதாபிமான உணர்வோடு இப்பல்கலைக் கழகம் நடக்கிறது. புதிய ஜெர்மனியின் பாட்டாளி, உழவர் வீட்டுப் பையன்களும் பெண்களும் பதினாயிரக் கணக்கில் சேர்ந்து, உதவித் தொகையும் பெற்றுப் படிப்பதோடு, வெளிநாட்டு மாணவர்களுக்கும் இதன் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.''

ஐரோப்பிய நாடுகளில், 'பல்கலைக் கழகம்' என்ற பெயரில் நடக்கும் கல்வி நிலையங்களோடு, 'அகெடமி' 'கழகம்' என்ற பெயரில் நடக்கும் புகழ் பெற்ற கல்வி நிலையங்களும் உள்ளன. இரண்டிற்கும் வேறுபாடு என்னவென்று தெரிந்து கொள்ள விரும்பினேன்.

"குறிப்பிட்ட ஒரு துறை பாடத்தை மட்டும் கற்பதில், ஆய்வதில், ஈடுபட்டுள்ள கல்வி நிலையத்தை 'அகெடமி' என்று அழைப்போம். எடுத்துக்காட்டாக, பொருளாதாரத்தைப் பற்றி உயர் படிப்பில், ஆய்வில், ஈடுபட்டுள்ள கல்வி நிலையத்தை 'பொருளாதார அகெடமி' என்போம். வேறு பாடம் அங்கே நெருங்கக் கூடாதென்று பொருளல்ல. பூகோளம், அரசியல் ஆகியவை பொருளாதாரத்தைப் பாதிப்பன. எனவே தொடர்புடைய அவைகளும் பொருளாதார அகெடமியில் சேர்ந்திருக்கலாம். இதற்கு மாறாக, பல்கலைகளை, பல துறைக் கல்வியைக் கொடுப்பதற்கும் அவற்றில் ஆய்வினைத் தூண்டவும் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வி நிலையங்களை பல்கலைக்கழகம் என்று அழைப்போம். சுருக்கமாகக் கூறுவதானால், பல்கலையும் ஓரமைப்பில் வளரும்போது அது பல்கலைக் கழகம். ஒரு பெருங் கலையே ஓரமைப்பில் வளரும்போது கழகம் அல்லது அகெடமி."

இவ் விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஓர் இளம் பெண்ணும் ஓர் வாலிபனும் எங்கள் அறைக்குள் நுழைந்து, துணைவேந்தருக்கு வணக்கஞ் செலுத்தினர்.

துணைவேந்தரை நான் பேட்டி கண்டது, அவரது பங்களாவில்; அலுவலகத்திலல்ல. சனிக்கிழமைகளில் அலுவலகத்தில் யாரையும் காண முடியாது. எனவே, வீட்டில் கண்டேன்.

"என் நண்பர், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், டாக்டர் வேலுவை அறிமுகம் செய்து வைக்கிறேன்.

"இவள் என் மகள்; இவர் அவளது காதலர்" என்று துணைவேந்தர் என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

சொல்லி முடிப்பதற்குள், துணைவேந்தரின் மகள், சட்டென்று கையை நீட்டி என் கையைக் குலுக்கிவிட்டாள். அவளுடைய காதலனும் அப்படியே செய்தார்.

அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடுவதற்குள்,

"டாக்டர் வேலு, பழச்சாறுதான் குடிப்பாராம். உங்கள் இருவருக்கும் என்ன ஊற்றிக் கொடுக்கட்டும்?" என்று அவ்விருவரையும் நோக்கிக் கேட்டார்.

"நாங்களே எடுத்துக் கொள்ளுகிறோம். உங்களுக்கு வேலை கொடுக்க விரும்பவில்லை" என்று கூறிக்கொண்டே எங்கள் அருகில் அமர்ந்தனர்.

"சரி! சரி! நேற்று மாதிரி இன்று படகைக் கவிழ்க்காமல்தானே வந்தீர்கள்" என்று துணைவேந்தர் கேலியோடு கேட்டார்.

''டாக்டர் வேலு. என் காதலர் புதிய படகொன்று வாங்கினர். நேற்று, ஸ்பிரீ ஆற்றுக்காலில், அதில், வெள்ளோட்டம் போனேம். படகுத்துறை வரையில் அப்பாவும் அம்மாவும் எங்களோடு வந்தார்கள். அவர்களுக்கு தனிப் படகை ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, புதுப்படகில் நாங்கள் மட்டும் உலவப் புறப்பட்டோம். சில நிமிடங்களுக்குப் பிறகு ஓரிடத்தில் அது கவிழ்ந்து விட்டது; நன்ருக நணைந்து விட்டோம். அவ்வளவே; வேறு தீங்கு நேரிடவில்லை'' என்று சிரித்துக் கொண்டே சொன்னேள்.

''நல்ல வேளை அவர்கள் படகில் நான் செல்லவில்லை. இத்தனை பெரிய நான் நனைந்திருந்தால் என்னவாகியிருக்குமோ'' என்று கலகலப்பாகச் சிரித்தார், வாட்டசாட்டமாக இருந்த, துணைவேந்தர்.

''கன்னியே; நீ என்ன வேலையில் இருக்கிருய்? உன் காதலர் என்ன வேலை பார்க்கிருர்'' என்று கேட்டேன்.

''நான் கால்நடை மருத்துவம் படிக்கிறேன். கடைசி ஆண்டில் இருக்கிறேன். அவர் மக்கள் மருத்துவம் படிக்கிருர்.''

பெண் பேச்சை முடிப்பதற்குள்,

''நானும் கடைசி ஆண்டில் இருக்கிறேன். இருவரும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் பரிட்சை எழுதித் தேறுவோம். இருவருக்கும் வேலை எவ்விடத்

தில் என்பதும் தெரியும். பரீட்சை முடிந்ததும் திருமணம் செய்து கொள்வோம்'' என்று வாலிபர் கூறினார்.

இச் சந்திப்பு, புதிய ஜெர்மனியக் குடும்ப வாழ்க்கை பற்றிய, தெளிவை எனக்குத் தந்தது.

ஹம்போல்ட் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிப்பிரிவை விரிவுபடுத்தும் போது, தமிழைச் சேர்த்துக் கொள்ளும்படி ஆலோசனை கூறினேன். நினைவில் வைத்துக் கொள்வதாகக் கூறினார்.

துணைவேந்தர், அரிசிச் சோற்றோடு கூடிய நல்ல விருந்தை அளித்தார். அதை உண்டு, வயிறும் மனமும் நிறைய நான் தங்கியிருந்த பெர்லின் ஓட்டலுக்குத் திரும்பினேன்.

''புதிய ஜெர்மனியின் வளத்தையும் வாய்ப்பையும் மக்களின் நிறைவையும் கண்டு அறிந்து கொண்ட நிறைவோடு அடுத்த நாள், தாய்த்திரு நாட்டிற்குப் புறப்பட்டேன்.

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!

பாழ்செய்யும் உட்பூசல் அடங்குமோ!

பாரதம் செழித்து, எல்லோரும் வாழும், ஒன்றாக வாழும் காலமும் வருமோ !

இந்த சிந்தனைகளோடு சென்னை வந்து சேர்ந்தேன்.

7-DEC 1975